திருக்குறள்
வீரமாமுனிவர் உரை



கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகக் கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
வெளியீடு: 2

திருக்குறள் - வீரமாமுனிவர் உரை

பொதுப்பதிப்பாசிரியர்
டாக்டர் சூ. இன்னாசி
பேராசிரியர் - தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

பதிப்பாசிரியர்
எஸ். சௌந்தரபாண்டியன்
எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (ஆங்), பி. எட்., டிப். வ. மொ.,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னைப் பல்கலைக் கழக வளாகம்
சென்னை-5.

சென்னைப் பல்கலைக் கழகம்
1985

FR. BESCHI'S COMMENTARY TO TIRUKKURAL

General Editor
Dr. S. INNASI
Professor and Head
Chair on Tamil Christian Literature
University of Madras

Editor
S. SOUNDARAPANDIAN
Government Oriental Manuscripts Library
Madras University Campus
Madras-5

UNIVERSITY OF MADRAS
1985

திருக்குறள் - வீரமாமுனிவர் உரை

பொதுப்பதிப்பாசிரியர்
டாக்டர். சூ. இன்னாசி
பேராசிரியர் - தலைவர்
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

பதிப்பாசிரியர்
எஸ். சௌந்தரபாண்டியன்
எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (ஆங்), பி. எட்., டிப். வ. மொ.,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னைப் பல்கலைக் கழக வளாகம்
சென்னை-5

சென்னைப் பல்கலைக் கழகம்

1985

முதற் பதிப்பு : 1985

உரிமம்: சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ. 25/-

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம் சென்னை-13

முன்னுரை

திருக்குறட் சிறப்பினை உலகிற்கு அறிவித்த பெருமை கிறித்த வரையே சாரும். அவருள் தலைசான்ற வீரமாமுனிவர் முதன்முதல் மேனாட்டு மொழியாகிய இலத்தீனில் அதனை மொழி பெயர்த்தார். அவர்தம் படைப்புக்களுள் இயன்ற விடமெல்லாம் திருக்குறளை மேற்கோள் காட்டியுள்ளார். 'தொன்னூல் விளக்கம்' என்னும் இலக்கண நூலில் மட்டும் நாற்பதுக்கு மேற்பட்ட இடங்களில் எடுத்தாண்டுள்ளார். திருக்குறளின்பால் அவர் கொண்ட மதிப்புக்கு, "வேதநூல் முதல் எவ்வகை நூலும் கல்லா துணரவும் சொல்லா துணர்த்தவும் வல்லவராகி மெஞ்ஞானத் திருக்கடலாகிய ஒரு மெய்க் கடவுள் தன் திருவடி மலரே தலைக்கு அணியெனக் கொண்டேத்தி இருளிராவிடத்து விளங்கிய ஒரு மீன் போலவும் பாலைச் சுரத்து அரிதலர்ந்த பதிமம் போலவும் மெய்யாம் சுருதி விளக்காது இருளே மொய்த்த நாட்டின்கண்ணும் கடவுள் ஏற்றிய ஞானத் திருவிளக்கு எறிப்பத் தெளிந்து உணர்ந்து எங்கும் ஒரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவர்..."[1] எனவரும் தொன்னூல் விளக்க உரைப் பகுதியே சான்றாக அமையும்.

திருக்குறளுக்கு அவர் வரைந்த இலத்தீன் மொழி பெயர்ப்புக்குக் காரணம் ஐரோப்பிய நாட்டினர்க்குத் திருக்குறட் பெருமையையும் பயனையும் புலப்படுத்தும் நோக்கேயாம். அத்துடன் மட்டும் அவர் பணிநிற்கவில்லை. தமிழர்க்கும் திருக்குறட்பாக்களில் சிறந்தவற்றைத் தொகுத்தளிக்க வேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அத்தகைய தொகுப்புக்கள் இரண்டு; அவை இன்னும் அச்சில்வந்தில. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் ஓலைச் சுவடிகளாக உள்ளன. அவற்றின் நூலகப் பட்டியல் எண்கள் முறையே D 160, D 161 என்பனவாம்.

இவ்விரண்டனுள் D 161 எண்ணிட்ட சுவடிமட்டுமே இதுவரை ஆய்வாளர் பார்வைக்குக் கிட்டியுள்ளது. அச்சுவடியை, "வீரமா முனிவரின் திருவள்ளுவப் பயன்' என்னும் தலைப்பில் டாக்டர் ந. சஞ்சீவி வெளிப்படுத்தியுள்ளார்.[2] D 160 என்னும் எண்ணிட்ட சுவடி பற்றியோ அதன்கண் அடங்கியுள்ள வீரமாமுனிவரின் உரைத் திறம்பற்றியோ எக்குறிப்பும் இதுவரை அறிய வரவில்லை.

1. நூற்பா 149, உரை.
2. Annals of Oriental Research, Volume XXIII - Part II

இரண்டுசுவடிகளும் வீரமாமுனிவர்தம் திருக்குறட் தொகுப்புக் களே யாயினும் இரண்டும் ஒன்றன் இருபடிகளாகிய சுவடிகள் அல்ல; இரண்டும் வெவ்வேறாயவை. அவை இரண்டனுக்கும் உள்ள வேறுபாடுகள் பின்வருவனவாம்.

(i) D 161–ஆம் சுவடித் தொகுப்பில் அடங்கியுள்ள திருக்குறட் பாக்கள் இருநூறுமட்டுமே. D 160 ஆம் சுவடியோ இறுநூற்று எட்டுத் திருக்குறட்பாக்களைக் கொண்டது.

(ii) D 161–ஆம் சுவடியில் உள்ள குறட்பாக்களின் தொகுப்பாளர் வீரமாமுனிவரே யன்றி அவற்றின் உரையாசிரியர் அவரல்லர். பரி மேலழகரின் உரையையே அவற்றுக்கு வீரமாமுனிவர் தந்துள்ளார். ஆனால் D 160–ஆம் சுவடியில் உள்ள குறட்பாக்களின் தொகுப் பாளரும் அவற்றின் உரையாசிரியரும் வீரமாமுனிவரே யாவர்.

(iii) D 161–ஆம் சுவடியில் அறத்துப் பால் பொருட்பால் ஆகிய வற்றிலிருந்து மட்டுமே திருக்குறட்பாக்கள் தொகுக்கப்பட்டிருக் கின்றன. டி 160–ஆம் சுவடியில் காமத்துப் பாலிலிருந்தும் இரு குறட் பாக்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

(iv) D 161–ஆம் சுவடியில் அறத்துப் பாலில் உள்ள பயனில சொல்லாமை, புலால் மறுத்தல், கொல்லாமை, ஊழ், பொருட்பாலில் உள்ள ஒற்றாடல், தூது, அவையறிதல், படைச்செருக்கு ஆகிய அதிகாரங்களிலுள்ள திருக்குறட் பாக்கள் எதுவும் தேர்வு செய்யப் பெறவில்லை. D 160–ஆம் சுவடியில் அறத்துப்பால், பொருட்பாலில் அடங்கியுள்ள அனைத்து அதிகாரங்களிலிருந்தும், திருக்குறட் பாக்கள் தேர்வு செய்யப் பெற்றுள்ளன.

(v) D 161–ஆம் ஓலைச்சுவடியின் தொடக்கத்தில், ‘தயிரியனாதர் திருவள்ளுவன் குறளுக்குப் பயன் பண்ணினது’ என்னும் குறிப்புக் காணப்பட, ‘...குறள் சூ ஞ ள ங ய க்கு வீரமாமுனி பண்ணின பயன் ஒழுங்காவது ..’ என்னும் குறிப்பு D 160 ஓலைச் சுவடியின் முதற் பக்கத்தில் காணப்படுகிறது.

(vi) D 161–ஆம் சுவடியில் தலைப்பை யடுத்து பாயிரச் செய் யுட்கள் மூன்று காணப்பட D 160–ஆம் சுவடியில் தலைப்பை யடுத்துத் திருக்குறள் முழுதுக்குமான நூற்பகுப்பும் அதிகாரத் தலைப்புக்களும் சுட்டப்படுகின்றன.

(vii) D 161–ஆம் ஓலைச்சுவடியில் அதிகாரத் தலைப்பு எதுவு மின்றி தொடர்ச்சியாகத் திருக்குறட்பாக்களும்பரிமேலழகர் உரையும் இடம்பெற்றுள்ளன. D 160–ஆம் சுவடியில் அதிகாரத் தலைப்பும், திருக்குறட்பாக்களும், வீரமாமுனிவர் உரையும் இடம் பெறுகின்றன. டாக்டர் ந. சஞ்சீவி வெளியிட்டுள்ள குறிப்புக்களில் காணப்படும் தலைப்புக்கள் அவரால் திருக்குறள் நூல் நெறியினைத் தழுவி இடப் பட்டவையாகத் தோன்றுகின்றன.

(viii) D *161*–ஆம் சுவடி; தாளில் இதுகாறும் படியெடுக்கப் பெற்றிலது. D *160*–ஆம் சுவடி *1940*–இல், தாளில் படியெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரு சுவடிகளையும் ஒப்புநோக்கும் பொழுது சில உண்மைகள் தெரியவருகின்றன.

(i) பரிமேலழகர் உரையுடன் தொகுத்த இருநூறு பாக்களின் பயன் முன்னையதாகவும், தம்முரையுடன் தொகுத்த இருநூற்றெட்டுப்பாக்களின் பயன் பின்னையதாகவும் இருந்திருத்தல்கூடும். ஏனெனில் தயிரியனாதர் என்னும் பெயர் முன்னரும் வீரமாமுனிவர் என்னும் பெயர் பின்னரும் அவர்க்கு வழங்கப்பட்டது[1] பரிமேலழகர் உரையுடன் கூடிய பயன் தொகுப்பில் அமைந்துள்ள பாயிரச் சொற்கள் பின்னோரால் இயற்றப்பட்டிருத்தல் கூடும். அதன் காரணமாக அச்செய்யுட்களில், 'நாக்கடல் தழுவுவீரன்', 'தெள்ளிய வீரன்', 'மாமுனியவீரன்' போன்ற தொடர்கள் வீரமாமுனிவரைக் குறிக்கப்பயன்படுத்தப்பட்டுள்ளன.

(ii) இருநூறு குறட்பாக்களின் தொகுப்பில் உள்ளவற்றில் இருபத்து நான்கு குறள்கள் விடப்பட்டு அவற்றுக்குப்பதில் வேறு முப்பத்திரண்டு குறள்கள் சேர்க்கப்பட்டு, இருநூற்று எட்டாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

(iii) இலத்தீன் மொழி பெயர்ப்பில் காமத்துப்பாலை விட்டுவிட்டு அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டனை மட்டுமே மொழி பெயர்த்தார். அதற்கு, காமத்துப்பாலில் அடங்கிய குறட்பாக் கருத்துக்களின் மேல் கொண்ட வெறுப்பன்று; துறவியாகிய தம்மைப் போன்றோர்க்கு அது தேவையன்று என்பதால்தான். தம் தொன்னூல் விளக்கத்தில் மேற்கோள்களாகத் திருக்குறளின் காமத்துப்பாலில் அடங்கிய குறள்களை தந்துள்ளமை அவ் வெண்ணத்தைப் புலப்படுத்தும். எனவே தம்முரை கொண்ட தொகுப்பில் காமத்துப்பாலின் கண்ணுள்ள இரு குறள்களைத் தேர்ந்துள்ளார். அக்குறட்பாக்கள் இரண்டும் காமத்தின் மீதுள்ள வெறுப்பினைக் காட்டுவனவாக உள்ளமை சிந்தனைக்குரியது.

(iv) இரண்டு தொகுப்புக்களிலும் குறட்பாக்களின் வரிசைமுறை சிற்சில இடங்களில் மாறியுள்ளது. D 161–இல் ஒரே அதிகாரத்தில் உள்ள குறள்களின் வரிசை முறை இடைவெளி மிகவும் அதிகம். சான்றாக, 'கற்றதனால்' எனத் தொடங்கும் முதல் அதிகாரத்தின் **2**–ஆம் குறள், வரிசை முறையில் மூன்றாவதாகவும் அதே அதிகாரத்தின் 5–ஆம் குறள், வரிசை முறையில் நூற்றுத்தொண்ணூற்றிரண்டாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு காணப்படுவதற்கு முதலில் வரிசை முறைப்படி அதிகார வைப்பு முறையில் குறள்களைத் தேர்வு செய்து 108–ஆம் அதிகாரம் முடிய 191 குறள்களே ஆக, மீண்டும்

[1] சதுரகராதி ஆராய்ச்சி, பக்.[11]

தேவையான ஒன்பது குறட்பாக்களை தொடக்கத்திலிருந்து தேர்வு செய்ய முற்பட்டதன் பயனாக இருத்தல் கூடும். D 160–இல் வரிசை முறையில் பெரும் இடைவெளி எதுவும் இல்லை. சில குறள்கள் அவ்வவ்வதிகாரத்திற் குள்ளேயே வரிசைமுறை மாறி அமைந்துள்ளன. சான்றாகக் 'குழலினிது...' எனத் தொடங்கும் 66–ஆம் குறள் முன்னரும், 'அமிழ்தினும் ' எனத் தொடங்கும் 64–ஆம் குறள் பின்னரும் இடம் பெறுகிறது. இதற்குக் காரணம் ஏடு பெயர்த் தெழுதியோரின் கவனக் குறைவாகவும் இருத்தல் கூடும்.

(v) அதிகாரத் தலைப்புக்களையும் விளக்கங்களையும் கொண்ட D 160–இல் ஏழாம் அதிகாரத்தலைப்பு பரிமேலழகர் பாடத்தை யொட்டிப் 'புதல்வரைப் பெறுதல்' எனக் காணப்படுகிறது.

(vi) 691–ஆம் குறள் 'அகலா தணுகாது தீக்காய்வர் போல்க' எனக் காலிங்கர் பாடமே D 160–இல் ஆளப்பட்டுள்ளது.

(vii) 41–ஆம் அதிகாரத் தலைப்பாகிய 'கல்லாமை' யும் அதன் விளக்கமும் D 160–இல் காணப்பட்டிலது. படியெடுத்தோர் பிழை யாக அமைந்திருத்தல் சாலும்.

(viii) வீரமாமுனிவரின் உரையோடு கூடிய D 160 என்னும் தொகுப்பு, பாமரர்களை மனத்திருத்தியே தொகுக்கப்பட்டதாகத் தெரிகிறது. வீரமாமுனிவர் உரை நடையில் பல்வேறு நிலைகள் உண்டு என்பதை ஆய்வாளர் உணர்வர். தொன்னூல் விளக்கவுரை செழுந்தமிழால் ஆயது. வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம் போன்றன எளிய தமிழில் அமைந்துள்ளது.பரமார்த்த குரு கதையோ பாமரருக்கான கொடுந்தமிழ் (colloquial) நடை கொண்டது. பரமார்த்த குரு கதையில் பயன்படுத்தப்பட்டுள்ள கொடுந்தமிழ் நடையையே, திருக்குறள் தொகுப்பிலும் வீரமாமுனிவர் பயன்படுத்தி யுள்ளார். ஆதலின், பாமரருக்குத் திருக்குறட் கருத்துக்களைப் புலப்படுத்தவேண்டும் என்னும் தலையாய நோக்கமே வீரமாமுனி வரை இத்தொகுப்புக்கும் உரைக்கும் தூண்டியிருத்தல் வேண்டும்.

(ix) பயன் என்னும் சொல் தொகுப்பு என்னும் பொருளிலேயே இரு சுவடிகளிலும் ஆளப்பட்டுள்ளது.

இவர் தம் தொகுப்புப்பயனின் உரை, கொடுந்தமிழ்ப் போக்கிலே அமைந்திருப்பினும் எளிய உவமைகளையும் அரிய விளக்கங்களை யும் கொண்டுள்ளது. 'மேலிருந்து மேலல்லார்..' (973) என்னும் குறளுக்கு விளக்கம் தரும்பொழுது "முத்துச் சேத்திலே கிடந் தாலும் முத்துத்தானே; சேறு மூத்துலே கிடந்தாலும் சேறுதானே. அப்படிப்போல நடக்கைகளால் பெருமையுள்ளவன் கீழ்சாதியிலே பிறந்தாலும் கீழ் தலத்திலே யிருந்தாலு மேல் மனுஷந்தானே. நடக்கைகளால் கீழ்மையை யுடைத்தவர்கள் உசந்த ஸ்தலத்திலே இருந்தாலும் கீழ் மனுஷந்தானே யென்பதாகையில், உசந்த நடக்கைகளில்லாதபோதே சாதிப் பெருமையும் உத்தியோகத்

தின் பெருமையும் உதவாதென்பது கருத்து'' என உவமை காட்டி விளக்குகிறார். ''பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின்...'' (907) எனத் தொடங்கும் குறளை விளக்குகையில், ''பதங்கெட்ட பொன்னைப்பார்க்க. பதங்கெடாத வெள்ளி நல்லதுபோலே ஆண் தன்மை யில்லாத ஆண்பிள்ளையைப் பார்க்க பெண் தன்மையுள்ள பெண்பிள்ளை பெரியவளென்பது கருத்து'' என உவமை காட்டி விளக்குகிறார்.

ஒரே குறளுக்கு இரு பொருள்கள் தருமிடமும் உண்டு. புதிய உவமை மட்டுமன்றிப் பழைய உரையாசிரியர் கொள்ளாத புதிய உரையைக் கூறுமிடமும் உண்டு. சான்றாகக் ''களவினாலாகிய ஆக்கம்..'' *(283)* எனத் தொடங்கும் குறளை விளக்கும்பொழுது, மற்றவரெல்லாம் 'களவினால் வரும் செல்வம் அதிகமாவது போல் அழியும்' எனக் கூற வீரமாமுனிவர், ''தன்னுடைய எல்லை கடந்தால் போலும் அழிவைக்கொணடுவரும்'' எனப் பொருள் உரைக்கிறார். அதற்குரிய விளக்கமாக, ''வைக்கலிலே பத்தியிருக்கிற நெருப்பு வைக்க லளவிலே நில்லாமல், அதனுடைய எல்லை கடந்து கிட்டயிருக்கிற தெல்லாத்தையுஞ் சுடும். அப்படிப் போல, களவினால் வந்த பொருளழிந்து போறது மல்லாமல், அதைக் கடந்து களவில்லாமல் சம்பாதித்த பொருளுக்கு மழிவு கொண்டு விடும் என்பது ஒரு கருத்து. களவினால் வந்த பிரயோசனம், தான் கொண்டிருக்கிற பாவமென்கிற கேடல்லாமல் தனக்குப் பிரத்தியேகமா யிருக்கிற புண்ணியங்களுக்குங்கூட அழிவு கொண்டுவிடும் என்பது வேறே கருத்து'' எனக் கூறுகிறார்.

இத்தகைய சிறந்த எளிய உரையைத் தேடிக் கொணர்ந்த பெருமை, கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறையில், 'சென்னை, அரசினர் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள கிறித்தவ இலக்கியச் சுவடிகள்'' என்னும் தலைப்பில், பி. எச்டி. (PH. D.) ஆய்வு செய்து வரும் திரு. **எஸ். சௌந்தரபாண்டியனைச் சாரும்.** உரையைப் படியெடுத்ததுமன்றி, ஆய்வுரை ஒன்றனையும் பதிப்புரையாகத் தந்து, இவ்வுரையும் தொகுப்பும் வீரமாமுனிவருடையனவே என நிலைநாட்டுகிறார். அவர்தம் அரிய முயற்சிக்கும் சீரிய பணிக்கும் தமிழுலகம் கடப்பாடுடையது. இதனை வெளியிட அனுமதித்த சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கும், சிறப்பாகத் துணைவேந்தர் பெருமான் டாக்டர் பொ. பா. சுந்தரேசனார் அவர்கட்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

சென்னை-5, அன்பன்,
26-12-1985. **சூ. இன்னாசி**

பதிப்புரை

மூலச்சுவடி:

இதுவரை அச்சில் வெளிவராத வீரமாமுனிவரின் இத் திருக் குறளுரை, ஓலைச் சுவடி வடிவில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் டி. எண். 160–இன் கீழ்ப் பாதுகாக்கப்பட்டு வந்த தாகும்.

'திருக்குறள் உரையுடன் (வீரமாமுனிவர் தொகுப்பு)' என்ற மேற்சீட்டுடன் அவ்வோலைச் சுவடி அந்நூலகத்தில் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

திருக்குறளுக்கு வீரமாமுனிவர் தமிழில் தந்த உரைவளம் கொண்ட அச்சுவடி 151 ஏடுகளைக் கொண்டதாகும். முதலிரு ஏடுகள்வெற்றேடுகள்; நூல் ஒன்றிலிருந்து 14 வரை அமைந்துள்ளது. இறுதி மூன்று ஏடுகள் வெற்றேடுகள்.

இவ் வோலைச் சுடிவடியைப் பெயர்த் தெழுதிய தாட்சுவடி ஒன்று ஆர். எண். 1727–இன் கீழ் அதே நூலகத்திற் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பெயர்த்தெழுதும் பணி 1948–இல் நடைபெற்றுள்ளது.

இம் மீட்டெழுதிய படியில் ஏற்பட்டுள்ள தவறுகளை இங்குக் குறிப்பிடுவது நலம். மீட்டெழுதும் படியும் நாளடைவில் மூலச் சுவடியாகவே ஆவதால், மீட்டெழுதும்போது மிகுந்த கருத்துத் தேவைப்படுகிறது. மூலத்தில் உள்ள பாடம் எதனையும் திருத்தாமல் அங்ஙனமே எழுதுதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, மூலத்தில் 'அமச்சியல்' என்றிருந்தால், பெயர்த்தெழுதும்போது. 'அமைச்சியல்' என்று திருத்தல் கூடாது; 'பொருள்ப்பால்' என்று மூலம் இருந்தால், மீட்டெழுதும்போது 'பொருட்பால்' என்று திருத்தி எழுதல் வேண் டாதது. நூலாசிரியரின், அல்லது படி எடுத்தவரின் தனி இயல்புகள் அக் காலக்கட்டத்தின் மொழிநடை முதலியவற்றை அறிய, பிழை யெனக் கருதப்படும் அவ்வடிவங்களே நமக்கு அறிவிக்கக்கூடும்.

ஆயினும், பெயர்த் தெழுதும்போது, பத்தி பிரித்தல், நிறுத்தற் குறி இடுதல், செய்யுட்களை அடிமுறையில் எழுதல் வேண்டற் பாலதே.

தாட்சுவடியில், குறள் எண் 973-க்குப் பதிலாக, 673 என்றும், 890-க்குப் பதில் 860 என்றும், 892 இடவேண்டியதற்கு 862 என்று எழுதியும் உளர். வீரமாமுனிவர்க்கே உரிய பல சொற்களைப் பிழையெனக் கொண்டு, அவற்றைத் திருத்தியுள்ளனர்; அது பொருந்தாது.

இருப்பினும், அ. கீ. சு. நூலகத்தின் பிற மீட்டெழுதிய படிகளை ஒப்பிடுகையில் ஆர். 1727-இன் கீழ் அமைந்துள்ள இத் தாட்சுவடி மிகச் சிறந்தது என்றே கூறலாம்.

உரையாசிரியர் வீரமாமுனிவர்:

இக்கையெழுத்து நூலுக்கு மூலமான ஓலைச் சுவடியின் முதற் பக்கத்தில்,

"...குறள் சூநாகூய-க்கு வீரமாமுனி பண்ணின பயன் ஒழுங்காவது..." எனத் தெளிவாக உளது.[1] இதனால், வீரமாமுனிவரே இந்நூலான திருக்குறளுக்குரை கண்டவர் என்பது போதரும்.

இங்கு, 'பயன் ஒழுங்கு' என்பது உரையைக் குறிக்கும். கடவுள் வாழ்த்துக்கு உரை கூறுமுன், 'கடவுள் வாழ்த்துக்குப் பயன்' என்று அதே சுவடியில்[2] குறிப்பிடப்பட்டுளதால் இதனை அறியலாம்.

இத் திருக்குறள் உரை யாத்தவர் வீரமாமுனிவரே என்பதற்கு மேற்குறித்த சுவடிச் சான்றுதவிர, பிற சான்றுகளும் உள.

ஊழ் பற்றி இந்நூலில் இடம் பெற்றுள்ள பின்வரும் விளக்கம், இந்நூலாசிரியர் வீரமாமுனிவரே என்பதை ஐயம் திரிபறச் சாற்ற வல்லது.

"ஊழ், அதாவது பழைய காலத்தில் செய்த பாவ புண்ணியங்கள், ஒருத்த னினையாத சமையத்திலே பலன் கொடுக்க வருகிறதுக்கு யேதுவான **தேவசித்தம்**[3]. இவ்விளக்கத்தில், 'தேவசித்தம்' என்ற தொடர் வீரமாமுனிவருக்கே உரியது எனலாம். மேலும், 'வகுத்தான் வகுத்த வகையல்லால்...' என்ற குறளுக்கு விளக்கம் கூறும் போது,

"மனுஷர் பிரயாசைப்பட்டு வேண்டியது சம்பாதிச்சாலும் தான் முன் செய்த பாவங்களுக்குப் பலனாக அதை யனுபவிக்கிறதுக்குத் **தேவசித்த** மில்லாதே போனால், அதை யனுபவிக்கப் போகிறதில்லை என்பது கருத்து."[4] என்கிறார். கிறித்தவக் கோட்பாடு பொதுளிய இவ்விளக்கம் ஒன்றே இந் நூலாசிரியர் வீரமாமுனிவர் என்பதை விளக்கி நிற்கிறது.

மேலும், திருக்குறளின் முதலிரு பால்களுக்கு இலத்தீனில் உரை எழுதிய வீரமாமுனிவர், ஊழ் பற்றி விளக்கிய முறையும் இந்நூலில் மேற்கண்டவாறு தரும் முறையும் ஒன்றாகவே உளது.

"இந்த அதிகாரத்தில், மேற்கூறிய ஊழ் என்ற சொல்லை, **தேவகட்டளை** என்று விளக்குவதே மற்ற விளக்கங்களைவிடச் சிறந்தது. இதுவே மற்றப் பொருள்களைவிட அதற்குப் பொருத்த மான பொருளாகும். இவ்வுண்மை இவ்வதிகாரம் முழுவதும் அடங்கி யுள்ள கருத்துகளின் தொடர்ச்சியினாலும், குறிப்பாக,

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்ற குறளினாலும் தெளிவாகும். இந்தக் குறளில், முன்னால் செய்த நூல்களை ஆசிரியர் கனவில்கூட நினைக்கவில்லை. ஆனால் யாரும் மீறலாகாத **தேவ கட்டளையையே** நினைக் கிறார்."[5]

மேற்கண்ட இலத்தீன் மொழி பெயர்ப்பில் ஊழ்வினையைத் தேவகட்டளை எனக் கொண்டதுபோலவே, இந்நூலிலும் தேவ சித்தம் எனக் கொள்கிறார் என்பது குறிக்கத்தக்கதாகும்.

"தென்புலத்தார்...தலை" (குறள் 43) என்ற குறளுக்கு உரையெ ழுதுகையில், "செத்துப்போன முன்னோர்களுடைய ஆற்றுமத்தைக் குறித்து ஒரு சந்தியாயிருந்து பிட்சைகளுங் கொடுத்து(த்) தெய்வத் துக்கு வழிபாடுகளைச் செய்து பூசைகளும் பண்ணிவித்து(த்) தன் வீட்டுக்குச் சேர்ந்தவர்களுக்கு..." என்கிறார் முனிவர்.[6]

இங்கு, 'ஒரு சந்தியிருத்தல்' என்ற கிறித்தவர்க்கே உரிய தொடர், இதனாசிரியர் ஒரு கிறித்தவர் என்று சாற்றப் போதுமான சான்றாம்.

புலால் மறுத்தலை வீரமாமுனிவர் விளக்கிய பாங்கு, இந் நூலாசான் கிறித்தவரே என்பதை அறிவிக்கும்; கிறித்தவ மதத்திற்குப் புலால் மறுப்பு உடன்பாடன்மை நினையைத்தகும்.

'கொல்லான் புலாலை...' எனும் குறளுரையில், பரிமேலழகர், காளிங்கர், மணக்குடவர் மூவரும் கொல்லுதல், புலால் மறுத்தல் இரண்டையும் வேறுவேறு செயல்களாகக் கருதி, இரண்டை யும் செய்யாதவனை உலகம் தொழும் என்று விளக்கினார். வீரமாமுனிவரோ, கிறித்தவக் கோட்பாடு பிழைக்காவண்ணம் மிக்க திறத்துடன், "...உயிருள்ள வஸ்துக்களுக்கு உயிர்ச்சேதம் வராத படிக்கு அவைகளுடைய மாங்கிஷத்துக்கு ஆசைப்படாமல் அதைத் தவிர்க்கிறவனை லோகத்தில் கொல்லத்தக்க உயிருள்ள வஸ்துக்க ளெல்லாம் தங்களுக்குச் சார்வாயிருந்து தங்களுடம்பிலே உயிரை அவன் நிறுத்தினபடியினால் நன்றியறிந்து வணங்குமென்பது கருத்து" என்றார்.[7]

இவை தவிர, இந் நூலின் கண் அமைந்துள்ள திருக்குறளுரைப் பகுதியின் நடை, உரையாசான் வீரமாமுனிவரே என்பதைத் தெளி

வாகக் காட்டவல்லன. அச்சில் வெளிவந்துள்ள வீரமாமுனிவரின் **பரமார்த்தகுரு கதை**, **வேதவிளக்கம்** முதலிய உரைநடைப் பகுதி களுடன் கீழ்வரும் திருக்குறள் உரைப்பகுதிகளை ஒப்பிடுவார்க்கு வீரமாமுனிவரே இதன் ஆசிரியர் என்பது புலனாம்.

(i) "... அதின் நன்மை போலே நன்மையில்லை, இதின் கேடு போலே கேடில்லையென்பது கருத்து."[8]

அதன், இதன் என்பதற்குப் பதிலாக, அதின், இதின் என்று வரும் ஆட்சிகள் ஒரு கிறித்தவப் பெரியார்க்கே உரியது; நொபிலி யிடத்தும், கி. பி. 18-ஆம் நூற்றாண்டுக் கிறித்தவப் பெரியார்களிடத் தும் காணப்பட்ட சிறப்பான நடை இது என்பது ஈண்டுக் குறிக்கத் தக்கதாகும்.

(ii) "...புண்ணியஞ் செய்ய வேண்டியது, அதேனென்றால் சாகிற காலத்திலே அந்தப் புண்ணிய முயிருக்கு..."[9]

'அதேனென்றால்', என்ற ஆட்சி நொபிலியிடத்திருந்து வீரமா முனிவர் பெற்றதாகலாம். நொபிலியின் ஆத்தும நிருணயம், மந்திர வியாக்கியானம் முதலிய உரைநடை நூற்கள் இதனை மெய்ப் பிக்கும்.

(iii) "சிநேகிதன் கஷ்திப்படுகிறதைக் கண்டு பட்சமுள்ளவ னுக்கு இரக்கத்தினா லழாம லிருக்கக் கூடாது"[10]

துன்பம் எனும் பொருளில் 'கஷ்தி' என்ற சொல்லை பெசுகி அவருடைய பிற நூற்களில் ஆள்வார்.

(iv) "பின்னுக்கு அவசியமாய்க் கேடு வருத்திவிக்கிறதி னால்..."[11]

அயல் நாட்டவரான பெசுகியின் சொல்லாட்சி, 'வருத்துகிற தினால்', தமிழன் மரபாட்சியினின்றும் சிறிது வேறுபட்டுள்ளமை காணலாம். இதே பாங்கில், 'இழுக்கு' என்பதற்குப் பதிலாக, 'இழுப்பு' என்று ஆள்வதும்[12] அவரது சிறப்பாட்சியாம்.

(v) "சிறியதானாலும் நல்ல புத்திகளைக் கேழ்க்க வேண் டியது...அந்தக் கேழ்வி அவ்வளவா யிருந்தாலும்.."[13]

இவ்வாறு, கேள்வியறிவைக் குறிப்பிடும்போது, கேழ்வி என்றே ஆளுகிறார் வீரமாமுனிவர். நொபிலியே இதிலும் இவருக்கு வழிகாட்டி ஆகலாம். கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிராமரிணடையே வழக்குச்சொல்லாயிருந்த அச் சொல்லை நொபிலி ஆண்டது, பல தரத்தோர்க்கும் விளங்கும் நோக்கத்துடனாக இருக்கலாம். அதே போக்கில் சென்ற வீரமாமுனிவரும் அச்சொல்லை ஆண்டதில் வியப் பில்லை.

(vi) "கண்ணுக்கு மோச மிருந்துதானால் **செவ்வே** நடக்கப் படாது"[14]

இதேபோல, 'செவ்வை படாது' என்றும் இந்நூலில் எழுதுகிறார் முனிவர்.

செம்மை என்ற பொருளில் இச் சொல்லை இவர் ஆள்வதனை இவரின் நிருபங்களில் காணலாம்.

(vii) யாழ் எனக் குறிக்க வேண்டிய இடங்களில் 'இயாழ்' என்றே இந்நூலுள் குறிக்கப்படுகிறது[15].

இவ்வாறு **மொழிமுதல் குற்றியலிகரமாகச்** சில சொற்களைக் கருதும் போக்கு வீரமாமுனிவர்க்கே உரியது[16].

(viii) 'பலம்' என்ற சொல்லைப் 'பெலம்' என்று வீரமாமுனிவர் பல நூற்களில் குறிக்கக் காணலாம். இந்நூலிலும் அங்ஙனம் குறிக்கிறார்.

"வாள் **பெலத்ததா** யிருந்தாலும் அதைப் பிடித்தவனுடைய பயத்தினாலே...[17]."

(ix) "பீலிபெய் சாகாடும்..." எனும் குறளுக்கு உரையாக, வண்டி என்ற சொல்லுக்கு ஈடாக, **வண்டில்** என்றே குறிக்கப்படுகிறது[18].

வண்டில் என்ற சொல்லாட்சி வீரமாமுனிவருடையதே என்பதை இவரின் **கித்தேரியம்மாள் அம்மானை** உணர்த்தும்[19].

இந்நூல் வீரமாமுனிவர் இயற்றியதே என்பதற்கு இவ்வளவு வலுவான சான்றுகள் இருப்ப, இவ் வுரையை **மல்லர்** உரை எனக் குறித்துள்ளமை எவ்வாறு நேர்ந்த பிழை என்பது தெரியவில்லை. வீரமாமுனிவர் இந்நூலில் தந்துள்ள உரைகள் சிலவற்றை மல்லர் உரை என ஆண்டுள்ளார் தண்டபாணி தேசிகரவர்கள்[20].

> "தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
> பரிதி பரிமே லழகர் — திருமலையர்
> மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
> கெல்லையுரை செய்தார் இவர்"

என்ற தனிப்பாடலால், மல்லர், குறளுக்கு உரைகண்ட பதின்மருள் ஒருவர் என்பது தெளிவாகும். அத் தகு மல்லரின் பழைய நடையாக இந்நூலின் 18-ஆம் நூற்றாண்டு நடை இருத்தல் சாலாது என்பது வெள்ளிடை மலை.

இவ் வுரை மல்லர் உரை அன்று என்பதற்கு வேறொரு வரலாற்றுச் சான்றும் உளது.

குறிப்புகள்

1. அ. கீ சு. நூலகச் சுவடி எண். டி. 160. ப. 1.

2. ஷை, ப. 9.

3. ஷை, ப. 60 a.

4. ஷை, ப. 60 b.

5. வீரமாமுனிவர் அருளிய இலத்தீன் திருக்குறள் மொழி பெயர்ப்பு, பதி. வி. மி. ஞானப்பிரகாசம் (பாளையங்கோட்டை 1977), பக். 30-32.

6. அ. கீ. சு. நூலகச் சுவடி எண். டி. 160, ப. 15 a.

7. ஷை, ப. 42 b.

8. ஷை, ப, 11b.

9. ஷை, ப. 12b.

10. ஷை, ப. 20a.

11. ஷை, ப. 25b.

12. ஷை, ப. 53a.

13. ஷை, ப. 68a.

14. ஷை, ப. 73a.

15. ஷை, ப. 89b.

16. சூ. இன்னாசி, இலக்கணச் சிந்தனைகள், (சென்னை, 1984), ப. 40.

17. அ. கீ. சு. நூலகச் சுவடி எண். D. 160. ப. 108 b

18. ஷை, ப. 77a.

19. கித்தேரியம்மாள் அம்மானை, பதி. ஆர். ஞானப்பிரகாசம் சுவாமிகள் (மதுரை 1947), கா. 10., தொ. 97.

20. ச. தண்டபாணிதேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம் (பாயிரவியல்), மதுரை காமராசர் பல்கலைக் கழகம் (மதுரை, 1931).

21. அ. கீ. சு. நூலகச் சுவடி எண். D. 160. ப. 80 b.

21a. அ.கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு (சென்னை, 1960), ப. 12.

22. L Besse, Fr. Beschi, His Times & His writings (Trichy, 1918), p. 232.

23. G. U. Pope, The Sacred Kurral (New Delhi 1980), p. vii.

24. ஞானப்பிரகாசம், வி. மி. (மொழிபெயர்ப்பு) வீரமாமுனிவர் தமிழ் ஆய்வுக் கழகம், 1977.

25. அ.கீ.சு. நூலகச் சுவடி எண் D. 160. ப. 1a.

26. W. Taylor, Catalogue of Mackenzie MSS., (Madras, 1857-62), Vol. III, Part II, p. 780.

27. அ.கீ.சு. நூலகச் சுவடி எண். டி. 160. ப. 66.

28. ஷை, ப. 68a.

29. ஷை, ப. 135 b.

திருவள்ளுவர் குறள்

முதல் பாயிரம்

கடவுள் வாழ்த்து அதிகாரம்	௩
பாயிரம் அதிகாரம்	௨
அறப்பால் வகுப்பு உக்கு அதிகாரம்	௩௩
பொருள்பால் வகுப்பு சக்கு அதிகாரம்	௭௰
காமப்பால் வகுப்பு உக்கு அதிகாரம்	௨௰௫

ஆக, கடவுள் வாழ்த்துப் பாயிர முள்பட அதிகாரம் ௱௩௰௩க்கு, குறள் ௲௩௱௩௰க்கு வீரமாமுனி பண்ணின பயன் ஒழுங்காவது,

கடவுள் வாழ்த்துதலையும், வான்சிறப்பையும், நீத்தார்ப் பெருமையையும் வாழ்த்தினதுக்குப் பிறகு, அறம் பொரு ளின்ப மென்கிற சாத்திரத்தைக் குறித்துப் பாடுகிறார். அதாவது, அறப் பாலென்றும், பொருள் பாலென்றும், காமப்பாலென்றும் பெயரிட்டு, மூன்று வகுப்பாகப் பிரித்து, ஒன்றொன்றாய்த் தனித்தனியே விளக்கிக்கொண்டு வருகிறார்.

அறப்பாலாவது, இல்லறம், துறவறம். இந்த இரண்டுக்கும் பொதுப்பாயிரமாக அறன்வலியுறுத்தல். இல்லற மென்கிற பிரிவுக்கு அதிகாரம் இருபது. அதாவது,

1. இல்வாழ்க்கை
2. வாழ்க்கைத் துணை நலம்
3. புதல்வரைப் பெறுதல்
4. அன்புடைமை
5. விருந்தோம்பல்
6. இனியவை கூறல்
7. செய்நன்றியறிதல்
8. நடுவு நிலைமை
9. அடக்க முடைமை
10. ஒழுக்க முடைமை
11. பிறனில் விழையாமை
12. பொறை யுடைமை
13. அழுக்காறாமை
14. வெஃகாமை

15. புறங் கூறாமை
16. பயனில்லாச் சொல்லாமை
17. தீவினையச்சம்
18. ஒப்புரவறிதல்
19. ஈகை
20. புகழ்

ஆக, அதிகாரம் உ௰.

இரண்டாவது, துறவற மென்கிற பிறிவுக்கு அதிகாரம் பதிமூணு. அதாவது,

1. அருளுடைமை
2. புலான் மறுத்தல்
3. தவம்
4. கூடாவொழுக்கம்
5. கள்ளாமை
6. வாய்மை
7. வெகுளாமை
8. இன்னா செய்யாமை
9. கொல்லாமை
10. நிலையாமை
11. துறவு
12. மெய்யுணர்தல்
13. அவாவறுத்தல்

ஆக, பதிமூணு.

அறப்பால் வகுப்பு ரெண்டுக்கு அதிகாரம் ௩௰௩. பாயிர முள்பட ௩௰௪.

பொருள் பாலுக்குப் பாயிரமாக ஒரு அதிகாரமுண்டு. அதாவது ஊழ்.

அப்பால், நாலு பிறிவாகப் பிறிந்திருக்கிறது. அதாவது,

1. அரசியல்
2. அங்கவியல்
3. அமச்சியல்
4. ஒழிவியல் ஆகும்.

அரசியலுக்கு இருபத்தஞ்சு அதிகாரமுண்டு. அதாவது,

1. இறைமாட்சி
2. கல்வி
3. கல்லாமை
4. கேழ்வி
5. அறிவுடைமை
6. குற்றங்கடிதல்

7. பெரியாரைத் துணைக் கொளல்
8. சிற்றினஞ் சேராமை
9. தெரிந்து செயல்வகை
10. வலியறிதல்
11. காலமறிதல்
12. இடனறிதல்
13. தெரிந்து தெளிதல்
14. தெரிந்து வினையாடல்
15. சுற்றந்தழால்
16. பொச்சாவாமை
17. செங்கோன்மை
18. கொடுங்கோன்மை
19. வெறுவந்த செய்யாமை
20. கண்ணோட்டம்
21. ஒற்றாடல்
22. ஊக்கமுடைமை
23. மடியின்மை
24. ஆள்வினை யுடைமை
25. இடுக்கண் விழையாமை

ஆக, ௨௰௫.

இரண்டாவது, அமச்சியலுக்கு அதிகாரம் பத்துண்டு. அதாவது,

1. அமைச்சு
2. சொல்வன்மை
3. வினைத் தூய்மை
4. வினைத் திட்பம்
5. வினை செயல்வகை
6. தூது
7. மன்னரைச் சேர்ந்தொழுகல்
8. குறிப்பறிதல்
9. அவையறிதல்
10. அவையஞ்சாமை

ஆக, ௰.

மூன்றாவது. அங்கவியலுக்கு இருபத்திரெண்டு அதிகாரமுண்டு. அதாவது,

1. நாடு
2. அரண்
3. பொருள் செயல்வகை
4. படை மாட்சி
5. படைச் செருக்கு
6. நட்பு
7. நட்பாராய்தல்

8. பழமை
9. தீ நட்பு
10. கூடா நட்பு
11. பேதைமை
12. புல்லறிவாண்மை
13. இகல்
14. பகை மாட்சி
15. பகைத் திறந் தெரிதல்
16. உட்பகை
17. பெரியாரைப் பிழையாமை
18. பெண்வழி சேரல்
19. வரைவின் மகளிர்
20. கள்ளுண்ணாமை
21. சூது
22. மருந்து

ஆக. அதிகாரம் உ௰உ.

நாலாவது, ஒழிவியலுக்கு அதிகாரம் பதிமூணுண்டு.

1. குடிமை
2. மானம்
3. பெருமை
4. சான்றாண்மை
5. பண்புடைமை
6. நன்றியில்ச் செல்வம்
7. நாணுடைமை
8. குடி செயல் வகை
9. உழவு
10. நல்குரவு
11. இரவு
12. இரவச்சம்
13. கயமை

ஆக, அதிகாரம் ௰ங.

ஆகப் பொருள்ப்பால் வகுப்பு நாலுக்கு அதிகாரம் எழுவது. பாயிரம் ஒன்று. ஆக, அதிகாரம் எ௰க.

காமப்பாலுக்கு இரண்டு பிறிவுண்டு. அதாவது, களவு, கற்பு.

களவு யென்கிற பிறிவுக்கு அதிகாரம் யேழுண்டு. அதாவது.

1. தகையணங் குறுத்தல்
2. குறிப்பறிதல்
3. புணர்ச்சியின் மகிழ்தல்
4. நலம் புனைந் துரைத்தல்
5. காதல் சிறப்புரைத்தல்

6. அலரறிவுறுத்தல்
7. நாணுத்துறவுரைத்தல்

ஆக, அதிகாரம் எ.

கற்புக் கதிகாரம் பதினெட்டுண்டு. அதாவது,

1. பிரிவாற்றாமை
2. படர் மெலிந்திரங்கல்
3. கண் விதுப்பழிதல்
4. பசப்புறு பருவரல்
5. தனிப்படர் மிகுதி
6. நினைந்தவர் புலம்பல்
7. கனவு நிலை யுரைத்தல்
8. பொழுது கண்டிரங்கல்
9. உறுப்பு நலனழிதல்
10. நெஞ்சொடு கிளத்தல்
11. நிறையழிதல்
12. அவர்வயின் விதும்பல்
13. குறிப்பறிவுறுத்தல்
14. புணர்ச்சி விதும்பல்
15. நெஞ்சொடு புலத்தல்
16. புலவி
17. புலவி நுணுக்கம்
18. ஊடலுவகை

ஆக, அதிகாரம் பதினெட்டு.

ஆக, காமப்பால் வகுப்பு உக்கு அதிகாரம் உ௫.

1. கடவுள் வாழ்த்துக்குப் பயன்

அதிகாரக் கருத்து: அதாவது, கடவுளுடைய தோத்திரமுமாம்; கடவுளை வணங்குதலுமாம்.

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
 பகவன் முதற்றே யுலகு

(குறள் எண். 1)

பொருள்: என்றது, எல்லா யெழுத்துக்களுக்கும் அ யென்கிற எழுத்துத் தலையா யிருக்கிறது. சறுவ லோகத்துக்குங் கடவுளே தலை என்றவாறு.

விளக்கம்: அ என்கிற எழுத்து வேறே எழுத்துக்களுடைய உதவி யில்லாம லுச்சரிக்கப்படும். அன்றியே அதை யுச்சரிக்கிற துக் கவகாச மில்லாதே போனால், வேறொரு எழுத்தினாலு முச்சரிக்கக் கூடாது. அப்படிப் போலக் கடவுளானது வேறொருத்தனுடைய உதவியினா லுண்டாக்காமல்த்தானா யிருக்கிறதுந் தவிர, அவரில்லாதே போனால் லோகத்திலே ஒன்றானாலு மூண்டாயிருக்கமாட்டா தென்கிறதினால், அ என்கிற எழுத்தைக் கடவுளுக்கு உவமையாக்கி, அது சகல எழுத்துக்களுக்கு மாதியா யிருக்கிற தென்கிற லக்ஷணத்தைத் தோத்திரமாகச் சொன்னது மல்லாமல் அவரை வணங்கிறதுக்கு ஞாயங் காண்பித்தவாறு.

சொற்பொருள்: அகரமாவது, அ வென்கிற யெழுத்து. முதல— முதற்று; முதலை யுடைத்தது. ஆதி பகவன் — கடவுள். உலகு – லோகம்.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
 னற்றா டொழாஅ ரெனின்

(2)

பொருள்: என்றது, சகல சாத்திரங்களும் படித்திருந்தாலுஞ் சுத்தமான அறிவுள்ள கடவுளுடைய நல்ல பாதத்தை வணங்காதே போனால், அக் கல்வியினா லாகத்தக்க நன்மை யென்ன என்றவாறு.

விளக்கம்: ஒருவன் எத்தனை சாத்திரியா யிருந்தாலுமொரு மயக்கமு மத்த தெளிவான அறிவுள்ள கடவுளை வணங்காதே

போனா லவருடைய உதவி யாகாதபடியினால் தான் படித்த சாத்திரங்களுக் குண்டான மயக்கங்கள் ளொருக்காலுந் தெளியமாட்டாது. தெளியாதே போதே மோட்சத்தை யடையமாட்டாமல் நிற்பாக்கியனாய்ப் போவா னென்கிறதினால்க் கடவுள் பொய்யத்த சுத்தமான அறிவை யுடைத்ததென்கிற லட்சணைத்தை தோத்திரமாகச் சொன்னது மன்றியே அவரை வணங்கிறதுக்கு ரெண்டாம் ஞாயம் காண்பித்தவாறு.

சொற்பொருள்: கற்றல்-படித்தல். ஆய-ஆகிற. பயன்-பிறையோசனம். என்-என்ன. கொல்-அசைச் சொல். வால்-சுத்தம். அறிவன்-அறிவுடைத்தவன். நற்றாள்-நல்ல நாள். தாள்-பாதம். தாடொழாஅரெனின்-தாள் தொழாரெனின்-தொழாதே போனால்.

3. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தாக் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது

(7)

பொருள்: என்றது, தனக்கொன்றாலுஞ் சரியாயிராமல் எல்லாத்துக்கும் பெரியவரா யிருக்கிற கடவுளுடைய பாதத்தை அடுத்தா லொழிய மனத்தின் கவலை எளிசாய் நீங்கமாட்டா தென்றவாறு.

விளக்கம்: கடவுளுடைய பிலனுக்குச் சரியான பில னெங்கு மில்லாத படியினா லவருடைய **சித்தத்தின்படியே** வருகிற சகல துன்பங்களு மதுகளால் மனம் படுகிற கதியும் நீக்கிறதுக்கு அவருடைய மேன்பிலன் வேணுமே யல்லாமல் மத்தப்படி எளிசாய் நீக்கக் கூடாது என்பது கருதிக் கடவுள் நிகரில்லாதது வென்கிற லட்சணத்தை தோத்திரமாகச் சொல்லி அவரை வணங்குகிறதுக்கு **மூன்றாம்** ஞாயங் காண்பித்தவாறு.

சொற்பொருள்: தாள்-பதம். அல்லால்-அல்லாமல். மாற்றல்-நீக்குதல்.

4. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

(5)

பொருள்: என்றது, கடவுளுக் கடுத்த காரியங்களிலே மெய்யறிகிறதினா லாகிற புகழை விரும்புகிறவனிடத்திலே இச்சைகள் பண்ணிவிக்கிற மயக்கத்தினால் வருகிற நல்வினை தீவினை யென்கிற கலப்புண்டாகா தென்றவாறு.

விளக்கம்: ஒருவன் மெய்யான கடவுளை யறிந்து அவரோதின படிக்கு நடக்குறே னென்கிற புகழை விரும்பினாலவருக்குப் பொருந்தாத யிச்சைகளை வெறுப்பான். ஆனபடியினாலே யிச்சைகள்

முகாந்திரமாக வருகிற தீவினைக ளவனிடத்திலே யுண்டாகாமல் நல்வினை மாத்திர முண்டாகு மென்பதாகையில் மத்தவர்களிடத்திலே புண்ணியமும் பாவமுங் கலந்து நிற்குமே, அவனிடத்திலே யிப்படிப்பட்ட கலப்புக்கு யிடமில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: சேர்–சேரும். இருவினை–நல்வினை, தீவினை. சேரா–சேராது. இறைவன்–கடவுள். பொருள்–மெய்மை. புரிதல்–விரும்புதல். மாட்டு–இடம்.

5. கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத் தான்
றாளை வணங்காத் தலை (9)

பொருள்: என்றது, எட்டுக் குணமுள்ள கடவுளின் பாதத்தை வணங்காத் தலை குணங்கெட்ட பொறிகளைப் பார்க்க குணங் கெட்ட தென்றவாறு.

விளக்கம்: மெய், வாய், மூக்குச், செவி, கண் ணென்கிற அய்ம் பொறிகளுடைய குணங் கெட்டுப் போச்சுதானால் கண்டிப்பு, ருசி, வாசனை, சத்தம், பிரகாசமென்கிற ஐம்புலமுந் தெரியாது. ஆனால், ஐம்புலங்களைத் தெரியாததினாலாகிற ஊனங்க ளுடம்பில் மாத்திரம் நிக்கும்; கடவுளை வணங்காதே போனால் ஆற்றுமத்துக்குச் சேதம் வருமென்கிறதினால்க் கண் தெரியாமை, காது கேளாமை, இது முதலான ஊனங்களைப் பார்க்க கடவுளை வணங்காமை மிஞ்சின கேடு என்பது கருத்து.

கடவுளி னெட்டு குணமாவது:—

1. முதலாவது, வரம்பில் ஞானம். அதாவது, எல்லையில்லாத ஞானம்.

2. இரண்டாவது, காட்சி. அதாவது, அறிவு.

3. மூன்றாவது, இன்பம். அதாவது, செல்வம்.

4. நாலாவது, வீரியம். அதாவது, பெலம்.

5. அஞ்சாவது, நாமவின்மை. அதாவது, பேரில்லாமை. அனேகம் பெயருக்குள்ளே வித்தியாசம் அறிகிறதுக்கறியப் பெயரிட வேண்டியதே யல்லாமல் நிகரில்லாதவனுக்குப் பெயரிடத் தேவையில்லை யென்கிறதினால், கடவு ளொன்றா யிருக்கிறாரென்கிறதுக்கு நாமவின்மை என்றது.

6. ஆறாவது, கோத்திரவின்மை. அதாவது, கோத்திரமில்லாமை. வேறொருத்தனுடைய வினையினால் பிறந்தவனுக்கு மாத்திரம் முன்னோர்களால் கோத்திரமுண்டு. ஆகையால்க் கடவுள் முன்னோர்க

ரில்லாமல்த் தானா யிருக்கிறா ரென்கிறதுக்குக் கோத்திரவின்மை என்றது.

7. ஏழாவது, ஆயுவின்மை. அதாவது, வயசு இல்லாமை. துவக்க முள்ளவனுக்கு மாத்திரம் இத்தனை வயசுண்டென்று சொல்லலா மாகையால்க் கடவுள் துவக்க மில்லாமல் அனாதியா யிருக்கிறா ரென்கிறதுக்கு ஆயுவின்மை என்றது.

8. எட்டாவது, தீவினையின்மை. அதாவது, பாவமில்லாமை.

சொற்பொருள்: கோள் — குணம். இல் — இல்லாதது. பொறி — ஐம்பொறி. எண்குணத்தான் — கடவுள். தாள்—பாதம். வணங்கா— வணங்காத.

2. வான் சிறப்பு

அதிகாரக்கருத்து: அஃதாவது, வானத்தில் நின்று பெய்கிற மழை யினுடைய மிகுதியான வன்மை.

6. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை

(12)

பொருள்: என்றது, உண்கிறவர்களுக்கு மிகுதியான உணவு களை யுண்டாக்கித், தானும் உண்கிறவர்களுக்கு ஒரு உணவா யிருந்து பேய்கிறது மழை யென்றவாறு.

விளக்கம்: உண்கப்படுந் தானியங்களுங், கனிகளும், நாலு விதமான பதார்த்தங்களு மழையினாலே உண்டாகிறதினாலேயுங் குடிக்கப்படுந் தண்ணீர் மழைத்தண்ணீரா யிருக்கிறபடியினாலேயும் மழையானது உயிர்களுடைய பசியுந் தாகத்தையுந் தீர்க்கப் பெய் கிறது என்பது கருத்து.

சொற்பொருள்: துப்பார்–உண்கிறவர்கள். துப்பு–மிகுதி. ஆய– ஆன. துப்பு–உணவு. தூஉம்–பெய்யும்.

3 நீத்தார் பெருமை

அதிகாரக் கருத்து: அதாவது, மூவாசை நீக்கின முனிவருடைய பெருமை.

7. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

(27)

பொருள்: என்றது, ருசி, பிரகாசம், கண்டிப்பு, சத்தம், வாசினை என்கிற ஐம்புலமும், அதுக்கடுத்த தத்துவங்களின் வகுப்பையு மாராய்ந்து அறியவல்லவனிடத்திலே இருக்கிறது லோக மென்ற வாறு.

விளக்கம்: ஐம்புலத்துக்கடுத்த தத்துவங்களாவது, பூமி, நீர், தீ, ஆகாயம், காத்தென்கிற ஐம்பூதமும் ஐந்து ஞான இந்திரியங்களும், ஐந்து கன்மேந்திரியங்களு மிதுமுதலான தத்துவங்கள் லோகத்திலே உண்டானதெல்லாம் ஐம்புலத்துக் குள்ளேயு மதுக்கடுத்த தத்து வங்களுக் குள்ளேயு மடங்கி யிருக்கிறதினால், இதுகளைக் கண்டு பிடித்தவ னுண்டானால் லோகமெல்லா மவனுடைய அறிவின் வசமாச்சுதென்பது கருத்து.

சொற்பொருள்; சுவை–ருசி. ஒளி–பிரகாசம். ஊறு–கண்டிப்பு. ஓசை–சத்தம். நாற்றம்–வாசினை. தெரிதல்–அறிதல். கட்டு–இட முடைத்தது. உலகு–லோகம்.

8. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது
(29)

பொருள்: என்றது, எல்லா ஞான மென்கிற மலைமேலேறி, அதிலே விடாமல் நிற்கிறவர்கள் கோபித்திடுகிற சாபத்துக்கு ஒரு சணமாகிலும் தடைபண்ணுதலரிது என்றவாறு.

விளக்கம்: மலையுச்சியில் நிற்கிறவன் மத்தெல்லாருக்கு முசந்து நிற்கிறாப் போலே சகல நற்குணங்களால் நிறைந்து எல்லாருக்கு முசந்து நிற்கிற ஞானிகளா லொருவன் சபிக்கப்பட்டதே யுண்டானா லுடனே சாபத்தினுடைய பொல்லாப்பு அனுபவிப்பான் என்பது கருத்து.

சொற்பொருள்: குன்று–மலை. வெகுளி–கோபம். கணம்–சணம். காத்தல்–விலக்கல்.

4. அறன் வலியுறுத்தல்

அதிகாரக் கருத்து: அதாவது, புண்ணியத்தின் வல்லமையினா லுண்டாகிற நன்மை.

9. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு
(32)

பொருள்: புண்ணியத்தைச் செய்கிறதினால் வருகிற நன்மைக்கு மிஞ்சின நன்மை யில்லை. அதை மறந்து செய்யாததினால் வருகிற பொல்லாப்புக்கு மிஞ்சின பொல்லாப்பில்லை என்றவாறு.

விளக்கம்: தர்மம் வருத்திவிக்கிற நன்மை, மோக்கிஷம். அதர்மம் வருத்திவிக்கிற கேடு நரகமாகையிலதின் நன்மைபோலே நன்மை யில்லை; இதின் கேடு போலே கேடில்லை யென்பது கருத்து.

சொற்பொருள்: [சுவடி எழுதியவர் இக் குறளுக்குரிய அருஞ் பொற் பொருளை எழுதாது விட்டார் போலும். ஓலையில் காணப் படவில்லை]

10. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுதல் நீர்மை பிற

(34)

பொருள்: என்றது, மனதிலே பாவத்துக் கிடங்குடாதவனா யிருக்கிறது அவ்வளவு மெய்யான புண்ணியமா யிருக்கு மதுக்குப் பிறத்திப்பட்டதெல்லா மாரபாரத்தின் குணத்தை யுடைத்தது என்றவாறு.

விளக்கம்: புண்ணியமானது, தற்சுவாபமாய்ப் பாவத்துக்கு விரோதமாகையில் பாவங்களைத் தவிர்த்தலோடே கூடின தர்மம் மெய்யான புண்ணியத்தின் குணத்தை யுடைத்ததா யிருக்கும். பாவத்தைத் தவிராமல் செய்த தர்மமோவென்றால், நாலு பெயர் கூப்பிடுகிற போது, ஆரபாரமா யிருக்கும். கூப்பிடல் முகிந்தாப் போல ஆரபாரந் தீர்ந்து போகு மப்படிப்போலே, அந்தத் தர்மத்தை அறிந்த நாலுபெயர், அத்தை மகாப் புண்ணியமென்று சொல்லுவார் களே, அன்னேரத்திலே மாத்திரம் புண்ணியமென்கிற பெயர்பெறு, மத்த நேரத்திலே புண்ணியத்துக்குரிய குண மில்லாததினாலே, ஒருக் காலும் புண்ணியமென்று சொல்லப்படாது என்பது கருத்து.

சொற்பொருள்: கண்–இடம். மாசு குற்றம்.

11. அன்றறிவோ மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

(36)

பொருள்: என்றது, தளர்ந்த வயசு வருமே, அப்பொழுதே புண்ணியஞ் செய்கிறதுக்குப் புத்தி யுண்டாகுமென்று நினையாம லிப்பொழுதும் புண்ணியஞ் செய்யவேண்டியது; அதேனென்றால், சாகிற காலத்திலே அந்தப் புண்ணிய முயிருக்குச் சாகாத் துணையா யிருக்கு மென்றவாறு.

விளக்கம்: மனுஷன் சாகிறபோது, அவன் செய்தவினை மாத்திர மவனுடைய உயிரைத் தொடர்ந்து போறதினாலேயுஞ், சாவு என்றைக்கு வருமென்று நிலவர மில்லாததினாலேயும், மேலைக்குப் புண்ணியஞ் செய்வேனென்று நினைக்கிறவன் புண்ணியஞ் செய்கிறதுக்கு முன்னே செத்தால், தன்னை மோட்சத்

துக்குக் கூட்டிக்கொண்டு போகத்தக்க துணையில்லாமல் மோட்சத் துக்குச் சேரமாட்டா னென்பது கருத்து.

சொற்பொருள்: அன்று–அன்றைக்கு. என்னாது–கருதாமல். அறம்–புண்ணியம். செய்க–செய். மற்று–அசைச்சொல். பொன்றல்–சாகுதல். பொன்றா–பொன்றாதே.

12. அறத்தான் வருவதே யின்ப மற்றெல்லாம்
புறத்த புகழு மில

(39)

பொருள்: என்றது, புண்ணியத்தால் வருகிற யின்பமே இன்ப, மத்தெல்லாத்துக்கு மின்பமும் புகழு மில்லை யென்றவாறு.

விளக்கம்: மெய்யான இன்பமும், புகழும் என்றைக்கும் நிக்க வேண்டிய தாகையில், புண்ணியத்துக்குப் பிறத்திப்பட்ட இன்பமும் புகழு மனுஷன் செற்றுப்போறதோட தீந்துபோ மென்கிறதினாலே யும், புண்ணியத்தால் வருகிற பேரின்ப மூழியுள்ள காலம் நிக்கு மென்கிறதினாலேயுமிந்த இன்பமே யல்லாமல் மத்ததெல்லா மெய் யான இன்பமுமா யிராது. மெய்யான புகழைப் பெறுகிறதுக்கும் ஏதுவா யிராது என்பது கருத்து.

சொற்பொருள்: [சுவடியில் விடுபட்டது]

அறப்பால்

5. இல்வாழ்க்கை

அதிகாரக் கருத்து: அதாவது, சமுசாரத்தின் சிறப்பு.

13. துறந்தாற்குந் துவ்வாத வற்கு மிறந்தாற்கு
மில்வாழ்வா னென்பான் றுணை

(42)

பொருள்: என்றது, மூவாசை யத்த முனிவருக்குந், தரித்திர ருக்குஞ், செத்துப்போனவர்களுக்குஞ், சமுசாரி என்று சொல்லப்படு கிறவன் துணையா யிருக்கவேண்டியது என்றவாறு.

விளக்கம்: ஞானிகள், உணவு சம்பாதிக்கிறதுக் கோசரம் தங்கள் விதங்களை விடாதபடிக்குந் தரித்திரர் உணவில்லாமல் சாகாதபடிக்குஞ், செத்தவர்களுடைய ஆற்றுமங்கள் கரையேறுகிற துக்குச் செய்யத்தக்க தர்மங்களுக்கும் பூசைகளுக்கும் வேண்டிய பொருளுக்கும் சம்சாரியா யிருக்கிறவன், உடையவனா யிருக்கிறதி னாலிவந்தானே அவர்களுக்குதவியா யிருக்கவேண்டியதே என்பது கருத்து.

சொற்பொருள்: துறந்தார்–முனிவர். துவ்வாதவர்–தரித்திரர். இறத்தார்–செத்தவர்கள். என்பான்–என்கிறவன்.

14. தென்புலத்தார் தெய்வம்விருந் தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை

(43)

பொருள்; என்றது, மரணத்தை யடைந்த உறமுறையாருந், தெய்வமும், வீட்டுக்குப் புதுசாய்ச் சேர்ந்தவர்களும், பெந்து ஜனங் களுந், தானுமென்கிற ஐந்திடத்திலேயுஞ் செய்யத்தக்க தர்மத்தின் வழியிலே விடாமல் நிற்கிறது சிறப்பான புண்ணியமா யிருக்கு மென்றவாறு.

விளக்கம்: செற்றுப்போன முன்னோர்களுடைய ஆற்றுமத்தைக் குறித்து, ஒரு **சந்தியா**யிருந்து பிட்சைகளுங் கொடுத்து தெய்வத்துக்கு வழிபாடுகளைச் செய்து, பூசைகளும் பண்ணிவித்து தன் வீட்டுக்குச்

சேர்ந்தவர்களுக்கு இடங்கொடுத்து நன்றாயாதரித்துப் பெந்து ஜனங்களுக்கு வேண்டிய உதவி செய்து தன்னையும் பாவத்திலே விழாதபடிக்கு புண்ணியத்தின் வழியிலே விடாமல் நிறுத்திக் கொண்டு நடக்கிறவனுக்கு எல்லாப் புண்ணியமும் வேண்டிய தாகையி லிப்படிப்பட்ட நடக்கை தலையான புண்ணியமா யிருக் கும் என்பது கருத்து.

சொற்பொருள்: தென்புலத்தார்–பிதிரர். விருந்து–புதுமை. ஒக்கல்–உறமுறையார். ஆங்கு–அசைச் சொல். ஐம்புலத்து–ஐந் திடத்லே. ஆறு–வழி. ஓம்பல்–காற்றல். ஓம்பறலை–ஓம்பல்தலை.

15. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது

(45)

பொருள்: என்றது, சமுசாரிகளுடைய கடனென்ன, தங்களுக் குள்ளே பட்சமா யிருந்து தர்மத்தைச் செய்கிறது. சமுசாரத் தினால் வரத்தக்க பலனென்ன, அந்தப் பட்சமுந் தர்மமுந் தானென்றவாறு.

விளக்கம்: இல்லறம் மென்கிற சமுசாரிகளுக் கேத்த புண்ணி யத்துக் குரிய குணமாவது சமுசாரிகள் தங்களுக்குள்ளே பட்சமாயி ருந்து மற்றவர்களுக்குத் தர்மஞ் செய்கிறது. அவர்கள் சமுசாரத்தி னால் கைக்கொள்ளத் தக்க நன்மையாவது, அந்தப் பட்சத்தினா லந்த லோகத்திலே சிற்றின்ப மனுபவிக்கிறது; அந்த தர்மங்களினால் மறு லோகத்திலே பேரின்பத்தைக் கைக்கொள்ளுகிறது என்பது கருத்து.

சொற்பொருள்: அன்பு–பட்சம். அறன்–புண்ணியம். பண்பு– குணம். பயன்–இலாபம்.

6. வாழ்க்கைத் துணை நலம்

அதிகாரக் கருத்து: அஃதாவது, புருஷனுக்குத் துணையா யிருக்கிற பெண்சாதியின் நற்குணமுமாம். அவளா லாகிற நன்மை யுமாம்.

16. இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை

(53)

பொருள்: என்றது, நற்குணமுள்ள மனவியிடத்திலே இல்லாத காரியமென்ன? எல்லாமுண்டு. நற்குண மில்லாத மனவியிடத் திலே என்னயுண்டு? ஒன்றுமில்லை யென்றவாறு.

விளக்கம்: பெண்சாதிக்கு நற்குணங்க ளுண்டானால் புண்ணியமும் புகழு முண்டாயிருக்கும். ஆனபடியினா லவளுக்குத் தேவர் உதவியு மனுஷ ருதவியு முண்டு. நற்குண மில்லாதேபோனால் அவ்விரண்டு மில்லாததினால் அவ்விருவகை உதவியுமில்லை என்பதாகையில், அவளுக்கு நற்குணங்களோடே கூட எல்லாமு முண்டு. நற்குணங்களில்லாமல் ஒன்றுமில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: இல்லாது–இல்லாதது. என்–என்ன? இல்லவள்–பெண்சாதி. மாண்பு–நற்குணம். உள்ளது–உண்டானது. என்–என்ன? மாண்–மாண்பு. ஆ–ஆகாத. கடை–இடம்.

17. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை

(55)

பொருள்: என்றது, தன் புருஷனை வணங்கி, அவனுக் கேவல் செய்துகொண்டு நிற்கிறவள், மழை வேண்டிய தறுவாயிலே தெய்வத்துக்கு வேறே வழியாடுகளைச் செய்யாமல், மழையைப் பார்த்துப் 'பெய்' யென்றால், மழை பெய்யு மென்றவாறு.

விளக்கம்: புருஷனுக்கு வணக்கமாக நடக்கிறது தெய்வத்துக்கு மிகவும் பிரியமான புண்ணியமா யிருக்கிறதினா லிப்படிப்பட்ட புண்ணியத்தை யுடையவள் தெய்வத்துக்கு வேறே வழிபாடுகளைச் செய்யாதே போனாலும், மழை வேணுமென்கிற ஆசை காண்பித்தால், தெய்வ மவளுடை யாசை யுடனேயே தீர்க்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: (சுவடியில் விடுபட்டது)

18. தற்காத்துத் தற்கொண்டாற் பேணிற் றகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

(56)

பொருள்: என்றது, தன்னுடைய நிறை காத்துக்கொண்டு, தன் புருஷனுக்கேற்க நடந்து தா......கொண்ட பெருமையான பேரிழந்து போகாதபடிக் காத்துக்கொண்டு, இந்த மூன்று காரியத்திலேயும் ஒருக்காலும் சட்டைபண்ணாதவ ளவளாக்கும் பெண்ணென்றவாறு.

விளக்கம்: இந்த மூன்று காரியத்திலேயு மிடைவிடாமல் குறை வைக்காதபடிக்கு நடக்கிறவள் நல்ல பெண்சாதி யென்று சொல்லப் படுவா ளிந்த மூன்றிலே ஒன்றானாலுந் தப்பிப்போச்சுதானால், நல்லவளென்று சொல்லப்படாது என்பது கருத்து.

சொற்பொருள்: தன்–தன்னை. தகை–பெருமை. சோர்வு–அசதி. இல்லாள்–இல்லாதவள்.

19. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை

(57)

பொருள்: என்றது, பெண்சாதியை வீட்டிலே நிறுத்திக் கதவும் போட்டு காற்கிறதிலே பிரயோசன மென்ன? அவள் தானே தன்னுடைய மானத்தைக் காற்கிறது பிரதான காவலென்றவாறு.

விளக்கம்: பெண், தன் மானத்தைக் காற்காமல் ஆகாத காரியத்திலே தன் மனசு வைத்தால், அவளைக் காக்கிறதுக்குப் போட்டிருக்கிற கதவுகளெல்லா முதவாதென்பது கருத்து.

சொற்பொருள்: சிறை-மதில். காப்பு-காவல். எவன்-என்ன? மகளிர்-பெண் பிள்ளை.

7. புதல்வரைப் பெறுதல்

அதிகாரக்கருத்து: அதாவது. பிள்ளைகளைப் பெறுகிறதினாலாகிற நன்மை.

20. குழலினி தியாழினி தென்பர் தம்மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்

(66)

பொருள்: என்றது, ஊதப்படுங் குழலும் வாசிக்கப்படும் வீணையு மிகவும் இன்பமா யிருக்குதென்று சொல்லுவார்கள் தான் பெற்ற குழந்தைகள் சொல்லுகிற கொச்சைச் சொல்லுகளைக் கேளாதவர்க ளென்றவாறு.

விளக்கம்: பிள்ளைகள் பெற்றவர்களுக்கு அவர்களுடைய பேச்சுகள் எந்தச் சங்கீதத்தையும் பார்க்க மிகவும் இன்பமா யிருக்கிறதினால், பிள்ளை பெறாமல் அந்த இன்பத்தை யனுபவியாதவர்கள் மாத்திரம் குழலும் வீணையும் இனிதென்று சொல்லுவார்கள். பிள்ளை பெற்றவர்கள் இப்படிச் சொல்லப்போறதில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: குழல்-ஊதப்படுங் குழல். இயாழ்-வீணை. மழலைச்சொல்-குறைந்துச்சரித்தச் சொல்.

21. அமிழ்தினு மாற்ற லினிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

(64)

பொருள்: என்றது, தகப்பனுக்குத் தன் குழந்தை சிறு கையினால் அளைகிற சோறு அமுர்தத்தைப் பார்க்க மிகவும் மதுரமாயிருக்கு மென்றவாறு.

விளக்கம்: (சுவடியில் விடுபட்டது)

சொற்பொருள்: அமிழ்து-அமுர்தம். ஆற்றல்-மிகுதி. அளாவல்-கலத்தல்.

22. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்

(99)

பொருள்: என்றது, தாயானவள் தன் மகனைப் பெறுகிறபோது அடைந்த சந்தோஷத்துக்கு மிஞ்சின சந்தோஷத்தை யனுபவிப்பாள் அவனை அறிவுடையானென்று மனுஷர் சொல்லக் கேட்டதே யுண்டனா லென்றவாறு.

விளக்கம்: தாய்க்குப் பிள்ளை பெற்றே னென்கிறதைப் பார்க்க நல்லபிள்ளை பெற்றேனென்கிறது மிஞ்சின சந்தோஷமா யிருக்கும் என்பது கருத்து.

சொற்பொருள்: ஈன்றல்-பெறுதல். உவத்தல்-மகிழ்தல். சான்றோன்-அறிவுடையான்.

8. அன்புடைமை

அதிகாரக் கருத்து : அதாவது, புருஷன், பெண்சாதி தங்களுக்குள்ளேயுந் தங்கள் பிள்ளைகள் பெயரிலேயும் பிறத்தியான் பெயரிலேயும் பட்சமுடையவர்களாயிருக்கிறது.

23. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ளார்வலர்
புன்கணீர் பூச றரும்

(71)

பொருள்: என்றது, நெஞ்சிலே யிருக்கிற பட்சத்தை அடைக்கத்தக்க தப்பாளுண்டோ? இல்லை. பட்சமுள்ளவனுடைய கண்கள் உள்ளிருக்கிற பட்சத்தைக் காட்டிக் கொடுக்கிற கண்ணீர்களுடைய தூத்தலைக் கொடுக்கிறதினா லென்றவாறு.

விளக்கம்: சிநேகிதன் கஷ்திப் படுகிறதைக் கண்டு பட்சமுள்ளவனுக்கு இரக்கத்தினா லழுகாம லிருக்கக்கூடாது என்பதாகையிலந்தக் கண்ணீர்களினால் தன்னுடைய பட்சத்தைக் காண்பிப்பான். ஆனபடியினால், உள் பட்சத்தை மறைக்கிறதுக்கு உபாயமில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: அன்பு-பட்சம். தாள்-தாப்பாள். ஆர்வலர்-பட்சமுடையார். புல்-இகழ்ச்சிக் குறிப்பு. பூசல்-தூற்றல். பூசறரும்-பூசல் தரும்.

24. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு

(72)

பொருள்: என்றது, பட்சமில்லாதவர்களுடைய பொருளெல்லாந் தங்களுக்கல்லாமல் மத்தவர்களுக்குச் சொந்தமல்ல. பட்சமுடையவர்களுடைய எலும்பு முதலாய் மத்தவர்களுக்குச் சொந்தமாயிருக்கு மென்றவாறு.

விளக்கம்: பட்சமுள்ளவர்களுக்குள்ளே வேற்றுமை யில்லாத படியினால், அவனவன் தனக்குண்டான எலும்பு முதலாய் தனக்கு வுதவுகிறாப் போலே சிநேகிதருக்கு முதவப் பண்ணுவா னென்கிற தினால் பிரயோசனஞ் செய்யாத பட்சம் பட்சமல்ல என்பது கருத்து.

சொற்பொருள்: அன்பு-பட்சம். இலார்-இல்லாதவர்கள். உரியர்-சொந்தமுள்ளவர்கள். என்பு-எலும்பு. பிறர்-பிறத்தியார்.

25. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு

(80)

பொருள்: என்றது, பட்சத்தின் காரணமாக உடம்பிலே உயிர் நிற்கிறது. ஆகையால், பட்சமில்லாதவர்களுடைய உடம்பு தோலால் மூடப்பட்ட உடம்பே யல்லாமல் உயிருள்ள உடம்பல்ல என்றவாறு.

விளக்கம்: உடம்பும் உயிரும் தங்களுக்குள்ளே பட்சமா யிருந்தால், உடம்பிலே உயிர் நிக்கும். விரோதமாயிருந்தால், உயிர் நீங்கு மென்கிறதினாலே பட்சமில்லாத உடம்பிலே உயிருண்டென்பதுக்கு ஞாயமில்லாமல் அது பிரேதமென்று சொல்லுகிறதுக்கு ஞாயமாயிருக்கும் என்பது கருத்து.

சொற்பொருள்: அன்பு-பட்சம். வழி-காரணம். அஃது-அது. இலார்-இல்லாதவர்கள். என்பு-உடம்பு. போர்த்தல்-மூடல்.

9. விருந்தோம்பல்

அதிகாரக் கருத்து: அதாவது, பழக்கத்தைப் பத்தியும், பழக்கமில்லாமலுந் தன்னுடைய வீட்டுக்குப் புதுசாய் வருகிறவர்களுக்கு இடங்கொடுத்து நன்றா யாதரிக்கிறது.

26. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

(90)

பொருள்: என்றது, அனிச்ச மென்கிற புஷ்பம் முகர்ந்தால் வாடிப்போம். விருந்தாளியைப் பேதகமான முகத்தோடே நோக்கினா லவனுடைய முகங் கஸ்தியினாலே வாடிப்போ மென்றவாறு.

விளக்கம்: அனிச்சத்தை முகர்ந்தாலொழிய சந்தோஷமில்லாத முகத்தோடே நோக்கினால் வாடாது. விருந்தாளியோ வென்றா லவனைச் சந்தோசமில்லாத முகத்தோட நோக்கினால் மாத்திரம் கஸ்திப்படுவா னென்கிறதினால், அனிச்சத்தைப் பார்க்க விருந்தாளியைப் பூச்சியமான முகத்தோடே நடப்பிக்க வேண்டியது என்பது கருத்து.

சொற்பொருள்: குழைதல்-வாடல். திரிதல்-வேறுபடல். விருந்து-புதுமை; வீட்டுக்குப் புதுசாய் வருகிறவர்களைக் குறித்துச் சொன்னது.

10. இனியவை கூறல்

அதிகாரக் கருத்து: அதாவது, கஸ்திப் படுகிற வார்த்தை சொல்லாமல் சந்தோஷம் வருத்திவிக்கிற வார்த்தை சொல்லுகிறது.

27. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

(100)

பொருள்: என்றது, எந்த(க்) காரியமுஞ் சொல்லுகிறதுக்கு நல்ல வார்த்தை யுண்டாயிருக்க அதுகளைவிடப் பொல்லாத வார்த்தை சொல்லுகிறது, பழுத்த பழ முண்டாயிருக்கப், பச்சைக் காய்களைத் தின்றாப்போலு மென்றவாறு.

விளக்கம்: நல்ல பழத்தைவிட்டு, பச்சைக் காய்களைத் தின்கிறது மிலைச்சத்தனமா யிருக்கிறாப் போலே, நல்ல வார்த்தை விட்டுப் போட்டுப் பொல்லாத வார்த்தை சொல்லுகிறது மிலைச்சத்தனமா யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: இனிய-இனிமையுள்ளது. இன்னாது-பொல்லாப்பு. உளவாதல்-உண்டாதல். கூறல்-சொல்லுதல். இருப்ப-இருக்க. கவர்தல்-தின்றல். அற்று-உவமைச்சொல்.

11. செய்நன்றியறிதல்

அதிகாரக் கருத்து: அதாவது, பிறத்தியார் தனக்குச் செய்த நன்மை மறவாம லவர்களுக்கு நன்றி யறிகிறது.

28. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது

(28)

பொருள்: என்றது, உனக்கொருவன் முன்னேயும் ஒரு உதவி செய்யாதிருக்கப், பின்னுக்குஞ் செய்கிறதுக்கு அவகாசமில்லாம லிருக்க, நீ யவனுக்கு ஒரு உதவி செய்தா லிப்படிப்பட்ட வுதவிக்குப் பூமியும் வானமுங் கொடுத்தாலுஞ் சரியான பிரத்தியுபகாரம் அவனா லெளிசாய்ச் செய்யக் கூடாது என்றவாறு.

விளக்கம்: எதிருதவி யில்லாமல் செய்த உதவி புண்ணியத் தைப் பத்திச் செய்யப்பட்டதா யிருக்கிறதினாலேயேயும் லோகத்தி லுண்டான தெல்லாத்துக்கும் புண்ணிய முகந்து நிற்கிறதினாலேயும், லோகத்திலேயுண்டானதெல்லாம் கொடுக்கிறவன் முதலாய் அந்த உதவிக்குச் சரியான பலனைக் கொடுக்கிறவனல்ல என்பது கருத்து.

சொற்பொருள்: வையகம்–பூமி. வானகம்–வானம். மாற்றல்–கைம்மாறாகக் கொடுத்தல்.

29. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது

(103)

பொருள்: என்றது, தனக்குப் பிரயோசனம் வரவேணுமென்கிற நோக்கமு மில்லாமல், வரும் பிரையோசன மெம்மாத்திரமென்று நிறுத்துப் பாராமலும் ஒருத்தனுக்குச் செய்த உதவியினால் வருகிற நன்மை நிறுத்துப் பார்த்தால் சமுத்திரத்திலேயும் பெரியதா யிருக்கு மென்றவாறு.

விளக்கம்: புண்ணியத்தால் வருகிற பெருமைக்கு மிஞ்சின பெருமை இல்லை என்பதாகையில் பிரயோசனம் பாராமல் செய்த வுதவி புணணியத்தை நோக்கிச் செய்யப்பட்டதா யிருக்கிறதினா லந்த வுதவியினால் வருகிற பெருமைக்குச் சமுத்திரத்தின் பருமமுஞ் சரியல்ல, என்பது கருத்து.

சொற்பொருள்: பயன்–பிரயோசனம். தூக்குதல்–ஆராய்தல். நயன்–பிரயோசனம்.

30. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

(108)

பொருள்: என்றது, பிறத்தியா ருனக்குச் செய்த நன்மை மறக் கிறது நல்லதல்ல. பிறத்தியார் செய்த பொல்லாப்பை அன்றைக்குத் தானே மறக்கிறது நல்லதென்றவாறு.

விளக்கம்: பிறத்தியார் தனக்குச் செய்த நன்மை மறக்கிறது, நன்றியறியாமை யானையில் நல்லதல்ல. செய்த பொல்லாப்பை மறக்கிறது பொறுமை யென்கிற புண்ணியத்தின் குணமா யிருக்கிற தினால் நல்லது என்பது கருத்து.

சொற்பொருள்: நன்றி–நன்மை. அன்று–அல்ல. நன்று–நல்லது.

31. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்

(109)

பொருள்: என்றது, ஒருவனுக் கொருநன்மை செய்தபின் கொலைபாதகத்துக்குச் சரியான பொல்லாப்பை உனக்குச் செய் தாலு மவன் முன்னே செய்த ஒரே நன்மை நினைக்கப் பின் செய்த பொல்லாப்பி (னி)னைவு நீங்கிப் போமென்றவாறு.

விளக்கம்: செய்த நன்மை கொஞ்சமா யிருந்தாலு மறிவுடை யார் வெகு பெரியதாக எண்ணிக்கை எண்ணிக்கொள்ளுகிறதினால் அதைப்பற்றிப் பெரிய பொல்லாப்பைப் பொறுக்கவேண்டியது என்பது கருத்து.

சொற்பொருள்: கொல்லல்–கொலை செய்தல். அன்ன–உவ மைச்சொல். இன்னா–பொல்லாப்பு. செயினும்–செய்தாலும். உள் ளல்–நினைத்தல். நன்று–நன்மை.

12. நடுவு நிலைமை

அதிகாரக் கருத்து: அதாவது, பகைவ ரென்றுஞ் சிநேகித ரென் றும் அசலா ரென்றும் பாராமலும் ஞாயத்தி னிலை விட்டு(ச்) சாயாமலு மெல்லாரோடேயு மொரு ஞாயமாய் ஒரு சீராய் நடக்கிறது.

32. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்

(113)

பொருள்: என்றது, ஞாயத்தை நிந்தித்து ஆகிற பிரயோசனம் வருகிறபொழுது, நன்மை செய்தாலும் அப்பொழுதே விட்டுவிட வேண்டியது என்றவாறு.

விளக்கம்: பின்னுக்கு அவசியமாய்க் கேடு வருத்திவிக்கிறதி னால் ஒருட் சணமாகிலும் அதை யேற்க வொண்ணா தென்பது கருத்து.

சொற்பொருள்: நன்று–நன்மை. இகலல்–விடுதல். ஆம்–ஆகும். ஆக்கம்–இலாபம். அன்றே–அப்பொழுதே. ஒழிதல்–விடுதல்.

13. அடக்க முடைமை

அதிகாரக் கருத்து: அதாவது, ஐம்பொறிகளையு மனத்தையும் பாவ வழியிலே செல்லாதபடிக்கு அடக்கிறது.

33. எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து
(125)

பொருள்: என்றது, ஆங்கார மில்லாமல் நடக்கிறது எவனுக்கு நன்மையா யிருக்குமானா லெல்லாருக்குள்ளேயுஞ் செல்வமா யிருக் கிறவர்களிடத்திலே ஆங்காரத்தை யடக்கிறது ஒரு விசேஷமான செல்வமா யிருக்கு மென்றவாறு.

விளக்கம்: இல்லாமை, கீழ்மை, அறியாமை இதுமுதலான காரணங்களால் தாட்சியா யிருக்கிறது, நன்மைதான்; ஆனாலதிலே யாங்காரத்துக்கு ஏதுவில்லாதபடியினா லந்தத் தாட்சி விசேஷ மான புண்ணியமாய்த் தோணாது. திரவியங்களாலுஞ் சாதிப் பெருமையாலும் பெரிய அறிவாலுஞ் செல்வமா யிருக்கிறவர்களோ வென்றால், ஆங்காரமா யிருக்கிறதுக்கு பெருமைகளை உடைத்த தினா லவர்களிடத்திலே ஆங்காரத்தை யடக்குதல் விசேஷமான புண்ணியமாய்த்தோணுகிறதாகையில் மத்தவர்களிடத்திலே விசேஷ மான எண்ணமும் பிரியமு மென்கிற செல்வத்தைப் பெறுவார்க ளென்பது கருத்து.

சொற்பொருள்: நன்று–நன்மை. ஆம்–ஆகும். செல்வர்–செல்வ முடையார். தகைத்து–குணமுடைத்தது; சிறப்புடைத்து.

34. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு
(127)

பொருள்: என்றது, எல்லாப் பொறிகளையு மடக்கிறதுக்கு அவகாசமில்லாதே போனாலும், நாக்காகிலும் அடக்க வேண்டியது. அடக்காதவர்கள், குத்தமான சொல்களிலே யகப்பட்டு, ஈனப் பட்டுப் போவார்க ளென்றவாறு.

விளக்கம்: மற்றப் பொறிகளை அடக்காதே போறது குற்றமா யிருக்கு, மானால் மற்றவர்களுக்குத் தெரியாது. நாக்கை யடக்காதே போனால், குற்றமாயிருக்கிறது மல்லாமல், அந்தக் குற்றம் சொல்களிலே பிறத்தியாருக்குத் தெரியுமானபடியினால், குற்றமென்கிற கேடில்லாமல் ஈனமென்கிற கேடு முண்டு என்ப

தாகையில் எல்லாத்தையும் பார்க்க நாக்கையதிகமான எச்சரிக்கை யோடே காக்க வேண்டியது என்பது கருத்து.

சொற்பொருள்: யா–எல்லாம். காவாராயினும் – காக்காதே போனாலும். நா–நாக்கு. காவாக்கால்–காக்காதே போனால். சோகாப்பர்–சிறுமை பெறுவர். இழுக்கு–குற்றம்.

35. தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு

(129)

பொருள்: என்றது, ஒருவனை நெருப்பினால் சுட்டால், அவனு டம்பிலான புண் ணாறாதே போனாலு, மதினா லவன் மனசில் லெழும் பின்கோபம் எளிசா யாறிப்போம். ஒருவனை நாக்கினால் சுட்டா லவன்தன் வர்மங் காண்பியாதே போனாலு மனசின் கோபம் தழும்பு போலே எளிசா யாறா தென்றவாறு.

விளக்கம்: நெருப்பினா லொருத்தனைச் சுட்டா லந்தக் குற்ற மெளிசாய்ப் பொறுக்கிறதுண்டு. ஒருத்தனுக்குக் குறையான வார்த்தை சொன்னா லந்தக் குற்ற மெளிசாய்ப் பொறுப்பாரில்லை யென்கிறதினால் வெகு எச்சரிக்கையோடே வாயடக்க வேண்டியது என்பது கருத்து.

சொற்பொருள்: தீ–நெருப்பு. நா–நாக்கு. வடு–தழும்பு.

14. ஒழுக்க முடைமை

அதிகாரக் கருத்து: அதாவது, அவனவன் தன்னுடைய அந்தஸ் துக்கேத்த ஒழுங்காய் நடக்கிறது.

36. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்

(138)

பொருள்: என்றது, நல்ல நடக்கைகள் நன்மைக்கு விதையா யிருக்கும். பொல்லா நடக்கைக ளெப்போதும் துன்பஞ் செய்யு மென்றவாறு.

விளக்கம்: விரை தெளிக்கிறவனுக்குத் தெளிக்கிற காலத்திலே அவனுக்குதவி செய்யாதே போனாலு மறுப்பிலே பலன் கொடுக்கு மதுபோல, நல்ல நடக்கைக ளிவ்வுலோகத்திலே நன்மை செய்யாதே போனாலு மறு லோகத்திலே மோட்ச மென்கிற பலனைக் கொடுக் கும். பதரானது தெளிச்சால், அக்காலத்திலேயு மறுப்புக் காலத் திலேயு முதவாமல் தரித்திரத்தைக் கொண்டுவிடும். அதுபோலப்

பொல்லா நடக்கைக ளிவ்வுலோகத்திலேயு மறு லோகத்திலேயுந் துன்பமான ஆக்கினை கொண்டுவிடும் என்பது கருத்து.

சொற்பொருள்: நன்றி-நன்மை. வித்து-விரை. தீ-பொல்லாத. என்றும்-எப்போதும். இடும்பை-துன்பம்.

15. பிறனில் விழையாமை

அதிகாரக் கருத்து: பிறத்தியார் பெண்சாதியின் பெயரிலேஆசை வையாம லிருக்கிறது.

37. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்
(146)

பொருள்: என்றது, பிறத்தியான் பெண்சாதியோடே நிறையி னெல்லை கடக்கிறவனிடத்திலே பகையும் பாவமும் பயமு மீனமும் மென்கிற நாலு பொல்லாப்பும் நீங்காமல் நிக்கு மென்றவாறு.

விளக்கம்: பிறத்தியான் பெண்சாதி யிடத்திலே மிஞ்சிச் செய் கிறவனை அவளுடைய புருஷன் பகையும் தான் கட்டிக் கொள்ளு கிற பாவமு, மந்த நடத்தை யறிந்தவர்கள் சொல்லுகிற ஈனமும், நீங் காமல் சுத்திக்கொள்ளும் என்பது கருத்து.

சொற்பொருள்: பழி-குற்றம். இகவா-விடாமல்.ஆம்-உண்டாம். இல்-பெண்சாதி. இறத்தல்-மிகுதல். கண்-இடம்.

38. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனி யலாள்
பெண்மை நயவா தவன்
(147)

பொருள்: என்றது, இல்லறத்துக் குரிய குணத்தோடே வாழு கிறவ னென்று சொல்லப்படுவான் பிறத்தியானுக்குரிய வளுடைய பெண்ணுடம்புக்கு ஆசைப்படாதவ னென்றவாறு.

விளக்கம்: பிறத்தியார் பெண்சாதியை அபேட்சிக்கிறது, இல்ல றத்துக்கு விரோத மாகையில், இல்லறத்தோடே கூட வாழுகிறவன் அந்தாசைப் படான் என்பது கருத்து.

சொற்பொருள்: அறன்-புண்ணியம். இயல்-குணம். பிறன்-பிறத்தியான். இயலாள்-உரிமையாள். பெண்மை-பெண்டன்மை. நயத்தல்-விரும்பல்.

16. பொறை யுடைமை

அதிகாரக் கருத்து: அதாவது, பிறத்தியார் தனக்குச் செய்த குறைகளைப் பொறுக்கிற குணத்தை யுடையவனா யிருக்கிறது.

39. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை

(151)

பொருள்: என றது, தன்னைத் தோண்டுகிறவர்களைத் தாங்கிற நிலத்தைப் போல, தன்னை நிந்திக்கிறவர்களைப் பொறுக்கிறது உச்சிதமான புண்ணிய மென்றவாறு.

விளக்கம்: பூமியானது, தன்னைத் தோண்டிக் காயப்படுத்து கிறவர்களுக்குப் பொல்லாப்புச் செய்யாமல், விழாதபடிக்குத் தாங்கிக் கொண்டு, நன்மை செய்யுமப்படிப்போல் மனுஷன் தன்னை நிந்திக் கிறவர்களுக்குப் பொல்லாப்புச் செய்யாமல் நன்மை செய்தால் பெரிய புண்ணியமா யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: அகழ்தல்–தோண்டல். இகழ்தல்–நிந்தித்தல். பொருத்தறலை–பொறுத்தல் தலை. தலை–பெருமை.

40. நிறையுடைமை நீங்காமை வேண்டிற்
பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்

(154)

பொருள்: என்றது, பெருமை யென்கிற உடைமை உன்னை விட்டுப் போகாமல் எப்போதும் உன்னிடத்திலே நிற்க வேணு மென்று விரும்பினாலப் பொறுமை யென்கிற உடைமை உன்னை விட்டுப் போகாதபடிக்குக் காத்துக்கொண்டு நடக்க வேண்டியது யென்றவாறு.

விளக்கம்: பொல்லாப்புச் செய்தவனுக்குப் பொல்லாப்புச் செய்கிற தென்கிற சாமர்த்தியம் எந்த நீசனுக்கு, மிருகத்துக்குமுண்டு. செய்த பொல்லாப்பைப் பொறுக்கிறதுக்குப் பெரிய அறிவுந் துணிவும் புண்ணியமும் வேண்டிய தாகையில், பொறுமையானது, பெரியவர்களுக்கு லட்சணமா யிருக்கிறது. ஆனபடியினாலே, பெருமைக்கு லட்சணமா யிருக்கிற பொறுமை ஒருவனிடத்திலே இருக்குமட்டும் பெருமையும் நிற்கும். அதில்லாத போனால் இதுவும் போம் என்பது கருத்து.

சொற்பொருள்: நிறை–பெருமை. வேண்டில்–வேணுமானால், போற்றல் – காத்தல். ஒழுகல் – நடத்தல். பொறையுடைமை–பொறுமை என்கிற உடமை.

41. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்

(156)

பொருள்: என்றது, தனக்குப் பொல்லாப்புச் செய்தவனுக்கு, மறு பொல்லாப்புச் செய்கிறவன் ஒருநாள் நிக்கத்தக்க இன்பத்தை யனுவிப்பான். செய்த பொல்லாப்பைப் பொறுக்கிறவன் சாகுமள விலும் துதிக்கப் படுவானென்றவாறு.

விளக்கம்: செய்த குறையைப் பொறுக்காதவன், கோபமா யிருக்கு மட்டும் என்னைத் தாழ்த்தினவனைத் தாழ்த்தினே னென்கிற சந்தோஷத்தை யனுபவிப்பான். கோப மடங்கினாப்போல அந்தச் சந்தோஷமுந் தீந்துபோம். அதைப் பொறுக்கிறவனோ வென்றால், பொறுமை பெருமைக்கு லட்சணமா யிருக்கிறதினால் சாகுந்துணை யும் நிக்கத் தக்க பெரியவனுடைய பெயர் கட்டிக் கொள்ளுவாள்ளு வான் என்பது கருத்து.

சொற்பொருள்: ஒறுத்தல்–நோவு செய்தல். பொன்றல்–சாகுதல். துணை–அளவு.

42. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொன் னோற்பாரிற் பின்

(160)

பொருள்: என்றது, உபவாசமா யிருந்து தபசு செய்கிறவர்கள் பெரியவர்கள்தானே; ஆனாலவர்களைப் பார்க்கப் பெரியவன். பிறத்தியார் சொல்லுகிற பொல்லாத வார்த்தைகளைப் பொறுக்கிறவ னென்றவாறு.

விளக்கம்: உடம்பைப் பார்க்க மானமானது எல்லாருங் கனமாக எண்ணுகிறதினால், உடம்பை வாதிக்கிற பசியைப் பொறுக் கிறதைப் பார்க்க மானத்தைக் கெடுக்கிற பொல்லாத வார்த்தை களைப் பொறுக்கிறது பெரிய புண்ணியமா யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: நோற்றல்–தவஞ்செய்தல். பிறர்–பிறத்தியார் இன்னா–பொல்லாத. நோற்றல்–பொறுத்தல்.

17. அழுக்காறாமை

அதிகாரக் கருத்து: அதாவது, பிறத்தியார் நன்மை கண்டு அதுக்குக் காய்மகாரப் படாமலிருக்கிறது.

43. அறனாக்கம் வேண்டாதா னென்பான்பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பன்

(163)

பொருள்: என்றது, பிறத்தியாருடைய பிரயோசனத்தைப் பொருந்தாத மனசோடே கண்டு காய்மகாரப் படுகிறவன் புண்ணியத்தால் வரத்தக்க பிறயோசனத்தை விரும்பாதவனென்று சொல்லப் படுவா னென்றவாறு.

விளக்கம்: புண்ணியத்தா லாகிற மோட்ச மென்கிற நன்மை விரும்புகிறவன், புண்ணியத்தை யழிக்கிற காய்மகார மென்கிற பாவத்துக்கு இடங்கொடுக்கான் என்பது கருத்து.

சொற்பொருள்: அறன்–புண்ணியம். ஆக்கம்–இலாபம். வேண்டல்–விரும்புதல். பிறன்–பிறத்தியான். பேணல்–விரும்பல். அழுக்கறுத்தல்–காயமகாரப் படுதல்.

44. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

(167)

பொருள்: என்றது, பிறத்தியார் நன்மைக்குக் காய்மகாரப் படுகிறவனை லட்சுமி வெறுத்து(த்), தன்னக்காளுக்குக் காட்டிக் கொடுப்பா ளென்றவாறு.

விளக்கம்: காய்மகாரப் படுகிறவனை செல்வத்துக்குரியவளாகிற லட்சுமி வன்மித்துத் துன்பத்துக்குக்குரியவளாயிருக்கிற மூதை என்கிற தன்னக்காளுடைய பாரிசமாய் விடுவாளென்ப தாகையில் அவன் செல்வமிழந்து துன்பமடைவா னென்பது கருத்து.

சொற்பொருள்: [சுவடியில் விடுபட்டது]

18. வெஃகாமை

அதிகாரக் கருத்து: அதாவது, பிறத்தியாருக்குரிய பொருளுக்கு ஆசைப்படாம லிருக்கிறது.

45. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்

(173)

பொருள்: என்றது. மோட்சத்தினுடைய வின்பத்தை விரும்புகிறவன் பிறத்தியார் பொருளை யனுபவித்ததினா லாகிற கொஞ்ச

இன்பத்தை விரும்பிப் புண்ணியத்துக்கு விரோதமான காரியத்தைச் செய்யா னென்றவாறு.

விளக்கம்: பாவமானது மோட்சத்துக்கு விக்கினமாயிருக்கிற தினாலேயும், பிறத்தியார் பொருளை அபேட்சிக்கிறது பாவமா யிருக் கிறதினாலேயும், மோட்சத்தை விரும்பினால் மோட்சத்துக்கு விக்கின மான அந்தப் பாவத்தைச் செய்ய வொண்ணாது என்பது கருத்து.

சொற்பொருள்: வெஃகல்–விரும்புதல். அறன்–புண்ணியம். வேண்டல்–விரும்புதல்.

46. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்

(178)

பொருள்: என்றது, ஒருத்தனுடைய செல்வங் குலையாதபடிக்கு யேது வென்னவென்று கேட்டால், பிறத்தியார் விருப்புகிற கைப் பொருளுக்கு ஆசைவையாம லிருக்கிறது யென்றவாறு.

விளக்கம்: பாவமானது, செல்வ மழிக்கிறதுக்குக் காரணமா யிருக்கிறதினால் பிறத்தியார் பொருளுக்கு ஆசைப்படுகிற தென்கிற பாவத்தைத் தள்ளினால், செல்வ மழிந்து போகிறதுக்குக் காரண மில்லாமல் கெடாது என்பது கருத்து.

சொற்பொருள்: அல்கல்–குறைதல். இயாது–எது. எனின்– என்றால். வெஃகல்–விரும்புதல். பிறன்–பிறத்தியான்.

19. புறங்கூறாமை

அதிகாரக் கருத்து: அதாவது, பிறத்தியார் காணாத யிடத்திலே அவர்கள் பெயரிலே தூறாம லிருக்கிறது.

47. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்

(186)

பொருள்: என்றது, பிறத்தியான் பெயரிலே ஒரு குத்தஞ் சொன் னவனுடைய குற்றங்களுக்குள்ளே பெரியதுகளைப் பார்த்து அவன் சொல்லுவானென்றவாறு.

விளக்கம்: நீ பிறத்தியான் பெயரிலே ஒரு அற்பக் குற்றத்தைச் சொன்னாலும், அவனுன் மேலேயுங் குற்றஞ் சொல்ல வேணுமென் கிறகருத்தோடே யுன்னுடைய நடக்கைகளெல்லா மாராய்ந்து பார்ப் பான். அதிலே நீ யவன் மேலே சொன்ன குற்றத்தைப் பார்க்கப்

பெரிய குற்றங்களாகப்படு மவனால் சொல்லவும் படுமென்பது கருத்து.

சொற்பொருள்: பழி–குற்றம்.

48. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்
(184)

பொருள்: என்றது, ஒருத்த னுன்முகத்துக்கு முன்னே இரக்க மில்லாத வார்த்தை யுனக்குச் சொன்னாலும், நீ யவன் காணாத யிடத்திலே யவன் பேரிலே பின்னுக்கு வருங் குற்றத்தை நோக்காத பேச்சுக்களை(ச்) சொல்ல வேண்டா மென்றவாறு.

விளக்கம்: ஒருத்த னுன்னை வைசால், வைகிறபோதெம்மாத்திர மவமானமா யிருக்கும். பிறத்தியார் மேலே தூறுகிற குணமிருந்து தானால், என்றைக்கு நிற்கத்தக்க யீனமும் நிந்தையுங் கொடுக்கு மென்கிறதினாலே உன்னன மெத்த வைதவர்கள் பெயரிலேயுந் தூற லாகாது என்பது கருத்து.

சொற்பொருள்: கண்–கண்ணோட்டம். சொல்லற்க–சொல்ல வேண்டாம். முன்–முன்னே. இன்று–இல்லாமல்; ஆகையால், முன்னின்று என்கிறது முதவிசை முன்னே நின்று என்கிற அர்த்த மாகும். இரண்டாம் விசை முன்னே நில்லாமல் என்கிற அர்த்த மாகும்.

20. பயனில சொல்லாமை

அதிகாரக் கருத்து: அதாவது, வீண் பேச்சுக்களைச் சொல்லிக் கொண்டு நேரம் போக்கடியாம லிருக்கிறது.

49. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்
(196)

பொருள்: என்றது, சாரமில்லாத பேச்சுக்களை யடிக்கடி பேசு கிறவனை மனுஷனென்று சொல்லாதே மனுஷனுடைய பதரென்று சொல்ல வென்றவாறு.

விளக்கம்: பதருக்குச் சார மில்லாதது போல, வீண் பேச்சுக் களைப் பேசுகிறவனிடத்திலே மனுஷருடைய சாரமாயிருக்கிற அறிவு காணாததினாலே, அவனை மனுஷருடைய பதரென்று சொல்லுகிறதுக்கு ஞாயமா யிருக்கிறமென்பது கருத்து.

சொற்பொருள்: பயன்–பிரயோசனம், இல்–இல்லாத. பாராட் டுதல்–[சுவடியில் விடுபட்டுள்ளது.]

21. தீவினையச்சம்

அதிகாரக் கருத்து: அதாவது, பாவத்துக்குப் பயந்து நடக்கிறது.

50. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்

(202)

பொருள்: என்றது, பாவமானது பொல்லாப்பை வருத்திவிக்கிற தினால் நெருப்பைப் பார்க்க(ப்) பாவத்துக்கஞ்ச வேணுமென்ற வாறு.

விளக்கம்: நெருப்புப் பொல்லாப்புச் செய்தால் உடம்பானாலும் பொருளானாலுஞ் சுடும். பாவமானா லாற்றுத்துக்குப் பொல்லாப்புச் செய்யு மென்கிறதினாலேயும் நெருப்பு அனேகம் விசை நன்மை செய்யும்; பாவமானா லெப்போதும் பொல்லாப்புச் செய்யு மென்கிற தினாலேயும், நெருப்புக்குப் பயப்படுகிறதைப் பார்க்கப் பாவத்துக் குப் பயப்படவேணும் என்பது கருத்து.

சொற்பொருள்: தீயவை–தீமை; தீய. பயத்தல்–உண்டாக்கு தல். தீ–நெருப்பு.

51. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்

(203)

பொருள்: என்றது, தனக்குப் பகையா யிருக்கிறவர்களுக்கும் பொல்லாப்புச் செய்யாம லிருக்கிறது எல்லா அறிவுகளுக்குள்ளே பெரிய அறிவென்று நல்லவர்கள் சொல்லுவார்க ளென்றவாறு.

விளக்கம்: வெவ்வேறே அறிவுகளைக் கொண்டு வேண்டிய செல்வங்களைத் தேடுவாய். ஆனா லதுகளைத் தேடுகிறதைப் பார்க்கத் தேடினதுக்குப் பிறகு, அது அழியாதபடிக்குக் காக்கிறது பெரிய காரிய மாகையில், தன் பகைவருக்கு முதலாய்ப் பொல் லாப்புச் செய்யாதவன் தன் செல்வத்துக்கு அழிவு வருகிறதுக்கு வழி களெல்லா மடைகிறதினால் இது செய்கிறதுக்குக் காரணமான அறிவு எல்லா அறிவுகளைப் பார்க்கப் பெரியது என்பது கருத்து.

சொற்பொருள்: என்ப–என்பார்கள். தீய–பொல்லாப்பு. செல் வர்–அடைவர். செய்யா–செய்யாமல்.

52. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று

(208)

பொருள்: என்றது, பாவஞ் செய்தவனுக்குக் கேடு வரு(தல்) உடம்பி னடியிலே சாகாமல் வாழ்ந்திருக்கிற நிழலுக் கொக்கு மென்றவாறு.

விளக்கம்: உடம்பு நிற்குமட்டும் நிழலிருக்கும்; அப்படிப் போலப் பாவ மிருக்கு மட்டும் கேடு நீங்காமல் பாவியைத் தொடர்ந்து நிற்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: தீயவை–தீமைகள். கெடுதனிழறன்னை–கெடுதல் நிழல் தன்னை. வீதல்–சாகுதல். உறைதல்–உயிர்வாழ்தல். அற்று–உவமைச் சொல்.

22. ஒப்புர வறிதல்

அதிகாரக் கருத்து: அதாவது, மனுஷனுக்குள்ளே வாடிக்கையாய் நடக்கிற ஆசாரங்களும் தானங்களு மறிந்து அவர்களுக்கொத்த தாய்ச் செய்கிறது.

53. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்
(214)

பொருள்: என்றது, லோக வாடிக்கையை யறிந்து செய்கிறவன் உயிருள்ளவ னது செய்யாதவன், செத்தவர்களுக்குள்ளே எண்ணப் படுவா னென்றவாறு.

விளக்கம்: மத்த மனுஷர் செய்கிறாப் போலே செய்கிறது மனுஷருயிருக்குச் சுவாபமான குணமாயிருக்குது என்பதாகையால் வாடிக்கையா யிருக்கிற காரியங்களை(ச்) செய்யாதவ னிடத்திலே உயிருக்குரிய குணங் காணாதபடியினால் உயிரில்லை என்று நினைக்கிறதுக்கு ஏதுவா யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: [சுவடியில் விடுபட்டது]

23. ஈகை

அதிகாரக் கருத்து: அதாவது, தரித்திரருக்குப் பிட்சை கொடுக்கிறது.

54. வறியார்க்கொன் றீவதே யீகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து
(221)

பொருள்: என்றது, ஒண்ணுமில்லாத் தரித்திரருக்கு ஒன்றைக் கொடுக்கிறது தர்ம தானமென்று சொல்லலா, மத்த தானங்க ளெல்லாம் எதிர்க்கக் கொடுத்தலைக் குறிக்கிற குணத்தை யுடைத்தது என்றவாறு.

விளக்கம்: தரித்திரரால் ஒரு பிரயோசனமும் வராதபடியினால் அவர்களுக்குக் குடுக்கிறது தர்மத்தைப் பத்திச்செய்த தான மென்று சொல்லலா, மத்தரித்திர மில்லாதவர்களுக்குக் கொடுக்கிறது நானிம்மாத்திர மவனுக்குச் செய்தால், அவனிம்மாத்திர மெனக்குச் செய்வா னென்கிறதைக் குறித்துக் கொ க்கிறதினா லது எதிர்ப் பிரயோசனத்தைத் தேடுகிற தானமே யல்லாமல், தர்ம தானமல்ல என்பது கருத்து.

சொற்பொருள்: வறியார்-தரித்திரர். ஈதல்-கொடுத்தல். ஈகை-கொடை. எதிர்ப்பு-எதிர்கொடுத்தல். நீர்-குணம்.

55. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்

(225)

பொருள்: என்றது, பசியைப் பொறுக்கிறது தவசிகளுக் குப் பெருமைதானே, ஆனா லந்தப் பசியை மத்தவர்களிடத்திலே கண்டு தீர்க்கிறவனுடைய பெருமைக்குச்சரியல்ல வென்றவாறு.

விளக்கம்: தவசுக்குத் தருமம் பெரியது என்பதனால் தருமஞ் செய்யாமல் தவசைப் பண்ணுகிறதைப் பார்க்கத் தவசுபண்ணாமல் தருமஞ் செய்கிறது நல்லது என்பது கருத்து.

சொற்பொருள்: ஆற்றுவார்-தவத்தோர். ஆற்றல்-முதல்விசை பெருமை, இரண்டாம் விசை பொறுத்த லென்கிற அர்த்தமாகும். மாற்றல்-நீக்குதல். ஆற்றல்-மூன்றாம் விசை பெருமை யென்கிற அர்த்தமாகும்.

24. புகழ்

அதிகாரக் கருத்து: அதாவது, உதாரத்தினாலேயு மற்ற நற் குணங்களாலேயுங் கீர்த்தி கட்டிக்கொள்ளுகிறது.

56. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு

(231)

பொருள்: என்றது, செய்கிற தருமத்தில் புகழை அடைகிறாப் போலே வாழ வேண்டியது; அதேனென்றால், அதினால் வருகிற பிரயோசனத்துக்குப் பெரிய பிரயோசன மனுஷருடைய உயிருக் கில்லை என்றவாறு.

விளக்கம்: தரித்திரருக்கு உதாரமாய்க் கொடுக்கிறது இந்த லோகத்திலே செல்வம், மறு லோகத்திலே மோட்சங் கொண்டுவிடு

கிறபடியினால், உதாரமான குணத்தால் வருகிற பிரயோசனம் எல்லாப் புகழுக் கேதுவா யிராத லோபித்தனத்தோடே வாழாமல், புகழுக் கேதுவா யிருக்கிற உதார ஞானத்தோடே வாழ வேண்டியது என்பது கருத்து.

சொற்பொருள்: ஈதல்-கொடுத்தல். இசை-புகழ். அஃது-அது. அல்லது-அல்லாமல். ஊதியம்-பிரயோசனம்.

57. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று

(236)

பொருள்: என்றது, ஒருவன் பிறந்தால் புகழுக் கேதுவான குணத்தோடே பிறக்கிறதைப் பார்க்கப் பிறவாம லிருக்கிறது நல்லது என்றவாறு.

விளக்கம்: புகழுக் கேதுவான குணத்தோடே பிறவாதவன் அவனிடத்திலே நல்ல குணங்க ளில்லாதபடியினால், இந்தலோகத் திலே நிந்தையுந் துன்பங்களையும் மறு லோகத்திலே மோட்ச மடையாமல் வேண்டிய பொல்லாப்புக்களை யனுபவிப்பா னென் கிறதினா லப்புகழுக் கேதுவான குணங்களோடே யல்லாமல் மத்தப் படி பிறக்கிறது நல்லதல்ல என்பது கருத்து.

சொற்பொருள்: தோன்றல்-பிறத்தல். நன்று-நன்மை. அஃது-அது. இலார்-இல்லாதவர்கள்.

துறவறம்

இயல் கருத்து: அதாவது, மூவாசையத்த முனிவருக் கேத்த புண்ணியம்.

25. அருளுடைமை

அதிகாரக் கருத்து: அதாவது, எல்லா உயிர்கள் மேலே தயை யுடையவனா யிருக்கிறது.

58. அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம்
பூரியார் கண்ணு முள (241)

பொருள்: எல்லா உயிர் மேலே பட்சமாயிருக்கிற அருளென் கிற புண்ணியத்தால் வருஞ் செல்வம் எல்லாச் செல்வங்களுக் குள்ளே சிறப்பான செல்வம். பொருளால் வருகிற செல்வம் கீழ் மனுஷரிடத்திலேயு முண்டாயிருக்கிறதினா லென்றவாறு.

விளக்கம்: அருளென்கிற புண்ணிய மெல்லாருக்கு முசத்தியா யிருக்கிற ஞானிகளுக்கு லட்சணமா யிருக்கிறதினாலேயும் மோட்சத்தை யடைகிறதுக்கு(த்) தப்பாத வழியா யிருக்கிறதினாலே யும் அதினால் வருகிற நன்மை கீழ் மனுஷருக்கும் நரகத்துக்குப் பாத்திரமா யிருக்கிறவர்களுக்கும் பொதுவாயிருக்கிற மத்த நன்மை களுக்குத் தலையான நன்மை என்பது கருத்து.

சொற்பொருள்: பூரியார்-கீழ்மக்கள். கண்-இடம். உள- உண்டு.

26. புலான் மறுத்தல்

அதிகாரக் கருத்து: அதாவது, மாங்கிஷத்தைச் சாப்பிடாமல் கட்டோடே தள்ளுகிறது.

59. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும் (260)

பொருள்: என்றது, ஒரு உயிருங் கொல்லாமல் மாங்கிஷத் தைத் தவிர்க்கிறவனை உயிரெல்லாங் கைகுவித்து வணங்கு மென்ற வாறு.

விளக்கம்: ஒரு உயிருங் கொன்று போடாதபடிக்கு எச்சரிக் கையா யிருந்து, உயிருள்ள வஸ்துக்களுக்கு உயிர்ச்சேதம் வராத படிக்கு அதுகளுடைய மாங்கிஷத்துக்கு ஆசைப்படாமல், அதை தவிர்க்கிறவனை லோகத்தில் கொல்லத்தக்க உயிருள்ள வஸ்துக்க கெல்லா(ந்) தங்களுக்குச் சார்வாயிருந்து தங்க ளுடம்பிலே உயிரை அவனிறுத்தினபடியினால் நன்றியறிந்து வணங்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: கொல்லல்–கொலை செய்தல். மறுத்தல்– நீக்குதல். கூப்பல்–குவித்தல். தொழுதல்–வணங்குதல்.

27. தவம்

அதிகாரக் கருத்து: அதாவது, தன் சரீரத்தைக் கஸ்திப் படுத்து கிறது.

60. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு

(266)

பொருள்: என்றது, இச்சைகளை யாக்கித் தவஞ் செய்கிற பேர்கள் தன் பிரயோசனத்தைச் செய்கிறார்க, ளிச்சையின்படிக்கு நடந்து தவஞ் செய்யாதவர்கள் தங்களுக்குக் கேடு செய்கிறார்க ளென்றவாறு.

விளக்கம்: இச்சைகள் முகாந்திரமாகப் பின்னுக்குத் துன்பம் வருகிறதினா லதுகளை யாக்காமல் தவம் பண்ணாதவன், தனக்குப் பொல்லாப்பு வருத்திவிக்கிறான். அதுகளை யடக்கித் தவம் பண்ணு கிறவன் அதில் வருகிற துன்பங்களுக்குத் தப்பிப் போறதினால் தனக்கு நன்மை செய்கிறான் என்பது கருத்து.

சொற்பொருள்: அவம்–கேடு.

61. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

(267)

பொருள்: என்றது, நெருப்பு உசத்தியான பொன்னைச் சுடச்சுட விளக்கும். அப்படிப் போல, தவத்தின் கஷ்தி தவசியை வாதிக்க வாதிக்க அவனுடைய உயிர் ஒளியாய்ப் போமென்றவாறு.

விளக்கம்: பொன், தன்னோடே கலந்திருக்கிற அசடுகளை நெருப்பிலே போக்கிச் சுத்தமாய்ப் போம்; அவ்வண்ணமே தவசிகளுடைய உடம்பின் வாதினையிலே ஆற்றுமத்தோடே கலந்திருக்கிற குற்றங்களும் பொல்லாத இச்சைகளும் நீங்கி, ஆற்றுமஞ் சுத்தமாய்ப் போம் என்பது கருத்து.

சொற்பொருள்: அரும்பொன்–பெறுதற்கரிய பொன். ஒளி–பிரகாசம். நோற்கிற்பவர்–தவத்தோர்.

28. கூடாவொழுக்கம்

அதிகாரக் கருத்து: அதாவது, மனசோடே கூடாத ஞானங் காண்பிக்கிற நடத்தை மனசிலே அஞ்ஞானம் நிற்க, வேஷத்திலே ஞானங் காண்பிக்கிறது.

62. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்
(272)

பொருள்: என்றது, வானகத்துக்குச் சரியாய் உசத்தியான வேஷம் யென்ன பிரயோசனத்தைச் செய்யுந் தன்னெஞ்சு தானே யறிந்து குற்றத்தைச் செய்தா லென்றவாறு,

விளக்கம்: நெஞ்சிலே குற்றத்தைத் தவிராத அஞ்ஞான முண்டாயிருக்க யெத்தனை உசத்தியான ஞான வேஷத்தை எடுத்தாலும் அது, பொய்யான ஞானமாயிருக்குமே யல்லாமல் மெய்யான ஞானமாயிராது; ஒரு நன்மையுஞ் செய்யாது என்பது கருத்து.

சொற்பொருள்: வான்–வானம். தோற்றம்–வேஷம். எவன்–என்ன? நெஞ்சம்–நெஞ்சு.

63. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று
(273)

பொருள்: என்றது, ஞானத்தின் பெருமை யில்லாத குணத்தை யுள்ளவன், ஞானத்தின் வேஷத்தை எடுக்கிறதும், பசு புலியின் தோலால் தன்னுடம்பை மூடிப் பயிர்களிலே மேய்கிறது மொக்குமென்றவாறு.

விளக்கம்: பசு, புலி வேஷத்தை எடுத்துப் பயிர்களில் மேய்ந்தால், அதைக் கண்டவர்கள் புலியென்று நினைத்துப் பயத்தினாலேயும், புலி புல்லைத் தின்னாதென்கிற நினைவினாலேயுந், துரத்தப் போறதில்லை. ஆனா லதுக்குள்ளே பசு, பயிருக்கு வேண்டிய

சேதம் பண்ணும். அப்படிப் போலே, மனசிலே ஞானியா யிராத வன், ஞானி வேஷமெடுத்துத் திரிந்தால் அவனைக் கண்டவர்கள், ஞானி யென்று நினைந்து வணக்கத்தினாலேயும், ஞானி பாவம் செய்யா னென்கிற நினைவினாலேயு மவன் போற போக்குகளிலே அவனுக் கொரு விக்கினமுஞ் செய்யார்க, ளானாலதுக்குள்ளே அவன் வேண்டிய தாறுமாறுகளைச் செய்வா னென்பது கருத்து.

சொற்பொருள்: வலி-பெருமை. இல்-இலாத. நிலைமை-குணம். வல்லுருவம்-வலியுள்ள ரூபம். பெற்றம்-பசு. பைங்கூழ்-பயிர்.

64. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று

(274)

பொருள்: என்றது, தவவேஷத்துக்குள்ளே தன்னை மறைத்துத் தவத்துக்கு ஏலாத காரியங்களைச் செய்கிறதும் குறவன் தன்னை(ச்) செடிக்குள்ளே மறைத்துக் குருவிகளைக் கட்டுகிறது மொக்கு மென்றவாறு.

விளக்கம்: குருவிகளைப் பிடிக்கிற குறவன் அவைகளுக்கு மோசம் பண்ணுகிறதுக்காக வேண்டி, அதுகளை ஏய்த்துப் போடு கிறாப் போலே, ஞான வேஷமெடுக்கிற அக்கியானிகள் மனுஷருக்கு மோசம் பண்ணுகிறதுக்கு அவர்களை ஏய்த்துக்கொண்டு திரிகிறவர் களே யெல்லாமல், ஞானத்தை யுடைத்தவர்களல்ல என்பது கருத்து.

சொற்பொருள்: அல்லவை-தவமல்லாத காரியங்களை. புதல்-செடி. வேட்டுவன்-வேடன். புள்-குருவி. சிமிழ்தல்-கட்டல். அற்று-உவமைச்சொல்.

65. கணைகொடி தியாழ்கோடு செவ்விதாய் கன்ன
வினைபடு பாலாற் கொளல்

(279)

பொருள்: என்றது, அம்பு செவ்வையா யிருந்தாலுங் கொடுமை யுடைத்தது தானே. வீணை கோணலா யிருந்தாலும் இன்ப முடைத்தது தானே. அப்படிப்போல, அவனவனுக்குண்டான குணங்களுக்குத் தக்கது மனுஷரை எண்ணிக்கொள்ள வேண்டிய தென்றவாறு.

விளக்கம்: அம்பு, பார்வைக்கு நல்ல ரூபமாயிருந்தாலுங் கொடுமையான தொழில் செய்கிறதினால் கொடிதென்கிறது. வீணை பார்வைக்குக் கோணலாயிருந்தாலு மின்பமான தொழில் செய்கிற தினால் இனிதென்கிறது. அப்படிப் போல ஒருவன் ஞானி வேஷ மெடுத்துக் கொண்டாலும் ஞானத்துக் கேலாத காரியங்களைச்

செய்தால், அவனை அஞ்ஞானி யென்றெண்ண வேணும். ஞானி வேஷ மில்லாதவன் ஞானத்துக் கேற்க நடந்தால், அவனை ஞானி யென்றெண்ண வேணும் என்பது கருத்து.

சொற்பொருள்: கணை-அம்பு. கொடிது-கொடுமையுள்ளது. இழாய்-வீணை. கோடு-கோணல். செவ்விது-அழகுள்ளது; ஆங்கு-அப்படி. அன்ன-உவமைச் சொல். வினை-செயல். படு-படும். பால்-குணம். கொளல்-எண்ணிக்கொள்ளுதல்.

66. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்

(280)

பொருள்: என்றது, சடை வளர்க்கவுந் தலை மொட்டை யாக்க (வுந்) தேவையில்லை; பெரியவர்கள் தவசுக் காகாதென்று சொல்லு கிற காரியங்களை நீங்கச் செய்தா லென்றவாறு.

விளக்கம்: குற்றங்களை நீக்கி, ஞானத்துக் கேற்க நடவாதே போனால், சடை வளக்கிறதிலேயுந் தலை மொட்டையாக்கிறதினா லேயு மிதுமுதலான தவ வேஷங்களிலேயுஞ் சாரமில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: மழித்தல்-மொட்டையாக்குதல். நீட்டல்-சடை நீட்டல். உலகம்-லோகம். பழித்தல்-குறை சொல்லுதல். ஒழித்தல்-விடுதல். விடின்-விட்டால்.

29. கள்ளாமை

அதிகாரக் கருத்து: அதாவது, பிறத்தியார் பொருளே வஞ்சனை யாக எடுத்துக்கொள்ளக் கருதாமை.

67. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்

(282)

பொருள்: என்றது, களவை மனசிலே நினைத்தாலும் பாவமா யிருக்கிறதினால் பிறத்தியார் பொருளை வஞ்சனையாகவே எடுத்துக் கொள்ளுவே னென்கிற நினைவை முதலாய் நினைக்க வேண்டா மென்றவாறு.

விளக்கம்: பிறந்தவனுக்கு களவாணாம லிருக்கிறது (மாத்திரம்) பத்தாது; களவி னினைவு முதலா யாகாது யென்பது கருத்து.

சொற்பொருள்: உள்ளம்-மனம். உள்ளல்-நினைத்தல். தீது-குற்றம். பிறன்-பிறத்தியான். கள்ளம்-வஞ்சனை. கள்வேம்-கள்ளுவோம். கள்ளல்-களவு.

68. களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(283)

பொருள்: என்றது, களவாண்டு ஆகிற பிரயோசனம் தன்னுடைய எல்லை கடந்தால் போலும் அழிவு கொண்டுவிடு மென்றவாறு.

விளக்கம்: வைக்கலிலே பத்தியிருக்கிற நெருப்பு வைக்கலளவிலே நில்லாமல், அதினுடைய எல்லை கடந்து கிட்ட யிருக்கிற தெல்லாத் தையுஞ் சுடும். அப்படிப் போல, களவினால் வந்த பொரு ளழிந்து போறது மல்லாம லழிகிறபோது தன்னுடைய அளவிலே நில்லாமல் அதைக் கடந்து களவில்லாமல் சம்பாதித்த பொருளுக்கு மழிவு கொண்டுவிடும் என்பது ஒரு கருத்து.

களவினால் வந்த பிரயோசனம், தான் கொண்டிருக்கிற பாவ மென்கிற கேடல்லாமல் தனக்குப் பிரத்தியேகமா யிருக்கிற புண்ணியங்களுக்குங்கூட அழிவு கொண்டுவிடும் என்பது வேறே கருத்து.

சொற்பொருள்: ஆக்கம்–இலாபம். இறத்தல்–மிகுதல்.

30. வாய்மை

அதிகாரக் கருத்து: அதாவது, சத்திய வாக்குடையவனாயிருக்கிறது.

69. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்

(293)

பொருள்; என்றது, உன்னுடைய நெஞ்சு, அது பொய்யென்றறிந்து பொய் சொல்லாதே; அதேனென்றால், சொன்னதுக்குப் பிறகு உன்னெஞ்சு தானே யுன்னை வாதிக்கு மென்றவாறு.

விளக்கம்: நெஞ்சறிந்த பொய் சொன்னா லதுக்குச் சாட்சியா யிருந்த நெஞ்சு பொய் சொன்னவனுக்கு எப்போது மந்தக் குற்றத்தினவலட்சணத்தைச் சொல்லிக் காட்டுகிறபடியினா லவனுக்கு வாதினை செய்யுமென்பது கருத்து.

சொற்பொருள்: பொய்யற்க–பொய் சொல்ல வேண்டாம்.

70. புறந்தூய்மை நீரா னமையும் யகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்

(298)

பொருள்: என்றது, உடம்பினுடைய சுத்தம் தண்ணீரினால், மனசின் சுத்தம் சத்தியவாக்கினாற் காணப்படு மென்றவாறு.

விளக்கம்: உடம்பு சுத்தமாய்க் காண்கிறதுக்குத் தண்ணீர் காரணமாயிருக்கிறாப் போலே, ஒருவன் மனசிலே கவடென்கிற அசுத்த மில்லை என்றறிகிறதுக்கு அவனுடைய மெய்மொழிகள் காரணமா யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: புறம்-உடம்பு. தூய்மை-சுத்தம். அமைதல்-உண்டாதல். அகம்-மனம். வாய்மை-மெய்மை.

31. வெகுளாமை

அதிகாரக் கருத்து: அதாவது, காரண முண்டானாலு, மில்லாதே போனாலும் ஒருவரையுங் கோபித்துக்கொள்ளாம லிருக்கிறது.

71. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற

(304)

பொருள்: என்றது, முகத்தின் சந்தோஷத்தையும் மனசின் மகிட்சியுங் கெடுக்கிற கோப மென்கிற உட் பகையாளிக்கு மிஞ்சின பிற பகையாளிக ளுண்டோ? யில்லை என்றவாறு.

விளக்கம்: துறந்தாருக்குப் பிறத்திப்பட்ட பகையாளிகள் எத்தனை பொல்லாப்புச் செய்தாலு மவர்களுடைய பிரதான நன்மையாகிற ஞானத்தைக் கெடுக்கமாட்டார்கள். சினமோ வென்றால், முகத்தினு மகத்தினுஞ் சீரழிந்து ஞானிகளுக்கு(ப்) பிரதான லட்சணமா யிருக்கிற அருளை யழிக்கிறதினா லவர்களுடைய ஞானத்தைக் கெடுக்கு மென்கிறதினாலே எல்லாப் பிற பகையும் பார்க்க, கோப மென்கிற உட்பகை யவர்களுக்குப் பொல்லாதது என்பது கருத்து.

சொற்பொருள்: நகை-சிரிப்பு. உவகை-மனமகிட்சி. கொல்லல்-கெடுதல். சினம்-கோபம். உளவோ-உண்டோ. பிற-பிறத்திப்பட்ட.

72. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்

(305)

பொருள்: என்றது, தனக்குத் துன்பம் வராதபடிக்குத் தன்னைக் காத்தால், தன்னிடத்திலே கோப எழும்பாதபடிக்குக் காத்துக் கொண்டே யிருக்கவேணும். காக்காதே போனால், தனக்குத்தானே அந்தக் கோபம் வேதினை செய்யு மென்றவாறு.

விளக்கம்: கோபமானது, ஞானத்தைக் கெடுக்கிறபடியினாலே அஞ்ஞானிகளுக்குண்டான துன்பங்களெல்லாங் கொண்டுவந்து விட்டு வாதினை செய்யு மென்பது கருத்து.

சொற்பொருள்: காக்கில்–காத்தால். சினம்–கோபம். காவாக் கால்–காக்காதே போனால். கொல்லல்–கெடுத்தல்.

32. இன்னா செய்யாமை

அதிகாரக் கருத்து: அதாவது, ஒருத்தனுக்குப் பொல்லாப்புச் செய்யாம லிருக்கிறது.

73. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்

(319)

பொருள்: என்றது, பிறத்தியாரிடத்திலே பொல்லாப்புடைய முந்தின பங்கு செய்தால், தனக்குப் பொல்லாப்புடைய பிந்தின பங்கு தானே வருமென்றவாறு.

விளக்கம்: பொல்லாப்புச் செய்தலுக்குப் பொல்லாப்பு வருதல் நிச்சயமாகையினால் பிறத்தியாருக்குப் பொல்லாப்புச் செய்த லென் கிற முந்தின பங்கு செய்தால், பொல்லாப்பு வருத லென்கிற பிந்தின பங்கு, தனக்கு அவர்களால் வராதே போனாலும் எந்தவிதத்திலே யானாலு மவசியமாய் வரும் என்பது கருத்து.

சொற்பொருள்: பிறர்–பிறத்தியார். இன்னா – பொல்லாப்பு. பகல்–பங்கு. செய்யில்–செய்தால். முற்–முன். பிற்–பின்.

74. நோயெல்லா நோய்செய்தார் மேலவாம்
நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்

(320)

பொருள்: என்றது, பொல்லாப்புச் செய்தவன் பேரிலே பொல் லாப்பெல்லாம் விழுகிறது நிலவரமாகையி லப்பொல்லாப் பில்லாம லிருக்க ஆசையா யிருக்கிறவன், பிறத்தியாருக்குப் பொல்லாப்புச் செய்யா னென்றவாறு.

விளக்கம்: பிறத்தியாருக்குப் பொல்லாப்புச்செய்தால் தனக்குப் பொல்லாப்பு வருகிறதுக்குக் காரணமா யிருக்கிறதினால் தனக்குப் பொல்லாப்பு வராதபடிக்குப் பண்ணவேணுமானா லதுக்குக் காரணமா யிருக்கிற பிறத்தியாருக்குப் பொல்லாப்புச் செய்தலைத் தவிர வேணுமென்பது கருத்து.

சொற்பொருள்: நோய்–துன்பம். இன்மை – இல்லாமை. வேண்டல்–விரும்புதல்.

33. கொல்லாமை

அதிகாரக் கருத்து: அதாவது, உயிருள்ள வஸ்துக்களுக் குயிர்ச்சேதம் பண்ணாம லிருக்கிறது.

75. உயிருடம்பி னீக்கியா ரென்பர் செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்

(330)

பொருள்: என்றது, குறைந்த உடம்போடே பொறுக்கக் கூடாத துன்பங்களுக்குள்ளே வாழுகிறவனைக் கண்டால், இப்படிக் கொத்தவன் யாதொரு உயிரை(த்) தனக்குரிய உடம்பிலே யிருந்து நீக்கிப் போட்டவனென்று சொல்லுவார்கள் அறிவுடையா ரென்ற வாறு.

விளக்கம்: அறிவுடையா ரொருவன் குஷ்ட வியாதியினாகிலும் கிரந்தி வியாதியினா லாகிலும், விஷக் கடியினா லானாலுங் கை, கால், விரல், கண், மூக்கு, உதடு இதுமுதலான அவையவங்கள் குறைந்ததுகள், தரித்திரத்தையு மிதுமுதலான துன்பங்களை யனுப விக்கிறதைக் கண்டா லித்தனை கடினமான ஆக்கினை பெரிய பாதகங்களுக்கு வருமென் றறிகிறதினா லவனைக் கொலைபாதக னாக்குமென்று சொல்லுகிறதுக்கு ஏதுவா யிருக்குமென்பது கருத்து.

சொற்பொருள்: நீக்கியார்–நீக்கினவர்கள். என்பர்–என்பார்கள். செயிர்–குறை. தீ–பொல்லாது. வாழ்க்கையவர்–வாழுகிறவர்கள். செல்லா–செல்லாத,

34. நிலையாமை

அதிகாரக் கருத்து: அதாவது, இவ்வுலோகத்திலே யுண்டான தெல்லாம் நிக்கிறதில்லை என்றறிகிறது.

76. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை

(331)

பொருள்: என்றது, நில்லாத காரியங்கள் நிக்குமென்று நினைக்கிறதுக் கேதுவான புத்திக் குறைச்சலை உடையவனா யிருக்கிறது மகா யிழுப்பென்றவாறு.

விளக்கம்: இந்த லோகத்துச் செல்வங்க ளென்றைக்கு நிக்கு மென்று நினைத்தா லதின்பேரிலே பத்துதலா யிருக்கிறதுக்கு ஏது வாகையில் துறந்தவன், இச்சைகள் முகாந்திரமாக வருந்துன்பங்க ளெல்லா மனுபவிப்பா னென்கிறதினா லிப்படிப்பட்ட கொஞ்சப் புத்தி அவனுக்கு வெகு கேடு என்பது கருத்து.

சொற்பொருள்: நிலையின-நிலையுள்ள காரியங்களோடே கூடின. இனம்-கூட்டம். உணர்தல்-படித்தல். புல்-இகட்சிக் குறிப்பு. அறிவாண்மை-அறிவு, கடை-குற்றம்.

77. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல

(337)

பொருள்: என்றது, ஒருட் சணத்தளவிலே உயிரோடே யிருப் பேனென்று (விவ)ரமா யறியாதவர்கள் கோடிக்குள்ளேயு மடங்காத வெகு யோசனை பண்ணுகிறவர்க ளென்றவாறு.

விளக்கம்: சாவு என்றைக்கு வருமென்று ஒருத்தருக்கும் தெரி யாத போதே, இவ்வுலோகத்தி லெப்போது மிருக்கத்தக்கவனைப் போலே இவ்வுலகத்துச் செல்வங்கள் பேரிலே இத்தனை யாசையும் விசாரமுமா யிருக்கிறது புத்திக் குறைச்ச லென்பது கருத்து.

சொற்பொருள்: அறியார்-அறியாதவர்கள். கருதல்-நினைத்தல்,

78. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்

(334)

பொருள்: என்றது, நாளென்கிறது தன்னைப் பொழுதிளை(வு) வருகிற ஒரு மாத்திரை போலே காண்பிக்கிறது. ஆனாலதின் காரியத்தைக் கண்டுபிடித்தால் உயிரை யறுக்கிற ஈடு வாளா யிருக்கு மென்றவாறு.

விளக்கம்: நாளுக்கு நாள் மனுஷனுடைய ஆயிசு குறைந்து போறபடியினால் ஈருவாளொரு மரத்தை யறுத்தது குறைத்துப் போடுகிறாப் போலே நாளானது மனுஷனுடைய ஆயிசைப் போக்கு மென்பதாகையில் ஆயிசு நில்லாது என்பது கருத்து.

சொற்பொருள்: ஈர்தல் - அறுத்தல். உணர்தல்-அறிதல். பெறின்-பெற்றால்.

79. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு

(338)

பொருள்: என்றது, குருவியானது முன்னே முட்டையோடே யொண்ணா இருந்து, பிறகு முட்டை தனியா யிருக்கப்பண்ணி, அதை விட்டுப்போட்டுப் பறக்குமே அப்படித்தானே யிருக்கும் உடம்புக்கு முயிருக்கு முண்டான உறவென்றவாறு. குருவி முட்டையோ டொண்ணா யிருந்து, பறக்கிற பருவம் வந்தாப் போலே அதைவிட்டுப் பறந்து திரும்பி முட்டைக்குள்ளே நுழையத் தக்கதில்லை என்கிறது போல உயிரானது உடம்போடே ஒண்ணா யிருந்து சாகிற பக்குவம் வந்தால் உடம்பைவிட்டு அப்பாலே போய்த் திரும்பி உடம்புக்குள் புகத்தக்க தில்லை என்கிறதினால் மனுஷருடைய உடம்புக்கும் நிலையில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: குடம்பை-முட்டை. தனித்தல்-தனியா யிருக்கப் பண்ணுதல். புள்-குருவி. அற்று-உவமைச் சொல். இடை-இடம். நட்பு-சிநேகம்,

80. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

(339)

பொருள்: என்றது, மனுஷருடைய சாவு நித்திரைபோலு, மனுஷருடைய பிறப்பு நித்திரைக்குப் பிறகு மிழிப்பு போலு மென்றவாறு.

விளக்கம்: எப்போது உறங்கிறதுக்கு மெப்போது மிழிச்சிருக்கிறதுக்கு மவகாச மில்லாமல் நித்திரையு மிழிப்பு முறை முறையாக வருகிறாப் போலே, மனுஷருடைய சாதிக்குச் சாவும் பிறப்பு முறை முறையாக வருகிறது என்பதினால் சாவிலேயும் பிறப்பிலேயும் நிலை யில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: உறங்கல்-நித்திரை செய்தல். சாக்காடு-சாவு. விழித்தல்-மிழித்தல்.

35. துறவு

அதிகாரக் கருத்து: தாவது, செல்வங்கள் பேரிலேயுந் தன்னுடம்பின் மேலேயும் உண்டான பற்றுதலை விடுகிறது.

81. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு

(347)

பொருள்: என்றது, பற்றுதலைப் பேணி விடமாட்டாதவர்களை(த்) துன்பங்கள் தொடர்ந்து கொண்டு விடமாட்டா தென்றவாறு.

விளக்கம்: செல்வங்கள் மேலேயுந் தன்னுடம்பின் மேலேயும் பத்துதலா யிருக்கிறது, அநேகம் பாவங்களுக் கேதுவாகையில் அந்த(ப்) பற்றுதலை விடாதவனை அந்த(ப்) பாவங்களால் வருகிற கேடு ஒருக்காலும் விடாது என்பது கருத்து.

சொற்பொருள்: பற்றல்-பற்றிக் கொள்ளுதல். விடாஅ-விடாத. இடும்பை-துன்பம். பற்று-பற்றுதல்.

82. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்

(348)

பொருள்: என்றது, எல்லாப் பத்துதலும் நீங்கப்பண்ணித் துறந்தவர்கள் மோட்சத்தை யெதுத்தவர்கள் மத்தவர்கள் மயங்கி இச்சைகளுடைய வலையிலே யகப்பட்டவர் களென்றவாறு.

விளக்கம்: யெல்லாப் பற்றுதலும் விட்டவனுக்கு மோட்சத்தை யடைகிறதுக்கு ஒரு விக்கின மில்லாதபடியினால் மோட்சம் அவன் வசமா யிருக்குதென்று சொல்லாமல் பத்துதலை விடாதவனுக்கு வலைக்குள்ளே யகப்பட்டவனை எங்கும் போகாதவனுக்கு வலை மறிக்குமே அப்படிப் போல, மோட்சத்துக்குப் போறதுக்கு அந்தப் பற்றுதல்தானே தடை பண்ணுமென்கிறதினால், அவன் மோட் சத்தை யடைகிறதுக் கவகாச மில்லாமல் கிடப்பான் யென்பது கருத்து.

சொற்பொருள்: தலைப்படுதல் – எதிர்த்தல். தீரத்துறந்தார்-முற்றுந் துறந்தவர்கள். வளைப்படுதல்-சிறைப்படுதல். மற்றை யவர்-மற்றவர்கள்.

83. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

(350)

பொருள்: என்றது, பற்றுத லில்லாத கடவுள் பேரிலே பற்றுதலை விடாமல் வை; அந்தப் பற்றுதலை(த்) தானே கெட்டியா யிருக்கப்பண்ணு, மற்றப் பற்றுதலை விடுகிறதுக் கடைமானமாக வென்றவாறு.

விளக்கம்: பொன்னை யறியாதவன் இரும்பு மேலே பிரியமா யிருப்பான். ஆனா லப்பொன்னுடைய அருமை அறிந்தாப் போலே பொன்மேலே ஆசை வைப்பான். அது தவிரப் பொன்னுடைய நன்மைகளை மேன்மேலு மறிந்து பொன்னுடைய ஆசை வந்திருக் கிறதுக் களவாக இரும்பு மேலே இருந்த ஆசை குறைந்துபோம். அப்படிப் போல, மெய்யறியாமையினால் லோகத்துச் செல்வங்கள் மேலே பற்றுதலா யிருக்கிறவன் கடவுளை யல்லாமல் மற்றதெல்லாம்

நில்லா தென்கிற மெய்யறிந்தாப் போலே, கடவுள் பேரிலே பற்றுதல் வைக்க வேண்டியது.

மீளவு மற்றப் பற்றுதல் மேன் மேலுங் குறைந்துபோய் முழுதலும் விட்டுப்போறதுக்கு அடைமான மென்ன, கடவுளின் நன்மைகளை மேன்மேலுந் தியானித் தறிந்து அவர் பேரிலே வைத்த பற்றுதலை மேன்மேலும் வர்த்திக்கப் பண்ணினால் மற்ற பற்றுதலெல்லாம் விட்டுப்போ மென்று கருத்து.

சொற்பொருள்: பற்றல்-பற்றிக் கொள்ளுதல். பற்றற்றான்-பற்றுத லில்லாதவன். பற்று-பற்றுதல். விடற்கு-விடுகிறதுக்கு,

36. மெய்யுணர்தல்

அதிகாரக் கருத்து: அதாவது, காரியங்களுடைய மெய்யான குணங்களை ஆராய்ந்தறிகிறது.

84. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

(355)

பொருள்: என்றது, எந்தப் பொருள் கண்டாலும், எந்த வகையா யிருந்தாலும், அந்தப் பொருளின் மெய்யான குணங் களைக் கண்டாலும், எந்த வகையாயிருந்தாலும், அந்தப் பொருளின் மெய்யான குணங்களைக் கண்டுபிடிக்கிறது மெய்யறித லென்ற வாறு.

விளக்கம்: ஒரு பொருள் கண்டாப் போலே ஒரு குணமாய்த் தோணும். அக் குணமாய்த் தோணுதென்று கண்டாப்போலே விடாமல் அந்தக் குண மெய்யான குணமோ அந்தப் பொருளுக்குச் சொல்லியிருக்கிற காரண மெய்யான காரணமோ, அந்தப் பொரு ளிலே சொல்லி இருக்கிற நன்மையுந் தின்மையு மெய்யான நன் மையோ மெய்யான தின்மையோ என்று ஆராய்ந்து பார்த்து அறி கிறது மெய்யறித லாகுமென்பது கருத்து

சொற்பொருள்: எப்பொருள்-எந்தப் பொருள். எத்தன்மைத்து-எந்தத் தன்மை யுடைத்தது. ஆயினும்-ஆனாலும். பொருள்-கடைசியிலே, குணமென்கிற அர்த்தமாகும்.

85. காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி
னாமங் கெடக்கெடு நோய்

(360)

பொருள்: என்றது, ஆசை, வெறுப்பு, மெய்யறியாமை யென்கிற மூன்று குற்றங்களின் பேருங் கூடக் கெடுத்தால், அது களைப் பத்தி வருகிற துன்பங்க ளில்லாதே போகு மென்றவாறு.

விளக்கம்: ஒரு கிராமத்தை அழித்ததுக்குப் பிறகு அதின் குட்டிச் சுவருகள் நின்றா லந்தக் கிராமத்தின் பேரும் நிற்கும். (சுவரோ)டே இடித்து நிலமாக்கிப் போட்டால் கிராமத்தின் பேரு மழிந்துபோம். அப்படிப்போல் துறந்தவ னிச்சைகளால் வருகிற ஆசையுங், கோபத் தினால் வருகிற வெறுப்பும், மெய்யறியாமையினால் வருகிற மயக்க மும், இம் மூன்று குற்றத்தை முழுதும் அழிக்க வேண்டிய தென்கிற துக்கு லட்சணமாக அதுகளுடைய பேருங்கூட அழிக்கவேணு மென்றது மல்லாமல், அதுகளை முழுதலும் அழிக்காதே போனா லதுகளால் வருந் துன்பங்கள் துறந்தவனைத் துடர்ந்து கொண்டு நிக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: காமம்–ஆசை. வெகுளி–கோபம். மயக்கம்– மெய்யறியாமை. நோய்–துன்பம்.

37. அவாவறுத்தல்

அதிகாரக் கருத்து: அதாவது, தன்னிடத்திலே இச்சைகளில்லாத படிக்குப் பண்ணுகிறது.

86. அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவா அது மேன்மேல் வரும்
(368)

பொருள்: என்றது, இச்சைக ளில்லாதவர்களுக்கு, துன்ப மில் லாதே போம். அந்த இச்சைகளுண்டானால் துன்பங்களு மிடை விடாமல் மேன்மேலும் வருமென்றவாறு.

விளக்கம்: இச்சைகள் பாவங்களுக் கேதுவா யிருக்கிறபடி யினாலேயும், பாவங்களால் சகல துன்ப முண்டாகிற படியினாலே யும், வேறே காரண மில்லாதே போனாலும், இச்சைகள் மாத்திர முண்டானால் துன்பங்க ளெல்லாம் வரும். அதில்லாதே போனால், ஒரு துன்பமுமில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: அவா–இச்சை. அஃது உண்டேல்–உண்டா னால். தவல்–குறைதல்.

38. ஊழ்

அதிகாரக் கருத்து: அதாவது, பழைய காலத்தில் செய்த பாவ புண்ணியங்கள், ஒருத்த னினையாத சமையத்திலே பலன் கொடுக்க வருகிறதுக்கு யேதுவான **தேவ சித்தம்.**

87. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது

(377)

பொருள்: என்றது, ஐம்பொறிகளால் அனுபவிக்கப்படும் பொருள்களைக்கோடி யளவாகக் கூட்டி வைத்தவர்களுக்குந் தெய்வங் குறித்த பங்கே யல்லாமல் அதிக மனுபவித்த லரிது என்றவாறு.

விளக்கம்: மனுஷர் பிரயாசைப்பட்டு, வேண்டியது சம்பாதிச்சாலும், தான் முன் செய்த பாவங்களுக்குப் பலனாக, அதை யனுபவிக்கிறதுக்குத் தேவ சித்த மில்லாதே போனால், அதை யனுபவிக்கப் போகிறதில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: வகுத்தான்-படைத்தவன். வகுத்தல்-பங்கிடுதல். வகை-கூறுபாடு. தொகுத்தல்-கூட்டல். துய்த்தல்-நுகர்தல்.

பொருட்பால்

பால் கருத்து: அதாவது, பொருளின் பேரிலே பாடுகிற பிரிவு.

அரசியல்

இயல் கருத்து: அதாவது, ராசாவினுடைய தொழிலுக்கேத்த குணங்கள்.

39. *இறைமாட்சி*

அதிகாரக் கருத்து: அதாவது, ராசாவுக்கு நற்குணங்களாலும் நல்ல நடக்கைகளாலும் வேண்டிய பெருமை.

88. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லன்
மீக்கூறு மன்ன னிலம்

(386)

பொருள்: என்றது, அரசன், பிரசைகள் தன்னை எளிசாய்க் கண்டு பேசுகிறதுக்கு இடங் கொடுக்கிறவனுமாய், பிரசைகளைக் கஷ்திப் படுத்துகிற வார்த்தை சொல்லாதவனுமா யிருந்தா, லவனுடைய சீர்மையை லோக முசத்திச் சொல்லுமென்றவாறு,

விளக்கம்: அந்தக் குணங்களை யுடைய அரசன் சீர்மையிலே, கேழ்வியுண்டு! கேழ்வி யுண்டானால், நீதியுண்டு: நீதியுண்டானால், செல்வமுண்டு. ஆகையா லெல்லாராலுஞ், செல்வமான சீர்மை என்று சொல்லப்படும் என்பது கருத்து.

சொற்பொருள்: காட்சி–தெரிசனம். சொல்லனல்லன்–சொல்லாதவன். ஏல்–ஆனால். மீ–மிகுதி. கூறல்–சொல்லுதல். மன்னன்–ராசா.

89. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை
வேந்தன்
கவிகைக்கீட் டங்கு முலகு

(389)

பொருள்: என்றது, காதுக்குக் கசப்பாயிருக்கிற சொற்களைப் பொறுக்கத்தக்க குணமுள்ள அரசருடைய குடைக்குக் கீழ்லோகந் தங்கு மென்றவாறு.

விளக்கம்: ராசா வொரு காரியஞ் செய்ய வேணுமென்றிருக்கிற போது, மந்திரிமார், இது அனியாயம், இது தாறுமாறு, இது செய்ய வாகாது, என்று சொன்னால், ராசாவுடைய காதுக்குப் பொருந்தாத சொல்லாயிருக்குமே. இப்படிப்பட்ட சொற்களைப் பொறுமை யோடே கேட்டுக்கொண்டு, அதுக்குத் தக்கது நடக்கிற அரசனி டத்திலே புண்ணியமும் நீதியும் நீங்காமல் நிக்கிறதினால் அவனுக் கொரு விக்கினமும் ஒரு துன்பமும் வராது என்பதாகையில் வேணு மானால் லோக மெல்லாமாளுவான் என்பது கருத்து.

சொற்பொருள்: கைத்தல்-கசத்தல். பண்பு-குணம். வேந்தன்-ராசாகவிகை-குடை. உலகு-லோகம்.

40. கல்வி

அதிகாரக் கருத்து: அதாவது, ராசா தன் தொழிலுக்கு வேண்டிய சாஸ்திரங்களைப் படிக்கிறது.

90. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்கு தக

(391)

பொருள்: என்றது, படிக்கத்தக்க சாத்திரங்களைக் குறையற்ற பிரகாரமாகப் படிக்க வேணும். படித்ததுக்குப் பிறகு, அந்த சாஸ் திரங்கள் காண்பித்த நெறியிலே நிக்க வேணுமென்றவாறு.

விளக்கம்: ராசா வறியவேண்டிய வேதசாஸ்திரமும் நீதி சாஸ்திர மும் பழுதத்த வகையோடே படிக்காதே போனானானாலுங் குறை யில்லாமல் படித்து, அதிலே சொல்லியிருக்கிற பிரகாரத்துக்குத் தக்கது நடக்காதே போனானெங்கிலும், ராச்சியபாரஞ் செவைபடாது என்பதாகையால் அவ்விரு வகையோடே படித்த சாஸ்திரத்தில் பிரயோசன மில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: கற்றல்-படித்தல். கசடு-சந்தேகம். அற-இல் லாமல். கற்பவை-கற்பதுகளை. அதற்கு-அதுக்கு. தகுதல்-உரிமை.

91. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

(393)

பொருள்: என்றது, படிப்புள்ளவர்கள் இரண்டு கண்ணை யுள்ளவர்களென்று சொல்லப்படுவார்கள். படிப்பில்லாதவர்கள்

முகத்திலே இரண்டு புண்ணை யுள்ளவர்களென்று சொல்லப்படு வார்கள் என்றவாறு.

விளக்கம்: படிப்புள்ளவன் கண் தெரியாதவனா யிருந்தாலு மவனுக்குத் தெரியத்தக்க காரியந் தெரிகிறதினால் கண்ணுடையவ னென்று சொல்லலாம். படிப்பில்லாதவனுக்கு ஒன்றுந் தெரியாததி னால் அவன் முகத்திலே கண்ணிருந்தாலுங் காரியங்களைத் தெரி கிறதுக்கு ஏதுவா யிராதபடியினா லில்லாதது போலே யிருக்கும். ஆகையி லவன் முகத்திலே யிருக்கிற கண் குருடன் கண்ணுக்குச் சரியான ரெண்டு புண்ணென்று சொல்லலாம் என்பது கருத்து.

சொற்பொருள்: கற்றோர்–படித்தோர்,

92. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு

(396)

பொருள்: என்றது, தோண்டுகிறதுக்கு அளவாக மணற் கேணியில் தண்ணீருறும்;படிக்கிறதுக் கள வாகமனுஷருடைய அறிவு வளரு மென்றவாறு.

விளக்கம்: கொஞ்சமாய்த் தோண்டினால் ரொம்பத் தண்ணீ ரூறாது; அப்படிப்போல, சிலது படிச்சதினால் பெரிய அறிவு உண் டாகாது. ஆகையால், மேன்மேலும் படிக்க வேண்டியதென்பது கருத்து.

சொற்பொருள்: தொடல்–தோண்டல். அனைத்து–அளவாகும். மாந்தர்–மனுஷன்.

41. கல்லாமை

93. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்

(401)

பொருள்: என்றது, விளையாடப்படும் யத்தனத்திலே கோடு களைச் செய்யாமல், உண்டை யுருட்டுகுறதும், ஒருவன் வேண்டிய சாஸ்திரங்களால் நிறைந்திராமல் சபையிலே பேசுகிறதும் ஒக்கு மென்றவாறு.

விளக்கம்: கோடுக ளில்லாமல் உண்டை யுருட்டினால் கெலித் தலுந் தோத்தலுந் தெரியாததினால் விளையாட்டு செவ்வைபடாது. அப்படிப்போல, வேண்டிய படிப்பில்லாமல் சபையிலே பேசப்

போனால் பேசுகிற காரியத்தை வகை விபரமாகச் சொல்லத் தெரியாததினால் அந்தக் காரியஞ் செவ்வை படாது எனபது கருத்து.

சொற்பொருள்: அரங்கு-வகுத்த தானம். இன்றி-இல்லாமல். வட்டு-உண்டை. ஆடல்-அசைதல். அற்று-உவமைச்சொல். நிரம்புதல்-நிறைதல். நூல்-கல்வி. கோட்டி-சபை. கொளல்-பேசிக் கொள்ளுதல்.

94. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

(403)

பொருள்: என்றது, படிப்பில்லாதவர்களும் வெகு நன்மை யுடையவர்களா யிருப்பார்கள், படித்தவர்கள் சபையிலே பேசாம லிருக்கிறதுக்கு அவகாச முண்டாயிருந்தா லென்றவாறு.

விளக்கம்: பேசாம லிருந்தால் தன்னுடைய அறியாமையை வெளிப்படுத்தாமல் நிந்தைக்கு மவமரியாதத்துக்குந் தப்பிப் போறதி னாலேயும், படித்தவர்களுடைய புத்தி கேள்க்கிறபோது தன்னு டைய அறியாமை மேன்மேலும் மறிந்து படிக்கிறதுக்கு ஆசை பிறக் கிறதுக்கு ஏதுவாயிருக்கிறதினாலேயும் அவர்களுக்குப் பேசாமலி ருக்கிறது வெகு நன்மை என்பது கருத்து.

சொற்பொருள்: நனி-மிகுதி. கற்றார்-கற்றவர்கள். பெறின்-பெற்றால்.

95. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று

(407)

பொருள்: என்றது, நுண்ணிதமான படிப்பின் பெருமை யடைந்து பல சாஸ்திரங்களில் நுழைந்த அறிவில்லாதவனுடைய பெருமையும் அழகு மண்ணால் செய்யப்பட்டதுமாய் அலங்கரிக் கப்பட்டதுமா யிருக்கிற பாவையின் பெருமையு மொக்கு மென்ற வாறு.

விளக்கம்: பாவை யானது, மனுஷர் போடத்தக்க நகைகளாலும் ஆபரணங்களாலும் எத்தினை சோடித்திருந்தாலும் உயிரில்லாததி னால் ஒருக்காலும் மெய்யான மனுஷனாக மாட்டாது; அப்படிப் போல ஒருவன் பெரியவர்களுக்குண்டான பெருமைக ளெல்லாம் பெத்திருந்தாலும் படிப்பில்லாதே போனால் ஒருக்காலு மெய் யாகவே பெரியவனாகமாட்டா னென்பது கருத்து.

சொற்பொருள்: நுண்-நுண்ணிய. மாண்-பெருமை. நுழை-நுண்மை. புலம்-அறிவு, இல்லான்-இல்லாதவன். எழில்-அழகு.

நலம்–பெருமை. புனைபாவை–புனைந்த பாவை. புனைதல்–அலங் கரித்தல். அற்று–உவமைச் சொல்.

96. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு (408)

பொருள்: என்றது, படிப்புள்ளவர்கள் அனுபவிக்கிற தரித் திரத்தைப் பார்க்கப் படிப்பில்லாதவர்க ளனுபவிக்கிற செல்வம் பொல்லாதது யென்றவாறு.

விளக்கம்: தரித்திரம் படிப்புள்ளவர்களுடைய உடம்பை வாதிக்கும்; ஆற்றுமத்துக்குக் கேடு செய்யாது. படிப்பில்லாதவர் களுக்குச் செல்வ முண்டானால் அதினுடைய நிலையாமை தெரியாத தினா லவர்க ளதின்பேரிலே வைக்கிற பற்றுத லனேகம் பாவங்களுக் கேதுவா யிருக்கிறதினா, லவர்களுடைய ஆற்றுமத்துக்குக் கேடு செய்யு மென்பதாகையால் படித்தவன் தரித்திரத்துக்குப்,படியாதவன் செல்வ மிஞ்சின கேடு என்பதுகருத்து.

சொற்பொருள்: நல்லார்–அறிஞர். கண்–இடம். வறுமை–தரித்திரம். இன்னாது–பொல்லாப்பு. கல்லார்–கல்லாதவர்கள். திரு–செல்வம்.

97. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு (409)

பொருள்: என்றது, படிப்பில்லாதவர்கள் மேல்சாதியிலே பிறந் தாலும் படிப்புள்ள கீழ் சாதியாரும் உடைத்த பெருமைக்குச்சரியான பெருமை யில்லாதவர்க ளென்றவாறு.

விளக்கம்: கல்வியினால் வருகிற பெருமை சாதிப் பெருமைக்கு மேலான பெருமையா யிருக்கிறதினால்,கல்வி இல்லாத மேல்சாதியார் கல்வியுள்ள கீழ் சாதியாருக்குங் கீழா யிருப்பார்க ளென்பது கருத்து

சொற்பொருள்: மேற்பிறந்தார் – மேல்சாதியார். ஆயினும்–ஆனாலும். கீழ்பிறந்தார்–கீழ் சாதியார். கற்றார்–கற்றவர்கள். அனைத்து–அளவாகும். இலர்–இல்லாதவர்கள். பாடு–பெருமை.

42. கேள்வி

அதிகாரக் கருத்து: அதாவது, தானறியாத காரியங்களைப் படித்தறிந்தவர்க ளிடைத்திலே கேழ்க்கிறது.

98. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல் (415)

பொருள்: என்றது, வழுக்கலான சேற்று நிலத்திலே திரிகிறவனுக்கு ஊன்றுகோ லுதவுகிறாப் போலே அறிவில்லாதவனுக்குக் கல்வியோடே கூட நல்ல நடக்கைகளை யுடையவனுடைய வாய்ச் சொல்லுதவியா யிருக்கு மென்றவாறு.

விளக்கம்: சேற்றிலே திரிகிறவனை விழாதபடிக்கு ஊன்றுகோல் தாங்கும்; அப்படிப்போல் அறிவில்லாதவர்களை அறியாமை என்கிற மயக்கத்தினால் அவத்தமான காரியங்களிலே விழாதபடிக்கு சிரேஷ்டருடைய வாய்ச்சொல் தாங்கிக்கொள்ளும் என்பது கருத்து.

சொற்பொருள்: இழுக்கல்-வழுக்கல். உழி-இடம். ஊற்றுக் கோல்-ஊன்றுகோல். அற்று-உவமைச்சொல். ஒழுக்கம்-குணம்.

99. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்

(416)

பொருள்: என்றது, சிறியதானாலும் நல்ல புத்திகளைக்கேழ்க்க வேண்டியது; அதேனென்றா லந்தக் கேழ்வி அவ்வளவா யிருந்தாலும் மேலைக்குப் பெரிய பெருமை தரு மென்றவாறு.

விளக்கம்: ஒருத்தன், தினம் ஒரு பணம் கொஞ்சமா யிருக்கு தென்று தள்ளாமல் சபையிலே வைத்தால் பின்னுக்குப் பை ரெம்பிப் போய் ஆஸ்திக்காரனாய்ப் போவான். அப்படிப்போல ஒருவன் பெரியவர்கள் சொல்லுகிற புத்தி எதானாலும் தள்ளாமல் கேட்டால் கடைசியிலே புத்திமானாய்(ப்) போவானென்பது கருத்து.

சொற்பொருள்: எனைத்து-எந்தளவுடைத்து. ஆனும்-ஆனாலும். நல்லவை-நல்லதுகளை. அனைத்து-அளவுடைத்து. ஆன்றல்-மிகுதி.

100. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
தோட்கப் படாத செவி

(418)

பொருள்: என்றது, கேள்வியினால் துளைக்கப்படாத காது சத்தத்தை நன்றாய்க் கேட்டாலும் கேளாத காதின் குணத்தை யுடைத்தது என்றவாறு.

விளக்கம்: மனுஷருடைய காது தெரியாத காரியங்களைக் கேழ்வியினா லறிகிறதுக்கு வழியாகையி லக்கேழ்வி யில்லாதவனுக் குக் காது பிரயோசனஞ் செய்யாததினால் கேளாத காது போலே இருக்குமென்பது கருத்து.

சொற்பொருள்: கேட்பினும் - கேட்டாலும். தகைய - குண முடைத்தது. தொடுதல்-தோண்டல்.

43. அறிவுடைமை

அதிகாரக் கருத்து: அதாவது, 'கல்வியினாலேயுங் கேழ்வியினாலேயும் அடைந்த அறிவைக் கொண்டு காரியங்களுடைய வயணங்களை யறிகிறது.

101. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு

(426)

பொருள்: என்றது, எந்தப் பிரகாரமாக லோகம் நடக்குது லோகத்தோடே கூட அந்தப் பிரகாரமாக நடக்கிறது அரசனுக் கறிவென்றவாறு.

விளக்கம்: எல்லாத்துக்கு மாதி காரணமாய் லோகத்திலே சகலமும் நடப்பிக்கிற கடவுளுக்கு லோகமெல்லாங் கீழ்ப்படிந்து நடக்கிறது; அப்படிப்போல, அரசன் தன் சீர்மை யாளுகிறபடியினால் தனக் காண்டவரில்லை யென்று நினையாமல் தன்னையுஞ் சகலமும் ஆளுகிற கடவுளுக்கு லோகங் கீழ்ப் படிகிறாப் போலே தானுங் கீழ்ப் படிந்து நடக்கிறது, நீதியோடே ராச்சியபாரம் பண்ணிச் செல்வமடைகிறதுக்கும் பாவத்தைத் தவிர்ந்து மோட்சத்தை யடைகிறதுக்கும் ஏதுவா யிருக்கிறதினால் மத்தறிவுகளைப் பார்க்கப் பெரிய அறிவா யிருக்குமென்பது கருத்து.

சொற்பொருள்: எவ்வது-எப்படி. அவ்வது-அப்படி. உறைதல்-ஒழுகல்.

102. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்

(427)

பொருள்: என்றது, அறிவுள்ளவர்கள் வருங் காரியத்தை வருமுன்னே யறிவார்கள். அறிவில்லாதவர்கள் அதை வருமுன்னே யறிய மாட்டார்க ளென்றவாறு.

விளக்கம்: அறிவுள்ளவன் காரியங்களுடைய காரணங்களை யறிகிறதினாலேயுங் காரியங்களை யெண்ணுகிறதினாலேயும் மேலைக்கு வரத்தக்க காரியத்தை இப்போ யிருக்கிற காரணத்தைக் கொண்டு அறிவான். அறிவில்லாதவன் காரியங்களுடைய வயணங்களைத் தெரியாததினாலேயும் யெண்ணாததினாலேயும் வருங் காரியத்தை வந்தாலொழிய மற்றப்படி வருமுன்னே, அது வருமென அறிய மாட்டான் என்பது கருத்து.

சொற்பொருள்: ஆவது-இனி வருங் காரியம். இலார்-இல்லாதவர்கள். அஃது-அது. அறி-அடையாளம். கல்லாதவர்-கல்லாதவர்கள்.

103. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்
(428)

பொருள்: என்றது, அஞ்சத்தக்க காரியத்தை அச்சமில்லாமல் செய்கிறது மிலைச்சத்தனம். அஞ்சத் தக்க காரியத்தை அஞ்சிச் செய்யாம லிருக்கிறது அறிவுள்ளவர்களுடைய லட்சணமென்ற வாறு.

விளக்கம்: அறிவுள்ளவர்கள் வருங் காரியத்தை அறிகிறதினால் பாவம், அநியாயம் இது முதலான காரணங்களுக்குத் துன்பமும் நரகமும் வருமென் றறிந்து, பாவத்தையும் அநியாயத்தையும் அஞ்சிச் செய்யமாட்டார்கள்.

மிலேச்சர் செய்கிற காரியத்தினால் என்ன வருமென்று தெரியாத தினாலேயும் யெண்ணாததினாலேயும் பயமில்லாமல் பாவமும் அநியாயத்தையுஞ் செய்கிறார்கள் என்பது கருத்து.

சொற்பொருள்: அறிவார்–அறிவுள்ளவர்கள்.

44. குற்றங் கடிதல்

அதிகாரக் கருத்து: அதாவது, தன்னிடத்திலே கண்ட குத்தங் களைத் திரும்பி வராதபடிக்குக் கண்டிக்கிறது.

104. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்து ணையாக்
கொள்வார் பழிநாணு வார்
(433)

பொருள்: என்றது, ஒரு தினையரிசிக்குச் சரியான குற்றம் வந் தாலும் ஒரு பனை மரத்துக்குச் சரியான தென்றெண்ணுவார் களதி னால் வருகிற ஈனத்துக்கு அஞ்சுகிறவர்கள் யென்றவாறு.

விளக்கம்: ஒரு சின்னக் குற்றமும் ஈனத்தைக் கொண்டுவிடுகிற தினாலேயும் பெரியவர்களுக் கீனம் பெரிய கேடாயிருக்கிறபடியினா லேயுஞ் சின்னக் குற்றஞ் செய்தாலும் ஈனம் வருமென் றறிகிறவர்கள் இதுக்கு வெகுவாய்ப் பயந்து, அந்தக் குற்றத்தைக் கனமா யெண்ணு வார்கள் என்பது கருத்து.

சொற்பொருள்: துணை–அளவு. ஆம்–ஆகும். வரினும்–வந் தாலும். கொள்வர்–எண்ணிக் கொள்ளுவார்கள். பழி–ஈனம். நாணு தல்–வைக்கப்படுதல்.

105. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு
(436)

பொருள்: என்றது, தன்னிடத்திலே கண்ட குற்றங்களை நீக்கிப் பிரசைக ளிடத்திலே கண்ட குற்றங்களைத் தெண்டித்தால், இதுக்கு மேல் அரசன் நீக்கத்தக்க குற்ற மென்ன வென்றவாறு.

விளக்கம்: பிரசைகள் தவிர்த்த குற்றங்களை அரசனுந் தவிர வேண்டியதாகையில், தான் குற்றங்களைத் தவிராமல் பிரசைகளுடைய குற்றங்களைத் தெண்டித்தால், குற்றமா யிருக்கும். ஆகையாலரசன், பிரசைகளுடைய குற்றங்களைத் தெண்டிக்க வேணுமானால் தானுந் தன் குற்றங்களை நீக்க வேண்டியது என்பது கருத்து.

சொற்பொருள்: *பிறர்–பிறத்தியார். காணல்–தெண்டித்தல். என்–என்ன? இறை–ராசா.*

106. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை

(439)

பொருள்: என்றது, எந்த நாளிலேயுந் தன்னை வெகுவாய் மதிக்க வேண்டாம்; நன்மை செய்யாத செயல்களை விரும்ப வேண்டா மென்றவாறு.

விளக்கம்: தான் பெருமையா யிருக்கிற நாளிலேயுந் தன்னை மற்றவர்களைப் பார்க்கப் பெரியதாக மதிக்கிறதும் நன்மை செய்யாத தீவினைகளை விரும்புகிறதுங் குற்றமா யிருக்கிறதினால் அவ்விரண்டு மரசன் தவிர வேண்டிய தென்பது கருத்து.

சொற்பொருள்: வியத்தல்–புகழ்தல். அற்க–வேண்டாம். எஞ்ஞான்றும்–எப்போதும். நயத்தல்–விரும்புதல். நன்றி–நன்மை. பயத்தல்–உண்டாக்கல். வினை–செயல்.

45. பெரியாரைத் துணைக்கோடல்

அதிகாரக் கருத்து: *அதாவது, பெரியவர்களை(த்) தனக்குத் துணையாக்கிக் கொள்ளுகிறது.*

107. சூழ்வார் கண்ணாக வொழுகுலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

(445)

பொருள்: என்றது, ராசாவைச் சுத்திக்கொண்டிருக்கிற மந்திரிகளவருக்குக் கண்போலே யாயிருந்து அவர்களைக் கொண்டு அரசன் சீர்மைக் காரியங்களை நடத்திறதினால் தன்னைச் சுத்திக் கொண்டிருக்கத்தக்கவர்களை ஆராய்ந்து பார்த்துத் தமக்குத் துணையாக்கிக் கொள்ளவேண்டிய தென்றவாறு.

விளக்கம்: கண்ணுக்கு மோச மிருந்துதனால் செவ்வே நடக்கப்படாது. ஆகையால், ராசாவுக்குக் கண்ணாயிருக்கிற மந்திரிகள் நல்லவர்களா யிராதே போனால் ராசா தன் தொழிலிலே செவ்வே நடக்க மாட்டா னென்கிறதினால் அவர்களுடைய குணங் களைப் பாத்து ராசா அவர்களை(த்) தன்கிட்ட வைக்கவும் தள்ளவும் வேணுமென்பது கருத்து.

சொற்பொருள்: சூழ்வார்–சுத்தியிருக்குறவர்கள். ஒழுகல்–நடத்தல். மன்னவன்–ராசா. சூழ்வாரை–சுத்தியிருக்கிறவர்களை. சூழ்ந்து–ஆராய்ந்து. கொளல்–வைத்துக்கொள்ளுதல்.

108. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்

(447)

பொருள்: என்றது, செவ்வே நடவாத இடத்திலே தனக்கு(க்) கண்டிதமாய்ப் புத்தி சொல்லுகிற துணையின் குணத்தை யுடையவர் களை, பட்சமா யாளுகிற ராசாவுக்குக் கேடு செய்யவல்ல பெரு மையை யுடைத்தவனா ரென்றவாறு.

விளக்கம்: தனக்கு முகத் தாட்சிணை யில்லாமல் புத்தி சொல்லத்தக்க துணைகளை அரசன் பட்சமாய் நடப்பித்தால், நீதி யோடே ராட்சியபாரம் பண்ணுவானென்கிறதினாலே அவருக் கெத் தனை பெலத்த பகைவரிருந்தாலும் இவர்க ளொருகேடும் வராத படிக்கு அவருடைய நீதிக்குப் பலனாகத் தெய்வங்காத்துக் கொள்ளு மென்பது கருத்து.

சொற்பொருள்: இடித்தல்–உறுதிசெய்தல். ஆள்வாரை–ஆளுகிற வர்களை, யார்–ஆர். தகைமையவர்–பெருமையுள்ளவர்கள்.

109. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்

(450)

பொருள்: என்றது, தனக்குப் பெலனில்லாத சமையத்திலே அநேகம்பேர்களைப் பகைக்கிறதைப் பார்க்கப் பத்துப் பங்கு பெரிய கேடு கொண்டிருக்கும் நல்லவர்களுடைய சிநேகிதத்தை விடுகிற தென்றவாறு.

விளக்கம்: அநேகம் பேர்களைப் பகைத்தா லவர்கள் செய்யத் தக்க பொல்லாப்புக்கு எப்படியுந் தப்பிப் போகலாம். நல்லவர் களைத் தனக்குத் துணையாக்காத அரச னவர்களுடைய புத்தி கேழ்க்கிறதுக் கவகாச மில்லாமல் தன்னிடத்திலே அவசியமாய் நடக்கும் பாவங்களாலேயு மநியாயங்களாலேயும் வருகிற கேடு

நீக்கமாட்டாததினா லதைப்பார்க்கப் பெரிய கேடு செய்யுமென்பது கருத்து.

சொற்பொருள்: பல்லார்-பலபேர்கள், கொளலில்-கொள்ளுத லில். பத்தடுத்த-பத்துவிசை. தீமைத்து-பொல்லாப்புடைத்தது. நல்லார்-அறிஞர். தொடர்பு-சிநேகம். விடல்-விடுதல்.

46. சிற்றினஞ் சேராமை

அதிகாரக் கருத்து: அதாவது, தன்கிட்ட அறிவில்லாதவர்களு டைய கூட்டத்தை வையாம லிருக்கிறது.

110. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு

(452)

பொருள்: என்றது, நிலத்தின் குணத்தால் தண்ணீர் தன் குணத்தை மாற்று மப்படிப் போல, மனுஷருடைய அறிவு அவ னோடே பிழங்கிற மனுஷருடைய குணத்துக் கொத்ததாய்ப் போமென்றவாறு.

விளக்கம்: தண்ணீர் தற்சுவாபமாய் நல்லதா யிருந்தாலும், உவர் நிலத்திலே யோடினால், உவர் நீராய்ப் போகும். அப்படிப் போல், மனுஷன் தன் சுவாபமாய் நல்லவனா யிருந்தாலும் பொல்லாத குணங்கள் மனுஷரோடே புழங்கினால், பொல்லாதவனாய்ப் போவா னென்பதாகையில் ஆகாத ஈனத்தோடேயு மாகாத துணை களோடேயுஞ் சேரலாகாது என்பது கருத்து.

சொற்பொருள்: இயல்பு-குணம். திரிதல்-வேறுபடல். அற்று-உவமைச் சொல். மாந்தர்-மனுஷர். இனம்-கூட்டம். இயல்பது-குணமுடைத்தது.

47. தெரிந்து செயல்வகை

அதிகாரக் கருத்து: அதாவது, செய்யத்தக்க காரியங்களை ஆராய்ந்து பார்த்துச் செய்கிறது.

111. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு

(467)

பொருள்: என்றது, ஒரு காரியஞ் செய்யவேணு மென்று துணி கிறதுக்கு முன்னே, அத்தை நன்றா யாராய்ந் தெண்ணவேணு, மத்துணிந்ததுக்குப் பிறகு எண்ணுவே னென்கிறது மகா இழுக் கென்றவாறு.

விளக்கம்: காரியந் துணிகிறதுக்கு முன்னே அது தன்னா லாகுமோ ஆகாதோ வென்று ஆராயாமல் துணிந்து துவக்கினதுக்குப் பிறகு அதெல்லா மெண்ணலா மென்று சொல்லித் துவக்கினால், பிறகு அதை முடிக்கிறதுக்குத் தன்னா லாகாதே போனா லத்தை விடுகிறபோது வெகு லெட்சை கேடா யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: எண்ணுவம்-எண்ணுவோம். இழுக்கு-ஈனம்.

112. நன்றாற்ற லுள்ளுந் தவருண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை

(469)

பொருள்: என்றது, அரசன் வேறரசரிடத்திலே காரியங் களை(க்) கொள்ளுகிறதாக வேண்டி நல்ல உபாயங்களெல்லாஞ் செய்தாலு மதுக்குள்ளே புழை விழும்; அவனவனுடைய குணத்துக் கேற்கச் செய்யாதே போனா லென்றவாறு.

விளக்கம்: அவனவனுக் கேற்கச்செய்த காரிய மெளிசாய்க் கொள்ளலாம். யேறாமல் செய்தால், தாட்சியாய்ப் போமென்ற தினால் அவனவனுடைய குணத்துக் கேற்கச் செய்யாதே போனால் காரிய முடியாதபடி ...... உபாயங்க ளெல்லா மபத்தமாய்(ப்) போமென்பது கருத்து.

சொற்பொருள்: நன்று-நன்மை. ஆற்றல்-செய்தல். தவறு குற்றம். பண்பு-குணம். ஆற்றா-செய்யாத. கடை-இடம்.

48. வலியறிதல்

அதிகாரக் கருத்து: அதாவது, அரசன் தன்னுடைய பெலனும் மெதிராளி பெலனு மறிகிறது.

113. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்

(475)

பொருள்: என்றது, ஒரு வண்டில் மேலே இறகுகளைப் போட் டாலு மந்தப் பண்டம் வண்டிப் பெலத்தை மிஞ்சும்படிக்கு மிகுதி யாய்ப் போட்டால் வண்டிலுடைய அச்சுப், பாரத்தைத் தாங்கா மல் முறிந்துபோ மென்றவாறு.

விளக்கம்: ராசா தனக்குச் சரியான பெலனில்லாத அரசருடைய பகை தாங்கத் தக்கவனா யிருந்தாலு மனேக மரசரொருமிக்கக் கூடி ராசாவுக்கு எதிராய் நின்றா லிவன் தாங்க மாட்டாமல் முறிஞ்சு போவானென்கிறதினால், வண்டிலுக் கிறகுகளைப் போட்டாலது

மிஞ்சிப் போடலாகாது போல, அரசன் தனக்குச் சரியான பெலனில்லாத அரசரைப் பகைத்தாலுமப்படிப்பட்ட அனேக மரசரைப் பகைக்க லாகாது என்பது கருத்து.

சொற்பொருள்: பீலி-இறகு. பெய்தல்-போடல். சாகாடு-வண்டில். இறும்-இற்றுப்போம். சாலுதல்-மிகுதல். பெயின்-போட்டால்.

114. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்

(476)

பொருள்: என்றது, மரத்தினுடைய கொம்பிலே யேறினவன் அதினுனியிலே சென்று, அதைக் கடந்து அப்பாலே யேறவேணு மெனறு துணிந்தாலத் துணிவு அவனுடைய உயிருக்குச் சவாலாய் முடியு மென்றவாறு.

விளக்கம்: ராசா ஒருத்தன்மேல் படையெடுத்து, தன் பெலனுக் கொத்த இடத்திலே சேந்தாப்போலே தன் பெலனுக் கெட்டாத இடத்திலே செல்லவேணு மென்று துணிந்தால், தனக்கவசிய மாய்க் கேடு வருமென்கிறதினால் ராசா, தன்னுடைய வல்லமையு மெதிராளி வல்லமையு மறிந்து நடக்க வேணுமென்பது கருத்து.

சொற்பொருள்: கொம்பர்-கொம்பு. அஃது-அது. இறத்தல்-மிகுதல். ஊக்கல்-துணிதல். இறுதி-சாவு.

49. காலமறிதல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, அரசன் தனக் கேத்ததுமாய் எதிராளிக் காகாததுமா யிருக்கிற காலத்தை யறிந்து நடக்கிறது.

115. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை
யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது

(481)

பொருள்: என்றது, காக்கை பகல் நேரத்திலே கூகையை வெல்லும்; கூகை இருள் நேரத்திலே காக்கையை வெல்லும்; ஆகையா லரசன் தன் பகைவரை வெல்லவேணுமானால் தனக்கொத்த கால மறியவேண்டியது யென்றவாறு.

விளக்கம்: பகைவரை வெல்லவேணுமானால், தன்னுடைய பெல னவர்களுடைய பெலனை மிஞ்சுகிற காலத்திலே அவர்கள் மேலே செல்லவேண்டிய தென்பது கருத்து.

சொற்பொருள்: இகல்-பகை. வேந்தன்-ராசா.

116. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து

(490)

பொருள்: என்றது, கொக்குச் சமையம் பாத்துக்கொண்டு அசையாம லிருக்குமே, அப்படிப்போல, அரசன் தனக் கேத்த காலம் வரமட்டும் சும்மா யிருக்க வேண்டியது. பின்னை, கொக்கு சீருக்கு வந்த இடத்திலே மீனைக் கொத்துமே, அப்படிப்போல், அரசன் தன் பகைவரைத் தாழ்த்துகிறதுக்குச் சீரான காலம் வந்தா லவர்களைத் தாழ்த்த வேண்டிய தென்றவாறு.

விளக்கம்: சீரா யிராத காலத்திலே பகைவர்மேல் சென்றால், வீண் பிரயாசமா யிருக்கிறதுமல்லாமல், தனக்குத்தானே கேடு வருகிறதுக் கேதுவா யிருக்கும். சீரான காலத்திலே செல்லாதே போனால்,சமையந் தப்பிப்போய்ப் பின்னுக்குத் தானினைத்த காரிய முடியா தென்கிறதினால் கொக்குச் செய்கிறாப் போலே காலத்தைப் பார்த்துக்கொண்டு, அது வந்தாப்போலே நினைத்ததை முடித்துப் போட வேண்டியது என்பது கருத்து.

சொற்பொருள்: ஒக்குதல்–ஒத்திருக்கிறது. கூம்பல்–ஒடுங்கல், மற்று–பின்னை. கொத்து–கொத்துதல். சீர்த்த–சீருடைத்த. அதன்–அதினுடைய.

50. இடனறிதல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, அரசன் தனக் கானதுமாய் தன் பகைவருக்கு ஆகாததுமா யிருக்கிற இடத்தை யறிந்து நடக்கிறது.

117. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து

(496)

பொருள்: என்றது, கால மேரையா யிருக்கிற உருளையுடைய பெலத்தைக் கொண்டிருக்கிற பெரிய தேர் கடலிலே யோட மாட்டாது. கடலிலே யோடுகிற கப்பல் நிலத்திலே யோடமாட்டா தென்றவாறு.

விளக்கம்: கடல், தேருக்கேத்த இடமாயிராது. நிலங், கப்பலுக் கேத்த இடமாயிராது. ஆகையால், எத்தனை பிரயாசைப்பட்டா லும் அது கடலிலே, இது நிலத்திலே யோடமாட்டாது. அப்படிப் போல, அரசன் தனக்கேத்த யிடத்திலே பாளையம் போடாமல் தன் பகைவனுக்கு(ச்) சார்வா யிருக்கிற யிடத்திலே போட்டால், எத்தனை யுபாயங்களைச் செய்தாலும் பகைவனுடைய காரிய மோடுமே யல்லாமல், தன் காரிய மோடமாட்டா தென்பது கருத்து.

சொற்பொருள்: ஓடா–ஓடாது. வன்–வலியது. நெடுந்தேர்–நெடியதேர். நாவாய்–கப்பல்.

51. தெரிந்து தெளிதல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, அவனவனுடைய குணங்களை யாராய்ந்து பார்த்து(ச்) சந்தேக மெல்லாந் தெளிந்ததுக்குப் பிறகு மந்திரிகளுக் குத்தியோகங் குடுக்கிறது.

118. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்
(504)

பொருள்: என்றது, ஒருவனுடைய நற்குணங்களு மாராய்ந்து, குற்றங்களு மாராய்ந்து அதுக்குள்ளே எது மிஞ்சினதென் றாராய்ந்து பாத்து, மிஞ்சின குணத்துக்குத் தக்கது அவனை மதிக்க வேணு மென்றவாறு.

விளக்கம்: ஒரு குற்றமு மில்லாதவன் லோகத்திலே கிடையாத படியினா லரசன் ஒருவனை யுத்தியோகத்திலே வைக்க வேணு மானால் அவனிடத்திலே யாதொரு குற்றங் கண்டாப்போலே, அவனை விடாம லவனுடைய நற்குணங்களுங் குற்றங்களுஞ் சோதித்துப் பார்த்து நற்குணங்கள் குற்றங்களுக்கு மிஞ்சி யிருந்தா லுத்தியோகத்துக் காகிறவனென்றும், நற்குணங்களுக்கு(க்) குற்றங்கள் மிஞ்சினா லாகாதவனென்று யெண்ணிக்கொள்ளவேண்டிய தென்பது கருத்து.

சொற்பொருள்: நாடல்–ஆராய்தல். அவற்றுண்–அதுக்குள்ளே. மிகை–மிகுதி. கொளல்–எண்ணிக்கொள்ளுதல்.

52. தெரிந்து வினையாடல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, சந்தேகங்கள் தீத்து ஒருவனை யுத்தியோகத்திலே வைத்ததுக்குப் பிறகு அவனுத்தியோகத்தைச் செய்கிற வகையைச் சோதிக்கிறது.

119. எனைவகையாற் றேறியக் கண்ணும்
வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர்
(514)

பொருள்: என்றது, அநேக மனுஷர் எல்லாவிதத்திலேயு மாராய்ந்து பாத்ததினால் இப்படிக்கொத்தவர்களென்று நிலவரப் பட்டதுக்குப் பிறகும் செய்கிற தொழில் விதத்தினால் பேதகமாய்ப் போகிறார்க ளென்றவாறு.

விளக்கம்: அநேக பேர்களுடைய குணங்களைப் பார்த்து அவர்க ளுத்தியோகத்துக் கான மனுஷரென்று நிலவரப்பட்ட அரச னவர்களை யுத்தியோகத்திலே வைப்பான். ஆனா லவர்க ளுத்தி யோகத்திலே யிருக்கிறபோது, காண்பித்த குணங்களை விட்டு வேற்றுமையாய்ப் போறார்க ளென்கிறதினா லரச னொருவனை யுத்தியோகத்தில் வைக்கிறதுக்கு முன்னே யவனுடைய குணங்களை யாராய்கிறது மல்லாமல், வைத்ததுக்குப் பிறகு அவனுக் குத்தியோ கத்தில் காண்பிக்கிற குணங்களும் சோதிக்க வேண்டிய தென்பது கருத்து.

சொற்பொருள்: என்ன–எல்லாம். தேறுதல்–தெளிதல். கண்–இடம். வினை–தொழில். மாந்தர்–மனுஷர்.

120. நாடோறு நாடுக மன்னவன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு

(520)

பொருள்: என்றது, உத்தியோகத்தைச் செய்கிற மந்திரிகள் கோணலாய் நடவாதே போனால், லோகங் கோணலாய்ப் போகா தென்கிறதினா லரச னவர்களுடைய நடத்தைகளை நாள்தோறு மாராய்ந்து பார்க்கவேண்டிய தென்றவாறு.

விளக்கம்: சீர்மையுடைய அலங்கோலை யெல்லாம் உத்தி யோகஞ் செய்கிறவர்களுடைய பொல்லாத நடத்தைகளால் வருகிற தினா லரச னுத்தியோகங்களுக்கு யெந்த சாமர்த்திய முள்ளவர் களை(ச்) சம்பாதிக்கிறது மல்லாம, லவர்கள் நடத்தைகளு மவர்க ளுத்தியோகத்திலே நடக்கிற விதமும் இடைவிடாமல் சோதிக்க வேண்டிய தென்பது கருத்து,

சொற்பொருள்: நாடோறும்–நாள்தோறும். நாடுதல்–ஆராய்தல். மன்னவன்–ராசா. வினை–தொழில். கோடுதல்–கோணல். உலகு–லோகம்.

53. சுற்றந்தழாஅல்

அதிகாரக் கருத்து: *அஃதாவது, ராசா தன்னுடைய உறவின் முறையாரை(ப்) பட்சமா யாதரிக்கிறது.*

121. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று

(523)

பொருள்: என்றது, தன்னுடைய அளவும் உறவின் முறை யாருடைய அளவுங் கலக்காமல், தன்னை ஓரளவாகவு, மவர்களை

வேறளவாகவும் நடப்பிக்கிற அரசனுடைய செல்வம் வளைசலுங் கரையு மில்லாத குளம் தண்ணீரினால் நிறைந்தாப் போலு மென்ற வாறு.

விளக்கம்: கரையில்லாக் குளத்திலே விழுந்த தண்ணீர் அதுலே நில்லாது யென்பது போல, அரசன் தன்னுடைய உறவின் முறையாரைத் தனக்குச் சரியாக நடப்பிக்காதேபோனா லவர்கள் அவனைவிட்டுப் போறபடியினா லவனுடைய செல்வத்தைக் காப்பா ரில்லாம லது அவனிடத்திலே நிக்கப் போறதில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: அளவு–அளவு. அளாவு–கலப்பு. இல்லா தான்–இல்லாதவன். அளவல்–வளைதல், கோடு–கரை. இன்றி– இல்லாமல். அற்று–உவமைச் சொல்.

122. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள

(527)

பொருள்: என்றது, காக்காய் தனக் கேதாகிலு மகப்படடால், அதை மறையாம லினத்தைக் கூப்பிட்டுத் திங்குமே, அப்படிப்பட்ட குணத்தை யுள்ளவர்களுக்கும் பிரயோசன முண்டென்றவாறு.

விளக்கம்: அரசனுக் குண்டான செல்வங்களை உறவின் முறையாரோடே கூட அனுபவித்தா லிவர்க ளவனிடத்திலே காத்தி ருந்து அவனுக் குதவியா யிருப்பார்கள்; செல்வ மழியாம லிருக்கு மென்கிற பிரயோசனத்தைக் கைக்கொள்ளுவான் யென்பது கருத்து.

சொற்பொருள்: காத்தல் – மறைத்தல். கரைதல் – கூப்பிடல். ஆக்கம்–இலாபம். அன்ன–உவமைச் சொல். நீர்–குளம். நீரார்–குண முள்ளவர்கள். உள–உண்டு.

54. பொச்சாவாமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, செல்வங்கள் வருத்திவிக்கிற மிகுதியான சந்தோஷத்தினால் சீர்மைக் காரியங்களில் அசதி வராத படிக்கு(ப்) பார்க்கிறது.

123. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு

(531)

பொருள்: என்றது, அரனுக்கு மிஞ்சின கோபஞ் செய்கிற பொல்லாப்பைப் பார்க்க, அதிகமான பொல்லாப்புச் செய்யு மிஞ்சின சந்தோஷத்தின் களிப்பினால் வருகிற மறதி என்றவாறு.

விளக்கம்: அரசனுடைய மிஞ்சின கோபம் பிறத்தியாருக்குப் பொல்லாப்புச் செய்யுஞ் செல்வ மனுபவிக்கிற சந்தோஷத்தினால் சீர்மை காரியங்கள் பேரிலேயு மந்திரிகளுடைய நடத்தைகள் பேரிலேயு மறதியா யிருந்தால் சீர்மையிலே வேண்டிய அநியாயங்களும் நடந்து அரசனுக்கு வேண்டிய உள்பகைகளும், பிற பகைகளும் பிறந்து எல்லா மலங்கோலையாய்ப் போய், அரசனுடைய ராசாங்கத்துக்குத் தானே கேடு வருமென்கிறதினா லிப்படிப்பட்ட மறதி, மிஞ்சின கோபத்தைப் பார்க்க விஷம் பண்ணு மென்பது கருத்து.

சொற்பொருள்: இறத்தல்–மிகுதல். வெகுளி–கோபம். தீது–பொல்லாப்பு. சிறத்தல்–மிகுதல். உவமை–சந்தோஷம். மகிழ்ச்சி–களிப்பு. சோர்வு–மறதி.

55. செங்கோன்மை

அதிகாரக் கருத்து: அஃதாவது, நீதியோடே சீர்மை யாளுகிறது.

124. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி
(542)

பொருள்: என்றது, மழையை(ப்) பத்தி லோகத் துயிரெல்லாம் தன்னுடம்பிலே நிக்கிறது; அரச னீதியைப் பத்திச் சீமையிலே குடிகள் நிக்கிறது யென்றவாறு.

விளக்கம்: நீதியில்லாத சீமையிலே குடிகள் தெரிச்சுப்போமென்பதினால், சீவனைக் காப்பாத்துகிறத்துக்கு வேண்டிய மழை பெய்தாலு மரசனுக்கு நீதி யில்லாதே போனால் மழையினா லாகிற பிரையோசன மனுபவிக்கத் தக்க குடிக ளில்லாதபடியினால், நீதியில்லாத சீமையிலே மழை குறையில்லாமல் பெய்தாலும் பிரயோசனமில்லை யென்பது கருத்து.

சொற்பொருள்: வான்–மழை. உலகு–லோகம். மன்னவன்–ராசா கோல்–செங்கோல்.

125. கொலையிற் கொடியாரைவேந்தொறுத்தல்
பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்
(550)

பொருள்: என்றது, அரசன் கொடுமையுள்ளவர்களை, தலையாக்கினையினால் தெண்டிக்கிறதுங், களை வெட்டிப் பயிர்களைக் காக்கிறதுக் கொக்கு மென்றவாறு.

விளக்கம்: களையினால் நல்ல பயிருக்குச் சேதம் வராதபடிக்கு களை வெட்ட வேண்டியது போலப் பொல்லாதவர்களால் நல்லவர்களுக்குக் கேடு வராதபடிக்கு அரச னவர்களைக் கலைக்க வேண்டிய தென்பது கருத்து.

சொற்பொருள்: கொலையில்-கொலையினால். கொடியவர்-கொடுமை யுள்ளவர்கள். வேந்து-ராசா. ஒருத்தல்-தெண்டித்தல். பைங்கூழ்-பயிர். கட்டல்-காத்தல். நேர்-உவமை.

56. கொடுங் கோன்மை

அதிகாரக் கருத்து: அஃதாவது, நீதியில்லாத ராச்சியபாரம்.

126. வேலொடு நின்றா னிடுவென்றது போலுங்
கோலொடு நின்றா னிரவு
(552)

பொருள்: என்றது, வழிகளிலே சில்லறை பண்ணுகிற கள்ளன் ஆயுதத்தோடே நின்று வழிப்போக்கனை, உன் கைப்பொருளைத் தாவென்று கேழ்க்கிறதும், தெண்டிக்கிற தொழிலோடே நிக்கிற அரசன் பகுதி யில்லாமல் குடிகளுடைய பொருளைக்கேழ்க்கிறது மொக்குமென் றவாறு.

விளக்கம்: கள்ளன் வழிப்போக்கனை யடியாதே போனாலும் ஆயுதத்தோடே நிக்கிறதினா லிவன் பயந்து கேட்டதெல்லாங் கொடுப்பான். அப்படிப்போல ராசா, பகுதியல்லாமல் கேழ்க்கிற பொருள்களைக் குடியானவனுக்கு வேறே யுவத்திறம் பண்ணாமல் கேட்டாலும் தெண்டிக்கிற தொழிலோடே குடி கெடுத்துப்போடுவானென்கிற பயத்தினால் கொடுப்பார்க்க ளென்பதாகையி லிப்படிப் பட்ட தொழில், கள்ளன் தொழிலுக்குச் சரியாயிருக்கிறதினால் ராசாவுக்குக் காகாது என்பது கருத்து.

சொற்பொருள்: இடுதல்-கொடுத்தல். கோல்-செங்கோல். இரவு-யாசகம்.

127. அல்லற்பட் டாற்றா தழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை
(555)

பொருள்: என்றது, குடிக ளரசனால் துன்ப மனுபவித்து ஆற்றாம லழுதுகொண்டு விடுகிற கண்ணீர் அரசனுட செல்வத்தை அன்றைக்குத் தானே குறைக்கத்தக்க ஆயுதமா மென்றவாறு.

விளக்கம்: நெஷ்டூரனுடைய பேர் அரசனுக்கு வெகு ஈனமாயிருக்குறதினா லவன் படுத்துகிற கஷ்தியினால் குடியானவ னிடுகிற

அழுகைச் சத்தத்தினாலே அரசனுக்கு நெஷ்டூர னென்கிற பேருண்டாகிற படியினாலேயும் ஈன முண்டாகிறபடியினாலேயுங், குடியானவ னழுகிறபொழுது தானே ராசாவினுடைய செல்வமாகிய பெருமை குறைந்து போமென்பது கருத்து.

சொற்பொருள்: அல்லல் – துன்பம். ஆற்றாது – ஆத்தாமல். அன்றை–அன்றைக்கு. படை–ஆயுதம்.

128. இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்

(558)

பொருள்: என்றது, நீதி யில்லாத அரசனுடைய கோலுக்குக் கீழிருந்தால் தரித்திரத்தைப் பார்க்க ஆஸ்தி பொல்லாதது யென்ற வாறு

விளக்கம்: நீதி யில்லாத அரசன் ஆஸ்தியா யிருக்கிற குடிகளுக்கு வேண்டிய நெஷ்டூரங்களைச் செய்கிறதினாலேயும், இளைச்சிருக்கிற குடிகளைத் தேடத்தக்கதில்லை என்கிறதினாலேயு மாஸ்திக்காரனுக்கு வருகிற துன்பத் தரித்திரனுக் கில்லாதபடியினா லவன் சீமையிலே ஆஸ்திக்காரனா யிருக்கிறதைப் பார்க்கத் தரித்திரனா யிருக்கிறது நல்லது யென்பது கருத்து.

சொற்பொருள்: இன்மை–இல்லாமை. இன்னாது–பொல்லாப்பு செயா–செய்யார். மன்னவன்–ராசா. படின்–பட்டால்.

57. வெருவந்த செய்யாமை

அதிகாரக் கருத்து: அஃதவாது, குடிகளு மரசன்கிட்டச் சேவிக்கிறவர்களும் தானு மஞ்சத்தக்க தொழில்களைச் செய்யாம லிருக்கிறது.

129. இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

(564)

பொருள்: என்றது, குடிகளுக்குப் பயங்கரமான அரசனென்கிற பொல்லாதபேர் கட்டிக்கொண்ட ராசா ஆயுசு குறைந்து சீக்கிரமாய்க் கெட்டுப்போவா னென்றவாறு.

விளக்கம்: குடிகளுக்குப் பயங்கரமான அரசனைக் குடிகளெல்லாம் பகைத்து அவன் சீக்கிரமாய்ச் சாகவேணுமென்று விரும்புகிறதினா லவர்களுடைய மனசிலே ராசாவினுடைய ஆயுசு குறைந்துபோமதுதவிரக் குடிகளுக்குப் பயங்கரமான அரசன் சீமையிலே குடிகள்

நில்லாததினா லவர்களால் வருகிற பிரயோசனத்தை அரசன் கைக் கொள்ளாமல், தன்னுடைய செல்வத்தைச் சீக்கிரமா யிழந்துபோ யழிந்துபோவா னென்பது கருத்து.

சொற்பொருள்: இறை-குடி. கடிதல்-சினத்தல். உரைத்தல்-சொல்லுதல். இன்னா-பொல்லாத. வேந்தன்-ராசா. உறை-வாழ்நாள் கடுகல்-குறைதல். ஒல்லை-சீக்கிரத்தின் குறிப்பு.

58. கண்ணோட்டம்

அதிகாரக் கருத்து: அஃதாவது, இரக்க முடையவனா யிருக் கிறது.

130. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண் (573)

பொருள்: என்றது, பண்ணென்கிறது பாடல் தொழிலோடே கூடாதே போனால், என்ன செய்யும், கண்ணென்கிறது கிருபா கிடாஷ்ச மில்லாதே போனா லென்னசெய்யு மென்றவாறு.

விளக்கம்: பண்ணென்கிறாதவது, பாலை இயாழ் முதல் கொண்டு மற்ற வாச்சியங்களுடைய தொகுப்புப் பாட லென்கிற தாவது, அந்தந்த வாச்சியங்களில் வரும் வெவ்வேறே வண்ணங் களை யறிகிற சாஸ்திரம்; இப்படிப்பட்ட சாஸ்திர மறியாதவன் கையிலே அந்த வாச்சியங்க ளிருந்தா லதுகள் காதுக்கு இன்பஞ் செய்யாது; அப்படிப் போல, தயை யில்லாதவன் முகத்திலே யிருக்கிற கண்கள் அழகா யிராது யென்பது கருத்து.

சொற்பொருள்: என்-என்ன. இயைபு-பொருத்தம். இன்று-இல்லை. ஏல்-ஆனால். கண்ணோட்டம்-இரக்கம். கண்-முதல் விசை கண்ணாகும்; இரண்டாம் மிசை யிடமாகும்.

59. ஒற்றாடல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, தன் சீமையிலேயு மற்ற ஆஸ் தானங்களிலேயும் நடக்கிற செய்தி வேவுகாரரைக் கொண்டறி கிறது.

131. ஒற்றெறித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினா லொற்றிக் கொளல்
(588)

பொருள்: என்றது, வேவுக்காரன் வேவுபார்த்துச் சொன்ன செய்தியை அரசன் திரும்பி வேறே வேஷகாரனைக்கொண்டு வேவு பார்ப்பித்து, விசாரித்துக்கொள்ள வேண்டியதென்றவாறு.

விளக்கம்: ஒரு வேவுகாரன் சொன்ன சேதியை வேறே வேவு காரனைக் கொண்டு விசாரித்து, இவனு மவனுஞ் சொல்லுகிற சேதி, சரியாயிருந்தால் அது மெய்யென்று நம்பலாம், சரியா யிராதே போனால் சேதி(யை)யும் வேவுகாரனையும் நம்பப்படாது என்பது கருத்து.

சொற்பொருள்: ஒற்று-வேவுகாரன். ஒற்றல்-வேவு செய்தல். மற்று-பின்னை. கொளல்-கொள்ளுதல்.

60. ஊக்க முடைமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, அருமையான காரியங்களை மேல்போட்டுக் கொள்ளுகிறதுக்குத் துணிவு உடையவனாயிருக் கிறது.

132. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்

(529)

பொருள்: என்றது, மனதினுடைய துணிவு யென்கிற உடமை நிலைபெத்த உடமை, பொருளென்கிற உடமை நிலை பெறாமல் நீங்கிப் போறதினா லென்றவாறு.

விளக்கம்: மனத்தின் துணிவு உயிருடைய குணமாயிருக்கிற தினால் உயிருக்கு மட்டும் நிக்கும் பொருளோவென்றால் சிலவாய்ப்போய் அடிக்கடி ஒருத்தன் வசத்தை விட்டு வேறொருத் தன் வசமாய்ப் போறது. ஆகையினால் இது நில்லாத உடமை; அது எப்போதும் நிக்கிற உடமை என்பது கருத்து,

சொற்பொருள்: உள்ளம்-மனத்தின் பகுதி.

133. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு

(595)

பொருள்: என்றது, நிற்கிற தண்ணீருக் களவாக நீர்ப் பூவினு டைய கொடிகள் நீண்டுபோம். அப்படிப் போலத் தங்களுடைய மனத்தி லிருக்கிற துணிவுக் களவாக மனுஷ ருசந்து போறார்க ளென்றவாறு.

விளக்கம்: தண்ணீர் நிரம்ப நின்றால் நீர்ப்பூச் சிலந்தியா யிருக்கும். அப்படிப்போல அரசனுக்குத் துணிவின் மிகுதி இருந்து தானால் பொருள்களிலேயும் படையிலேயுஞ் செல்வங்களிலேயும் மிஞ்சிப்போவா னென்பது கருத்து.

சொற்பொருள்: வெள்ளம்-தண்ணீர். அனைய-அளவாகும். மலர்-பூ. நீட்டம்-கொடி. மாந்தர்-மனுஷர். உள்ளம்-மனத்தின் மிகுதி. அனையது-அளவாகும். உயர்வு-பெருமை.

61. மடியின்மை

அதிகாரக் கருத்து: அஃதாவது, தன் தொழிலுக்கடுத்த காரியங்களைச் சோம்பலில்லாமல் செய்கிறது.

134. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்

(607)

பொருள்: என்றது, தனக்குப் புத்தி சொன்னவர்கள் பின்னுக்குச் சொல்லும் நிந்தையான வார்த்தை கேழ்ப்பார்கள், சோம்பலை விரும்பிப் பெருமையான சுறுசுறுப்பு இல்லாதவர்க ளென்றவாறு.

விளக்கம்: சோம்பலால் கேடு வருமென்று இது முதலான புத்தி சொன்னவர்க ளந்தப் புத்தி கேளாமல் அரசன் சோம்பலினால் கெட்டுப்போறதைக் கண்டால் அவன் மேலே நிந்தையான வார்த்தை சொல்லுவார்களே, இப்படிக்கொத்த வார்த்தைகளால் சோம்பலை விடாத அரசன் மறு பேச்சுப் பேசுகிறதுக்கு நாயமில்லாமல் பேசாமல கேழ்க்க வேண்டியதா யிருக்குமென்பதாகையில் சோம்பலினால் சேதம் வருகிறது மல்லாமல் நிந்தையும் வருமென்பது கருத்து.

சொற்பொருள்: இடி-உறுதி. புரிதல்-செய்தல். எள்ளுதல்-நிந்தித்தல். கேட்பர்-கேழ்ப்பார்கள். மடி-சோம்பல். புரிதல்-விரும்புதல். மாண்ட-பெருமை யுடைத்த. உஞற்று-முயற்சி. இல்லா-இல்லாதவர்கள்.

62. ஆள்வினை யுடைமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, உடம்புக் கஸ்தியைப் பாராமல் இடைவிடாமல் தன் காரியத்துககுப் பிரயாசைப் படுகிறது.

135. இன்பம் விழையான் வினைவிழைவான் கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்

(615)

பொருள்: என்றது, தான் சுகமா யிருக்கவேணுமென்று விரும் பாமல் தொழில் காரியங்களைக் குறையில்லாமல் முடிக்கிறதுக்குப் பிரயாசப் படுதலை விரும்புகிறவன், தன் னுறவின்முறையார் துன்பத்தை நீக்கி யவர்களுடைய பாரத்தைத் தாங்கத்தக்க தூணா மென்றவாறு.

விளக்கம்: அரசன் தன் தொழிலைக் குறையில்லாமல் செய்கி கிறதுக்கு வேண்டிய பிரயாசைப்பட்டால், செல்வங்குறையாததி னால் தானுஞ் சுகமா யிருப்பான், தன்னுடைய உறவின் முறையார் தரித்திரத்தை நீக்கி யவர்களையுஞ் சுகமா யிருக்க(ப்) பண்ணுவான். தான் சுகமா யிருக்க வேணுமென்று விரும்பிச் சோம்பலா யிருந்தால் நாளுக்கு நாள் செல்வங் குறைந்துபோய்த் தானும் செல்வமா யிருக் கிறதுக்கும் உறவின் முறையாருடைய பாரத்தைத் தாங்கிற துக்கு மவகாச மில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: விழைதல்-விரும்புதல். வினை-ஆள்வினை. முயற்சி. கேளிர்-நட்புடையார். துடைத்தல்-நீக்கல். ஊனல்- தாங்கல்.

136. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி

(618)

பொருள்: என்றது, காரியங்களை முடிக்கிறதுக் கேற்ற அறிவில்லாமல் போறது ஒருவருக்குங் குற்றமல்ல; அறியத்தக்க வேண்டியதெல்லா மறிந்து காரியங்களைச் சோம்பலினாலே முடியாமல் போறது குற்ற மென்றவாறு.

விளக்கம்: கூர்மையான புத்தி யவனவனுக்குக் காண்டவர் குடுத்தாலுண்டு, மற்றப்படி யவனவனுடைய மனசினால் வராது. சோம்பலும் பிரயாசமு மவனுடைய மனதினால் வருமான படியினாலே கூர்மையான புத்தி யில்லாதவன் ஒருகாரியத்தை முடிக் கிறதுக்கு வேண்டிய பிரயாசைப் பட்டாலும் புத்திக் குறையினாலே அந்தக் காரியத்தை முடிக்காதே போனால் அவன்பேரிலே குற்ற மில்லை. வேண்டிய அறிவு பெற்றவன் தன்னுடைய சோம்பலி னாலே காரியத்தை முடிக்காதே போனா லந்த(க்) காரிய முடியாத குற்ற மவன்பேரிலே நிற்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: பொறி-அறிவு. இன்மை-இல்லாமை. யாரும்- எல்லாரும். பழி-குற்றம், அன்று-அல்லால். ஆள்வினை-முயற்சி

63. இடுக்கண் ணழியாமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, தனக்கு வந்த துன்பங்களாலும் விக்கினங்களாலுஞ் சலித்துப் போகாமலும் துவக்கின காரியங்களை விடாமலு மிருக்கிறது.

137. மடுத்த வாயெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து

(624)

பொருள்: என்றது, பள்ளமான வழிக ளெல்லாத்திலேயும் வண்டிலை இழுக்கிற மாட்டைப்போ லொத்தவனுக்கு வருகிற துன்பம்தான் தானே அவனால் துன்பப்படுகிற குணத்தையுடைத் தென்றவாறு.

விளக்கம்: ஒருவன் தனக்கு விக்கினம் பண்ண வந்தவனை மதித்துச் செயித்துத் தன் காரியத்தை முடித்தால் விக்கினம் பண்ண வந்தவன் துன்பப்பட்டுப் போவா னென்ப தாகையி லரசனுக்கு வருகிற துன்பங்களுக்கும் விக்கினங்களுக்கு மறிவுண்டானால் அது களைச் செயித்து, அரசன் தன் காரியத்தை முடித்தால் அதுகள் தானே துன்பப்பட்டுப் போமென்கிறதைப் பத்தி விக்கினமுள்ள வழிகளிலேயும் பின் வாங்காமல் வண்டிலை இழுக்கிற மாடு செய் கிறாப்போலே அரசனுந் தா னினைத்த காரியத்தை அழிக்கத் தக்கதாக வந்த துன்பத்துக்குப் பின்வாங்காமல் அதை செயித்து, தன் காரியத்தை முடித்துக் கொண்டுபோனால் வந்த துன்பத்தைத் தானே துன்பப்படுத்துவா னென்பது கருத்து.

சொற்பொருள்: மடுத்த-பள்ளமுள்ள. வாய்-வழி. பகடு-மாடு அன்னான்-உவமை உடைத்தவன். உறல்-வருதல். இடுக்கண்-துன்பம். இடர்-துன்பம். பாடு-குணம். உடைத்து-உடைத்தது.

138. இனனாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு

(630)

பொருள்: என்றது, தா னினைத்த காரியத்துக்கு விக்கினமாக வருகிற பொல்லாப்புக்களைத் தனக்கு நன்மையென்றெண்ணிச் சந்தோஷமா யேத்துக்கொள்ளுகிறவனுக்குத் தன் பகையாளிகளும் காய்மகாரப் படுகிறதுக்கேதுவான பெருமை யுண்டாகு மென்ற வாறு.

விளக்கம்: அரசன் தனக்கொரு விக்கினம் வந்தவிடத்திலே இந்த விக்கினத்தோடேதானே என் காரியத்தை முடித்தால் என்னு டைய வல்லமை விளங்குமென்கிற நன்மையைக் கருதி, அந்த விக்கினத்தைத் தன்னுடைய வல்லமையைக் காண்பிக்கிறதுக் கேதுவான நன்மைபோலே சந்தோஷமா யேத்துக்கொண்டு தன் காரியத்தைச் செய்கிறதுக்கு வேண்டிய பிரயாசைப்பட்டுத் தன் காரியத்தை முடித்துக்கொண்டு போனா லவனுடைய பகைவர் தாங்க ளவனுக்குச் செய்கிற பொல்லாப்புக்க ளெல்லாம் நன்மை யாய்ப் போகுதென்றும் அவனைச் செயிக்குங் காய்மகாரப் படுவார்கள் என்பது கருத்து.

சொற்பொருள்: இன்னாமை - பொல்லாப்பு. என் - என்று. கொளின்-ஒத்துக்கொண்டால். ஒன்னார்-பகைவர். விழைதல்-விரும் புதல். சிறப்பு-பெருமை.

அமைச்சியல்

இயல் கருத்து: அஃதாவது, மந்திரிகளுக் கேத்த குணங்கள்.

64. அமைச்சு

அதிகாரக் கருத்து: அஃதாவது, பிரதானிக்கத்திலே இருக்கிற மந்திரியி னந்தஸ்து.

139. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வ
ரெழுபது கோடி தலை

(639)

பொருள்: என்றது, அரசனுக்கு இரண்டகம் நினைக்கிற மந்திரி ஒருவனி லரசனுக் கெதிரான பக்கத்திலே நிக்கிற எழுபது கோடி பகையாளிக ளுண்டென்றவாறு. இது ஒருவிதம்.

அரசனுக்கு இரண்டகம் நினைக்கிற மந்திரியைப் பார்க்க அரசனுக் கெதிராய் நிக்கிற பகைவர் எழுபது கோடி பங்கு நல்லது யென்றவாறு. இது வேறே விதம். இரண்டு விதத்திலேயும் கருத்து ஒன்றுதான்.

விளக்கம்: அஃதாவது, எழுபது கோடி பகைவர் அரசனுக் கெதிராய் நின்றா லவன் தாங்கமாட்டாம லவசியமாய்க் கெட்டுப் போவா னப்படிப்போல இரண்டகம் நினைக்கிற மந்திரி அரச னுக்குத் தப்பாமல் கேடு செய்வா னென்கிறதினாலேயும் யெழுபது கோடி பகைவர் அரசனுக் கெதிராய் நின்றால் தப்பிப்போறதுக் கவகாச முண்டானாலும் இரண்டக நினைக்கிற மந்திரியின் உள் பகைக்குத் தப்பிப்போறதுக் கவகாசமில்லை யென்கிறதினாலேயும் உள்பகையா யிருக்கிற மந்திரியொருவனும் எழுபது கோடி பகைவரு மரசனுக்குச் சரி யென்கிறதுமல்லாமல், உள்பகையா யிருக்கிற மந்திரியை பார்க்க எழுபது கோடி பகைவர் அரசனுக்கு நல்லது என்பது கருத்து.

சொற்பொருள்: பழுது-பொய். எண்ணல்-நினைத்தல். பக்கத் துட் டெவ்வர்-பக்கத்துள் தெவ்வர்-பகைவர். தலை-பெருமை.

65. சொல்வன்மை

அதிகாரக் கருத்து: அஃதாவது, மந்திரியா யிருக்கிறவன் பேச்சிலே திராணியுள்ளவனா யிருக்கிறது.

140. ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு

(642)

பொருள்: என்றது, அரசனுடைய மந்திரி மற்ற ஸ்தானங்களிலே பேசுகிற பேச்சுக்கள், தன் னரசனுக்கு நன்மையுங் கேடும் வருகிறதுக் கேதுவா யிருக்கிறதினா லப் பேச்சுக்களிலே அசட்டை வராதபடிக்கு எச்சரிக்கையோடே காக்க வேண்டியதென்றவாறு.

விளக்கம்: மந்திரி புத்தியோடேயும் வின்பத்தோடேயும் பேசினால் காரியங் கொள்ளுவான். எக்கச்சக்கமாய்ப் பேசினால் காரியங்களைப் பேசுகிறபோது வெகு அவதானமாய்ப் பேச வேண்டியதென்பது கருத்து.

சொற்பொருள்: ஆக்கம்–இலாபம். ஓம்பல்–காத்தல். கண்–இடம். சோர்–மறதி.

141. இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்

(650)

பொருள்: என்றது, தன் சொத்துக்கு அலங்காரங் கொடுத்து வாசினை யில்லாத புஷ்பத்துக்குச் சமானமா யிருப்பார்கள், தான் படித்ததைப் பிறத்தியா ரறியும்படிக்குக் காண்பித்துச் சொல்ல மாட்டாதவர்க ளென்றவாறு.

விளக்கம்: வாசினை யில்லாத பூவை விரும்புவாரில்லை என்றதுபோல், வேண்டிய சாஸ்திரங்களால் நிறைந்து தான் சொல்லுகிற காரியத்தைப் பிறத்தியார் விபரமாய்க் கண்டு பிடிக்கும் வகையாய்ச் சொல்ல மாட்டாத மந்திரியை ஒருத்தரு மதிக்கத் தக்கதில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: இணர்–பூங்கொத்து. ஊழ்த்தல்-அலங்கரித்தல். நாறல்-வாசினையிடுதல். மலர்-பூ. அனையர்–உவமையுடைத்தவர்கள். விரித்துரைத்தல்–உரை சொல்லுதல்.

66. வினைத் தூய்மை

அதிகாரக் கருத்து: அஃதாவது, தன் பேரைக் கெடுக்கத்தக்க தொழில்களைச் செய்யாம லிருக்கிறது.

142. ஈன்றான் பசிகாண்பானாயினுஞ் செய்யற்க
சன்றோர் பழிக்கும் வினை

(656)

பொருள்: என்றது, தன்னைப் பெத்த தாய் கஞ்சிக்குச் சாகிற தைக் கண்டாலு மவளுக் குதவியா யிருக்கத்தக்கதாகப் பெரிய அறிவுடையாரால் பழிக்கத்தக்க காரியத்தையும் செய்யவேண்டா மென்றவாறு.

விளக்கம்: எத்தனை பெரிய அவசரத்திலேயு மந்திரியானவன் தன் தொழிலுக்கு ஏலாத காரியத்தைச் செய்தாலரச னவனைத் தன் னவசரத்துக்குத் தக்கது நடக்கிறவனென்றும் ஒரு நிலையிலே நில்லாதவ னென்றும் எண்ணி நம்பப் போறதில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: ஈன்றாள்–பெற்றவள். ஆயினும்–ஆனாலும். செய்யற்க–செய்யவேண்டாம். சான்றோர்–அறிவுடையார். பழித் தல்–குறைசொல்லுதல். வினை–செயல்.

143. அழக்கொண்ட தெல்லா மழப்பே மிழப்பினும்
பிறபயக்கு நற்பா லவை

(659)

பொருள்: என்றது, பிறத்தியார் கஷ்திப்பட ஒருவன் சம்பா தித்த பொருள் தான் கஷ்திப்பட, தன்னைவிட்டுப்போம், புண்ணி யத்துக்காக இப்போதைக்குப் பொருளிழந்தாலும் அது பின்வந்து பலன்கொடுக்கு மென்றவாறு.

விளக்கம்: மற்றவரைக் கஷ்திப்படுத்திச் சம்பாதித்த தெல்லாம் அழிந்துபோறது நிச்சய மாகையில், அது அழிக்கிற சமயத்திலே அதை(ச்) சம்பாதிச்சவனைக் கஷ்திப்படுத்தும் நீதியோடே தொழில் செய்கிறதுக்காக வேண்டிய பொருள் சேதம் வந்தாலு மந்தச் சேத மினிமேல் இந்த லோகத்திலேயும் ஆதாயங் கொடுக்கும், மறு லோகத்திலேயும் மோட்சத்தைக் கொடுக்கு மென்கிற ஞாயத்தைப் பத்தி மந்திரியானவன் தன் தொழிலிலே நீதியைத் தப்பி நடக்கிறதா காது என்பது கருத்து.

சொற்பொருள்: இழப்பினும்–இழந்தாலும். பிற–பின்னுக்கு. பயத்தல்–உண்டாக்கல். நற்–நல்ல. பாலவை–குணமுடைத்ததுகளை.

144. சலத்தாற் பொருள்செய் தேமார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று

(660)

பொருள்: என்றது, மந்திரியானவன் தீவினைகளால் பொருளைச் சம்பாதித்து ராசாவைத் திரவியங்களால் நிறையப் பண்ணுகிறது, பச்சை மண் பாத்திரத்தில் தண்ணீர் நிறைய ஊத்திஇருந்தால் போலு மென்றவாறு.

விளக்கம்: பச்சை மண் குடத்திலே நீரும் போம், குடமுமழிந்துபோம். அப்படிபோல, மந்திரியானவன் அநியாயமாய்ச் சம்பாதித்த திரவியங்களைக் கொண்டு தன் னரசனுடைய ராசாங்கத்தைப் பெருக்கப் பண்ணினா லந்த திரவியங்களும் போம், ராசாங்கத்துக்கு கேடு வருமென்பது கருத்து.

சொற்பொருள்: சலம்–பாவம். ஏம்–ஏமம். ஏமம்–பொன். ஆர்த்தல்–நினைத்தல். பசுமண்–பச்சை மண். கலத்துண்–கலத்துள். பெய்தல்–போடல். இரீஇ–இருந்தால். அற்று–உவமைச் சொல்.

67. வினைத்திட்பம்

அதிகாரக் கருத்து: அஃதாவது, சீமைக் காரியங்களை நடத்துகிறதிலே கெட்டிமனசுள்ளவனா யிருக்கிறது.

145. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்

(664)

பொருள்: என்றது, இந்தக் காரிய மின்னபடிக்குச் செய்ய வேண்டிய தென்று யெல்லாரு மெளிசாய்ச் சொல்லுவார்கள்; அந்தக் காரியத்தைச் சொன்ன பிறகாரமாகச் செய்கிறது அறிதென்றவாறு.

விளக்கம்: காரியங்களைச் செய்கிற வகையறிதல் மாத்திர மந்திரிக்குப் பத்தாது. அறிந்த பிறகாரமாகச் செய்கிறதுக்கு மனத்தின் துணிவும் வேணும் என்பது கருத்து.

சொற்பொருள்: யாரும்–எல்லோரும். எளிய–எளிமை யுடைத்தது. அரிய–அருமை யுடைத்தது. ஆம்–ஆகும். சொல்லிய–சொன்ன. வண்ணம்–வகை.

146. உருவுகண் டெள்ளாமை வேண்டு
முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து

(667)

பொருள்: என்றது, உருளத்தக்க பெருந் தேருடைய அச்சாணிக்குச் சரியான மனுஷரை லோக முடைத்ததினால்

ஒருவனுடைய ரூபத்தைக் கண்டாப் போலே அவனைக் கொஞ்ச மாய் யெண்ணலாகா தென்றவாறு.

விளக்கம்: தேரச்சுக் கோத்திருக்கிற ஆணி, சின்னதா யிருந் தாலும் தேரினுடைய பாரமெல்லாந் தாங்கி யதை யுருளப்பண்ணு மப்படிப்போல, மந்திரிக்குக் கோத்திரத்தாலுஞ் செல்வங்களாலு மாகிற பெருமை கொஞ்சமா யிருந்தாலு மவன் சீமைப் பாரமெல் லாந் தாங்கி அரசனுக்கு ராசாங்கம் நடக்கப் பண்ணுகிறதினா லவனைக் கொஞ்சமா யெண்ண லாகா தென்பது கருத்து.

சொற்பொருள்: உப்பு-ரூபம். எள்ளுதல்-நிந்தித்தல். வேண்டும்-வேணும். அச்சாணி-அச்சிலே கோத்திருக்கு மாணி. அன்னார்-உவமை யுடைத்தவர்கள். உடைத்து-உடைத்தது.

68. வினைசெயல் வகை

அதிகாரக் கருத்து: அஃதாவது, சீர்மைக் காரியங்களை நடத் திற வகையறிகிறது.

147. பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல்

(675)

பொருள்: என்றது, மந்திரியானவன் ஒரு காரியம் நடத்த வேணுமானால் பொருளு மெத்தனமுங் காலமும் வினையு மிடமு மென்கிற அஞ்சு காரிய மயக்க மெல்லாம் நீக்கி ஆராய்ந்து பார்த்துச் செய்ய வேண்டிய தென்றவாறு.

விளக்கம்: மந்திரி, தன் னரசனுக்குப் பகையா யிருக்கிறவர்க ளிடத்திலே ஒரு காரியம் நடத்த வேணுமானா லந்தக் காரியத்தி னால் வருகிற பொருள் சேதமும் பொரு ளாதாயமும் அது செய்கிற துக்கு யெத்தன மாகிய தன் படையும் எதிராளி படையுந், தனக் காகிற காலமும், தன்னுடைய எதிராளிக் காகிற காலமும், அது செய்கிறதுக்குத் தனக்கான இடமும் யெதிராளிக் காகாத இடமும், அதிலே தான் செய்யத் தக்க வினையும் யெதிராளி செய்யத்தக்க வினையும் தெளிவாய் விசாரித்து, ஐந்து காரியமுந் தனக்குச் சார்வா யிருந்துதானா லக்காரியத்தை நடத்த லாம்; ஒண்ணுமாத்திரஞ் சார்வா யிராதேபோனாலுங் காரியத்தை விட்டுவிட வேணுமென்பது கருத்து.

சொற்பொருள்: கருவி-எத்தனம். இடம்-இடம். இருடீர்-இருள் தீர். இருள்-மயக்கம். தீர்தல்-நீங்குதல். செயல்-செய்.

69. தூது

அதிகாரக் கருத்து: அஃதாவது, ஸ்தானாபதிக்கு வேண்டிய குணம்.

148. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்கண் ணவன்
(689)

பொருள்: என்றது, தன்னுடைய அரசன் விடுகிற பேச்சுக்களை வேறரசனுக்குச் சொல்லுகிறதுக்குரிய தொழிலைப் பண்ணுகிறவன், தன் னரசனுக்குத் தாழ்வான வார்த்தைகளை வாய்த்தவரிடத்துச் சொல்லாதபடிக் கேத்த வீரியத்தை உடையவனா யிருக்கவேணு மென்றவாறு.

விளக்கம்: ஸ்தானாபதி யானவன், தன் னரசன் காரியமாக வேறே ஆஸ்தானங்களிலே பேசுகிறபோது தன் னரசன் சொன்ன பிரகாரமாகப் பேசினால் தனக்குப் பொல்லாப்பு வருமென் றறிந் தாலும், அந்தப் பொல்லாப்புக்குப் பயப்படாத வீரியத்தை உடையவனாய்த் தன்னரசன் வேறரசனுக்குத் தாட்சியான வார்த்தை சொல்லுகிறாப் போல சொல்லாமல் தன்னரசன் சொன்ன உத்தரர மெல்லா மவருடைய பெருமைக்குச் சரியான வார்த்தைகளோடே பேச வேண்டியது எனபது கருத்து.

சொற்பொருள்: விடுமாற்றம்–விடப்படுமாற்றம். மாற்றம்–உத் தரம். வேந்தன்–ராசா. உரைத்தல்–சொல்லுதல். வடு–குற்றம். சோர்தல்–தவறல். வன்கணவன்–வீரமுள்ளவன்.

70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, மந்திரிமார் அரசனிடத்திலே புழங்கிற வகை.

149. அகலா தணுகாது தீக்காய்வார் போல
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்
(691)

பொருள்: என்றது, மனப்பேதகமா யிருக்கிற அரசனிடத்திலே புழங்கிறவன் நெருப்பண்டையிலே குளிர் காய்கிறவனைப் போலே அவனை மெத்தவுங் கிட்டலாகாது, மெத்தவும் நீங்கலாகாது; நடு நிலையிலே நிக்கவேண்டியது யென்றவாறு.

விளக்கம்: தீயை மெத்த அணுகினால் சுடு, மெத்த அகன்று போனால் குளிர் காயாது. அப்படிப்போலே அரசனோடே மெத்தப்

பழகினால் அவமதிப்பு வரும், மெத்தத் தூரமா யிருந்தால் அவனால் வரத்தக்க பிரயோசனம் வராது யென்பது கருத்து.

சொற்பொருள்: அகலல்–நீங்குதல். அணுகல்–கிட்டல். இகல்–மாறுபாடு. வேந்தன்–ராசா. ஒழுகல்–நடத்தல்.

71. குறிப்பறிதல்

அதிகாரக் கருத்து: அரசனுடைய முகத்திலே கண்ட அடையாளங்களைக் கொண்டு அவனுடைய மனசைக் கண்டுபிடிக்கிறது.

150. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்

(703)

பொருள்: என்றது, தன்னிடத்திலே கண்ட அடையாளங்களைக் கொண்டு ராசாவினுடைய சித்தத்தி னடையாளங்களைக் கண்டுபிடிக்க வல்லமையுள்ள மந்திரியை அரசன் தனக்குண்டான அங்கங்களுக்குள்ளே அவனுக்கு வேண்டியதென்று கொடுத்து(ச்) சேர்த்துக் கொள்ள வேணு மென்றவாறு.

விளக்கம்: தனக்கொரு காரியம் பொருந்துகிற சமயத்திலேயும் பொருந்தாத சமயத்திலேயுந் தன்னுடை முகத்திலே இன்ன அடையாளங்கள் காணுமென்றறிந்த மந்திரி அந்த அடையாளங்களை அரசன் முகத்திலே கண்டு, அவருக் கின்னது பொருந்தினது, இன்னாது பொருந்தாதென்று கண்டுபிடிக்க வல்லவனா யிருந்தா லரசனிப்படிப்பட்டவனுக்குத் தனக்கு அங்கமாகிய பொருளானாலும் நாடா(னா)லுங் குதிரையானாலும் யானையானாலும் அவன் விரும்பினதை யொன்று கொடுத்து(ச்) சம்மதிபண்ணித் தன்னண்டையிலே வைத்துக்கொள்ள வேணுமென்மது கருத்து.

சொற்பொருள்: குறிப்பு–அடையாளம். உணர்தல்–அறிதல். உறுப்பு–அங்கம். யாதும்–யெதானாலும். கொளல்–வைத்துக்கொள்ளுதல்.

151. அடுத்தது காட்டும் பளிங்கேபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்

(706)

பொருள்: என்றது, கண்ணாடியானது தனக்குச் சமீபமாயிருக்கிற பொருளைக் காட்டுகிறாப்போலே நெஞ்சி லெழும்பின கோபத்தை முகங் காட்டு மென்றவாறு.

விளக்கம்: கண்ணாடிக்குக் கிட்ட யிருக்கிற பொருளை இருக்கிற விடத்திலே காணாதே போனாலுங் கண்ணாடியிலே

காணலா மென்பதுபோல, நெஞ்சி லிருக்கிற பிரியமுங் கோபமும் நெஞ்சிலேதானே காண்பிக்கிறதுக் கவகாச மில்லாதே போனாலு முகத்திலே காணலா மென்பது கருத்து.

சொற்பொருள்: அடுத்தல்–கிட்டல். கடுத்தல்–சினத்தல்.

72. அவையறிதல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, தான் பேசுகிற சபையினுடைய அந்தஸ்து அறிந்து பேசுகிறது.

152. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று
(718)

பொருள்: என்றது, படிச்சவர்களுமாய்க் கேட்ட சாஸ்திரங் களைக் கண்டுபிடிக்கத் தக்கவர்களுமா யிருக்கிறவர்களுடைய சபை யிலே, ஒருவன் சாஸ்திரத்தோடே பேசுகிறதுந் தற்சுவாபமாய் வளரு கிற பயிர் நிக்கிற பாத்தியிலே தண்ணீர் விடுகிறது மொக்கு மென்ற வாறு.

விளக்கம்: தற்சுவாபமாய் வளருகிற பயிர் தண்ணீர் விட்டாப் போலே மிகவும் வளருமென்பது போலே, அந்தச் சபையிலே இருக் கிறவர்களுடைய கல்வி படித்தவன் சாஸ்திரத்தோடே பேசுகிற தைக் கேட்டால் மிகவும் வளருமென்பதாகையி லப்படிப்பட்ட சபையிலே சாஸ்த்திரத்தோடே பேசுகிறது சபைக்குப் பிரியமுமாய்ப் பிரயோசனமுமா யிருக்குமென்பது கருத்து.

சொற்பொருள்: உணர்தல்–படித்தல். முற்–முன். வளர்வதன்– வளரும் பயிருடைய. நீர்–தண்ணீர். அற்று–உவமைச்சொல்.

73. அவையஞ்சாமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, எந்த ஆஸ்தானத்திலேயானா லும் பயப்படாமல் பேசுகிறது.

153. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு
(726)

பொருள்: என்றது. வீரிய மில்லாதவர்க்கு வாளுண்டாயிருக் கிறதிலே பிரயோசன மென்ன? படிச்சவர்களுடைய சபைக்கு அஞ்சு கிறவனுக்கு(ச்) சாஸ்திரங்களைப் படிச்சதினாலே பிரயோசன மென்ன வென்றவாறு.

விளக்கம்: தயிரியத்தோடே வாளாட மாட்டாதவன் சேவுகத்துக்கான மனுஷனல்ல வென்றதுபோலப், படிச்ச சாஸ்திரத்தைப் பயமில்லாம லெந்தச் சபையிலேயும் காண்பிக்க அறியாதவன் மந்திரித் தொழிலுக் கானவனல்ல வென்பது கருத்து.

சொற்பொருள்: என்–என்ன? வன்கண்–வீரம். அல்லார்க்கு–அல்லாதவர்களுக்கு. நூல்–கல்வி நூல். என்–என்ன? அவை–சபை. நுண்ணவை–நுண்ணிய சபை. அஞ்சுபவர்க்கு–அஞ்சுகிறவர்களுக்கு.

154. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்

(727)

பொருள்: என்றது, மாற்றானுக்கு நடுவே வீரிய மில்லாத கையுள்ளவன் பிடித்த வொளிவான வாட்குச் சரியாயிருக்கும் சபைக்கு நடுவே அஞ்சுகிறவன் படித்த சாஸ்திர மென்றவாறு.

விளக்கம்: வாள் பெலத்ததா யிருந்தாலும் அதைப் பிடித்தவனுடைய பயத்தினாலே யுதவா தென்பது போல, மந்திரிபடிப்பிலே மிஞ்சினவனா யிருந்தாலு மவனுக் கது தன் பயத்தினா லுதவா தென்பது கருத்து.

சொற்பொருள்: பேடி–அலி. ஒள்வாள்–ஒளியுள்ள வாள். அகத்து–உள்ளே. அவை–சபை.

பொருள்பால்

அங்கவியல்

இயல் கருத்து: அஃதாவது, ராசாங்கத்துக்கு வேண்டிய குணங்கள்.

74. நாடு

அதிகாரக் கருத்து: அஃதாவது, நாட்டுக்கு வேண்டிய குணம்.

155. ஆங்கமைந் தெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு

(740)

பொருள்: என்றது, நாட்டின் மேலே சொன்ன நன்மைகள் பொருந்துதலை யுடைத்ததா யிருந்தாலும் அரசரோடே பொருந்து தலை யில்லாதேபோனால் பிரயோசன மில்லாத நாடென்றவாறு.

விளக்கம்: இந்த அதிகாரத்திலே இதுக்கு முன்னே நாட்டுக்கு வேண்டியதாகச் சொல்லப்பட்ட நன்மைகளெல்லாம் ஒரு நாட்டுக் குண்டானாலும் அந்த நாட்டில் குடிகளுக்கு மரசனுக்கும் ஒருமை யில்லாதே போனால் அதிலே குடிகள் நிக்க(த்) தக்கதில்லை யென்கிறதினால் அந்த நன்மைகளெல்லாம் பிரயோசனஞ் செய்யா தென்பது கருத்து.

சொற்பொருள்: ஆங்கு-அவ்விடம். அமைவு - பொருந்தல். எய்தல்-அடைதல். கண்ணும்-இடத்திலேயும். பயன்-பிரயோசனம். இன்று-இல்லை. வேந்து-ராசா. அமைவு-மேவுதல்.

75. அரண்

அதிகாரக் கருத்து: அஃதாவது, கோட்டைக்கு வேண்டிய குணம்.

156. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்

(750)

பொருள்: என்றது, ஒரு கோட்டை யெல்லாப் பெருமைகளும் உடைத்தான போது, முத்திக்கை போடுகிறவன் பேரிலே செய்ய வேண்டிய வினைகளாகிற பெருமை யில்லாதவர்கள் வசத்திலே யிருந்தால், அந்தப்பெருமைகளை உடைத்ததல்ல வென்றவாறு.

விளக்கம்: கோட்டை எத்தினை வடிப்பமா யிருந்தாலுமதைக் காக்கிற சேவுக ரிடத்திலே தயிரியமும் சாமர்த்தியமு மில்லாதே போனால் மாற்றானால் எளிசாய் பிடிபடு மென்கிறதினால், அதுக் குண்டான பெலமும் பெருமையும் பிரயோசனஞ் செய்யாதே போதே இல்லாதது போலே யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: எனை–எத்தனை. மாட்சி–பெருமை யுடைத்தது. கண்ணும்–இடத்திலேயும். மாட்சி–பெருமை. இல்லார்–இல்லாதவர்கள். கண்–இடம். இல்லாது–இல்லாதது. அரண்–கோட்டை.

76. பொருள் செயல்வகை

அதிகாரக் கருத்து: அஃதாவது, நாடுங் கோட்டையுங் கார்க்கிறதுக்கு வேண்டிய பொக்கிஷஞ் செய்கிறவகை.

157. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்லாரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு

(752)

பொருள்: என்றது, பொருளில்லாதவர்களை எல்லாரும் நிந்திப்பார்கள்; பொருளாகிற செல்வத்தை யுள்ளவர்களை எல்லாரு முசரப் பண்ணுவார்கள் யென்றவாறு.

விளக்கம்: ஒருத்தனுக் கெத்தனை நன்மை யிருந்தாலும் பொருளில்லாதே போனா லவனை யொருத்தரும் மதிக்கப்போறதில்லை. எத்தனை தின்மை யிருந்தாலும் பொருளுண்டா(னா)ல் எல்லாரும் பணிந்து அவரை யுசரப் பண்ணுகிறதினா லப் பொருளில்லாத ராசா எத்தனை நன்மைகளை யுடைத்தவனானாலும் தன் பிரசைகளையுந், தன் பகையாளிகளையுங் கீழ்ப்படுத்தத் தக்கதில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: இல்லார்–இல்லாதவர்கள். எள்ளுதல்–நிந்தித்தல். செல்வர்–செல்வமுள்ளவர்கள். செய்வர்–செம்வார்கள். இறப்பு–உயர்ச்சி.

77. படைமாட்சி

அதிகாரக் கருத்து: அஃதாவது, சீர்மை காக்கிறதுக்கு(க்) கூட்டி இருக்கும் படைக்கு வேண்டிய பெருமை.

158. ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.
(763)

பொருள்: என்றது, எலிகளுடைய படை சமுத்திரம் போலே திரளாய்க் கூடி ஆரபாரஞ் செய்கிற யிடத்திலே அதுகளுக்குப் பகையா யிருக்கிற பாம்புக்கு என்ன பொல்லாப்பு வரும்? பாம்பு உயிரோடே யிருக்குதென்று கண்டா லந்தப் படை யெல்லாந் தெரிச்சுப்போ மென்றவாறு.

விளக்கம்: சாவுக் கஞ்சுகிற சேவுகருடைய படை எத்தனை பெரியதா யிருந்தாலும் சாவுக் கஞ்சாத வீரர் கொஞ்சப்பேரானாலு மெதுத்தார்களானால் அதெல்லாம் நில்லா தென்ப தாகையில், கூட்டத்தைப் பார்க்கப் படைக்கு வீரியம் நல்ல தென்பது கருத்து.

சொற்பொருள்: ஒலித்தல்–ஆரபாரஞ் செய்தல். கால்–காலம். என்–என்ன? ஆம்–ஆகும். உவரி–சமுத்திரம். நாகம்–பாம்பு. உயிர்த்தல்–வாய்விடல்.

159. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்
(770)

பொருள்: என்றது, ஒரு படை எதிராளிக்கு முன்னே நிக்கத் தக்க வீரரை யுடைத்ததினால் பெருமையா யிருந்தாலும், அதுக்குத் தலைவன் ஒருவனில்லாத விடத்திலே அந்தப் பெருமை இல்லா தென்றவாறு.

விளக்கம்: தளத்துக்குத் தயிரிய முள்ள சேவுகருண்டானாலுந் தளகர்த்த னில்லாதபோனால் ஒண்ணுஞ் செவைப்படமால் அந்த தயிரிய மாகிய பெருமை யுதவாததினா லிருந்தாலு மில்லாதுபோலே இருக்குமென்ப தாகையில் எந்தப் படைக்கானாலுந் தலைவன் வேணுமென்பது கருத்து.

சொற்பொருள்: நிலைமக்கள்–நிக்கத்தக்க மனுஷர். உடைத்து–உடைத்தது. எனினும்–ஆனாலும். தானை–படை. தலைமக்கள்–தலைவர். இல்–இல்லாத. வழி–இடம். இல்–இல்லாதது.

78. படைச்செருக்கு

அதிகாரக் கருத்து: அஃதாவது, படைக்கு வேண்டிய வீரியமும் போராடுகிறதுக்குச் சமையங்கண்ட இடத்திலே பூரிப்புமாகிய சேவுகத் திராணி.

164. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு

(791)

பொருள்: என்றது, சினேகம் பண்ணுகிறவர்களுக்குச் சினேகம் பண்ணினதுக்குப் பிறகு, பிரிந்து போறது அரிதாயிருக்கிறதினாலாராய்ந்து பாராமல் பண்ணின சினேகத்துக்கு மிஞ்சின கேடில்லையென்றவாறு.

விளக்கம்: நல்லவ னொருவ னாகாதவனோடே சினேகம் பண்ணினதுக்குப் பிறகு, அவனைவிட்டுப் பிரிகிறதுக்கு மனசு வராது. ஆனா லவனோடே பழகப் பழக அவனு மாகாதவனாய்ப் போவான். ஆனபடியினாலப் பொல்லாதவனாய்(ப்) போறதைப் பார்க்க மிஞ்சின கேடில்லாதபோதே ஒருத்தனுடைய குணங்களை யாராயாமல் அவனோடே சினேகம் பண்ணலாகா தென்பது கருத்து.

சொற்பொருள்: நாடல்–ஆராய்தல். நட்டல்–சினேகம் பண்ணுதல். நட்பு–சினேகம். ஆளுபவர்–ஆளுகிறவர்கள்.

165. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்

(797)

பொருள்: என்றது, உண்டானவனா யிருக்கிற ஒருவனோடே சினேகம் பண்ணினதே யுண்டானா லவனுடைய சினேகத்தை விட்டுப் பிரிகிறது சேதமல்ல, வெகு ஆதாய மென்றவாறு.

விளக்கம்: சண்டாளருக்கு வேண்டிய துன்பங்கள் வருகிறதினா லவனோடே கூடியிருக்கிறவன் தானு மதுகளை யனுபவிக்க வேண்டியதாகையால், அவனைப் பிரிந்தால், அத் துன்பங்க ளில்லாதபடியினா லவனுடைய சிநேகத்தை யிழந்து போறது வெகு நன்மை என்பது கருத்து.

சொற்பொருள்: ஊதியம்–இலாபம். பேதையார்–அறிவில்லார். கேண்மை–சிநேகம். ஒரீஇ–ஒருவி. ஒருவுதல்–விடுதல். விடல்–விடுதல்.

81. பழைமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, பழைய காலத்தைத் தொட்டு நடக்கிற சினேகத்தைப் பத்திச் சினேகிதனுடைய குற்றங்களை மனசிலே வையாம லிருக்கிறது.

166. அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.
(807)

பொருள்: என்றது, மெய்யான பட்சத்தின் முகாந்திரமாக வந்த சினேகத்தை யுள்ளவர்கள் தங்களுக்குப் பொருளழிவு வருத்தி விக்கிற காரியத்தை(ச்) சினேகிதன் செய்தாலு மவன் மேலே பட்சத்தை விடார்க ளென்றவாறு.

விளக்கம்: பழைய காலத்தைத்தொட்டு நடக்கிற சினேகம் உறவைப்பார்க்க நன்மை செய்கிறதினா லந்த நன்மையைப் பத்தி ஒருத்தனா லொருத்தனுக்குப் பொருள் சேதம் வந்தாலும் பழைய சினேகிதம் இந்தக் குற்றத்தையு மனசிலே வைக்க அறியாது என்பது கருத்து.

சொற்பொருள்: அழி–அழிவு. செயினும்–செய்தாலும். அன்பு–பட்சம் அறார்–விடார்கள். வழி–காரணம். கேண்மையவர்–பட்ச முடையார்.

82. தீ நட்பு

அதிகாரக் கருத்து: அஃதாவது, கேடு செய்யுஞ் சினேகந் தவிர்க்கிறது.

167. கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு
(819)

பொருள்: என்றது, சொல் வேறே சினேகம் வேறே யுள்ள மனுஷரோடே சினேகம் பண்ணக் கினாவிலேயும் நினைக்க லாகாது தென்றவாறு.

விளக்கம்: அவனை நம்பப்படாமையைப் பத்தியும் அவனிடத்திலே மெய்யான பட்சமில்லாமையைப் பத்தியும் அவனைத் தவிர வேணு மென்பது கருத்து.

சொற்பொருள்: கனவு–நித்திரை. இன்னாது– பொல்லாப்பு–மன்னோ–அசைச்சொல். வினை–செயல். வேறுபடல்–வேற்றுமை படல். தொடர்பு–சினேகம்.

83. கூடா நட்பு

அதிகாரக் கருத்து: அஃதாவது, மனசோடே கூடாத சினேகி தத்தைத் தவிர்க்கிறது.

168. சொல்வணக்க மொன்னார்கட் கொல்லற்க
வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்
(827)

பொருள்: என்றது, அம்பெய்த லென்கிற பொல்லாப்புச் செய்கிறதுக்காக வேண்டி வில்லை வளைக்கிறதினால் அரசன் தன்னுடைய பகைவர் பேச்சிலே காண்பிக்கிற வணக்கத்தை நம்ப வேண்டா மென்றவாறு.

விளக்கம்: வில்லுப்போலே பகைவர் அரசனுக்குப் பொல்லாப்புச் செய்ய வேணுமென்கிறதைக் குறித்து வணக்கமான சொல்களைப் பேசுகிறதினா லவர்களுடைய பணிவை நம்பலாகா தென்பது கருத்து.

சொற்பொருள்: ஒன்னார்-பகைவர். கண்-இடம். கொள்ளற்க-கொள்ளவேண்டாம். வில்-வில்லு. தீங்கு-பொல்லாப்பு. குறித்த மையான்-குறித்ததினால்.

84. பேதைமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, மிலேச்சத்தனமாகிய அறிவிலாமை.

169. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்
(833)

பொருள்: என்றது, வெட்கப் படவேண்டிய காரியத்திலே வெட்கப்படாமலும், ஆராய்ந்து பார்க்கவேண்டிய காரியங்களை ஆராயாம லிருக்கிறதும் யெல்லாரோடேயும் பட்சமும் எண்ணமு மில்லாமல் பேசுகிறதுங் கார்க்க வேண்டிய தென்னுங் கார்க்காம லிருக்கிறதும் அறிவில்லாத வர்களுடைய தொழி லென்றவாறு.

விளக்கம்: மிலேச்சர் பாவத்துக்கு மீனத்துக்குஞ் சங்கோஷப் படாததினால் தன் கருமங்களை யாராயாமல் செய்கிறதினால், பிறத்தியாரோடே பட்சத்தினால் தன் சாதி முறைமையுங் கல்வியு மானமுங் காக்காததினால் அந்த நாலு காரியமு மிலைச்சத் தனத்தினுடைய லட்சணமா இருக்குமென்பது கருத்து.

சொற்பொருள்: நாணுதல்-வெட்கப்படுதல். நாடல்-ஆராய்தல். நார்-(பா)சம். இன்மை-இல்லாமை. பேணல்-காத்தல். பேதை-அறிவில்லான்.

170. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குணர்த்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(834)

பொருள்: என்றது, மனம், வாய், சரீரம் அடங்கிறதுக் கேதுவாகிய சாஸ்திரங்களைப் படித்தும், அந்த அடக்கத்தினால் வருகிற நன்மையு மறிந்து மற்றவர்களுக்குஞ் சொல்லிக் காண்பித்துந் தானடங்காமல் போறது யென்ற பேதைபோலே லோகத்திலே பேதையரில்லை என்றவாறு.

விளக்கம்: நல்லொழுங்காய் நடக்க வேண்டியதுக்கு ஞாயமும் நல்லொழுக்கத்தின் பலனையு மறியாததினால் தாறுமாறாய் நடக்கிற பேதையன் அதெல்லாம் படித்துத் தன்னுடைய பேதமை நீக்கலாம். அதெல்லாமறிந்து மத்தவர்களுக்கும் கற்பித்துத் தானொழுங்காய் நடக்காத பேதையனுக்குத் தன்னுடைய பேதமை நீக்கிறதுக் கவகாச மில்லை. ஆனபடியினாலிந்தப் பேதமைதலையான பேதமை என்பது கருத்து.

சொற்பொருள்: ஓதல்-படித்தல். உணர்தல்-அறிதல். பிறர்-பிறத்தியார். உரைத்தல் - சொல்லுதல். அடங்கா – அடங்காத. பேதமை–அறிவில்லாமை. பேதையார்–அறிவிலார். இல்–இல்லை.

85. புல்லறிவாண்மை

அதிகாரக் கருத்து: அஃதாவது, கொஞ்சப்புத்திக் காரனா யிருந்தும் புத்திமான்களுடைய புத்தி கேளாம லிருக்கிறது.

171. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது

(843)

பொருள்: என்றது, அறிவில்லாதவர்கள் தாங்கள்தானே தங்களுக்குச் செய்கிற கேடுகளை யவர்களுடைய பகைவருக்கும் அவர்களுக்குச் செய்கிறது எளிதல்ல வென்றவாறு.

விளக்கம்: அறிவில்லாதவர்களுடைய பகைவர் அவர்களுக்கு ஒரு பொல்லாப்புச் செய்ய வேணுமானால், அதுக்கேத்த காலமும் இடமும் பார்த்துக் கொண்டு செய்கிறதே யல்லாமல், நினைத்த நேரத்திலேயு மிடத்திலேயும் செய்யமாட்டார்கள். அறிவில்லாதவர்க ளானால் ஒருத்தருடைய புத்தி கேளாததினால் அவர்களுக்கு அவசியமாய் வருகிற பாவங்களும் ஈனமுந் தரித்திரமும் எக்காலத்திலேயும் யெவ்விடத்திலேயும் வருகிறதினால் பிறத்திப்பட்ட பகைவரைப்பார்க்கத் தாங்கள்தானே தங்களுக்குக் கொடுமையான பகைவர் என்பது கருத்து.

சொற்பொருள்: அறிவிலார்-அறிவில்லாதவர்கள். பீழித்தல்-துன்பஞ் செய்தல். பீழை-துன்பம். செறுவர்-பகைவர்.

86. இகல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, மனதின் விரோதம்.

172. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து

(856)

பொருள்: என்றது, தனக்கு வெறுப்பா யிருக்கிறவர்களுக்கு விரோதத்தை நினைக்கிறதிலே மிஞ்சுகிறது தனக்கு நன்மை யென்று நினைக்கிறவனுடைய உயிர்வாழ்க்கைக் குறைப்படுதலு முழுதிலுங் கெட்டுப் போகுதலுங் கொஞ்ச நேரத்துக்குள்ளே யாகு மென்றவாறு.

விளக்கம்: ஒருவன்மே லொருவன் வைத்த வர்மத்தை விடாம லிருக்கிறது தனக்கொரு சிலாக்கியம் போலே தோத்துதானால் அவனை மேன்மேலும் வர்மிச்சு விரோதம் பண்ணிக்கொண்டு வருகிறதினாலேயும் அவனு மிவனுடைய உபத்திரவந் தீர்ந்துபோற துக்கு வேண்டிய உபாயம் பண்ணுவா னென்கிறதினாலேயுங் கொஞ்சநேரத்துக் குள்ளே இவனுக்குப் பொருள் சேதமும் உயிர்ச் சேதமும் வருமென்பது கருத்து.

சொற்பொருள்: இகல்-மனத்தின் வெறுப்பு. மிகல்-மிகுதல் இனிது-இன்ப முடைத்தது. தவல்-குறைதல். நணித்து-நெருக்க முடைத்தது. கெடல்-கெடுதல்.

173. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்

(855)

பொருள் என்றது, ஒருத்தன்மேல் விரோத மனசிலே கண்ட யிடத்திலே அதுக் குள்படாமல். அதைத் தவிர்த்து நடக்க வல்ல மையா யிருக்கிறவர்களை வெல்லவேணு மென்று நினைப்பா ரில்லை யென்றவாறு.

விளக்கம்: விரோதத்துக்கும் வர்மத்துக்கு மிடங் கொடுக் காதவன் எல்லாருக்கும் நன்மையாய் நடக்கிறதினா லவனை வெல்லவு மவனுக்குப் பொல்லாப்புச் செய்யவும் நினைக்கத்தக்க வர்க ளில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: இகல்-மனத்தின் வெறுப்பு. ஒழுகல்-நடத்தல். வல்லானை-வல்லமை யுள்ளவனை. யார்-ஆர். மிகல்-மிகுதல். ஊக்கல்-நினைத்தல். தன்மையவர்-குணமுடைத்தவர்.

87. பகைமாட்சி

அதிகாரக் கருத்து: அஃதாவது. பேதமையினாலேயுங் குற்றங் களினாலேயும் எளிசாய்த் தோர்வை படத்தக்க குணத்தை யுடைய வர்களைப் பகைக்கிறது.

174. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான்
பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது
(865)

பொருள்: என்றது, ஒருவன் பெரியவர்கள் கற்பித்த நீதி வழி யைப் பாரான், தனக்குப் பலன் கொடுக்கத்தக்க நீதித் தொழிலைச் செய்யான், அது செய்யாததினால் தனக்கு வரு மீனத்தைப் பாரான், நற்குணங்களை யில்லாதான், இப்படிப்பட்டவனைப் பகைக்கிறது அவனுடைய பகைவருக்கு இன்பமா யிருக்கு மென்றவாறு.

விளக்கம்: அப்படிக்கொத்தவன், தானே அழிந்துபோறபடி யினாலேயும், அவனைச் செயிக்கிறது வெகு எளிசா யிருக்கிறதுனா லேயும் அவனைப் பகைக்கிறவர்களுக்குச் சந்தோஷத்தை வருத்தி வைப்பா னென்பது கருத்து.

சொற்பொருள்: வழி-முறைமை. வாய்த்தல்-பெறுதல். பழி-குற்றம். பண்பு-குணம். இலன்-இல்லாதவன். பற்றார்-பகைவர். இனிது-இன்பமுடைத்தது.

88. பகைத்திறந் தெரிதல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, பகைவரை யழிக்கிற வகை ஆராய்தலுமாம்; பகைக்கத் தக்கவர்க ளாரென்று ஆராய்தலுமாம்.

175. வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை
(872)

பொருள்: என்றது, தன்னிலையு மிஞ்சின வீரமுள்ளவர் களோடே பகை கொண்டாலும், வாசாலகரோடே பகை கொள்ள வேண்டா மென்றவாறு.

விளக்கம்: அரசன், தன்னைப்பார்க்க பெலத்த அரசனைப் பகைக்கிறது கெட்டுப் போறதுக்கு வழிதானே; ஆனால் காலமு மிடமும் பார்த்துச் செய்தால், தப்பிச்சுக் கொள்ளலாம். குட்சத்தி னாலேயும் பேச்சு வல்லமையினாலேயும் சீர்மைக் காரியங்கள் நடத்துகிற மந்திரிகளோ வென்றா லரசனைப் பேச்சினாலேயும்

உபாயங்களினாலேயுங் கெடுக்க வேணுமானா லவனுக்குத் தப்பிப் போறதுக்கு அவகாச மில்லை என்பதாகையில் வீரரை யொரு சமயத்திலே பகைத்துக் கொள்ளலாம்; பேச்சுத் தொழில் பண்ணு கிறவர்களை ஒருக்காலும் பகைக்க லாகாது என்பது கருத்து.

சொற்பொருள்: வில்லேருழவர்-வீரர். கொளினும்-கொணடா லும். கொள்ளற்க-கொள்ளவேண்டாம். சொல்லேருழவர்-மந்திரிகள்.

176. இளைதாக முண்மரங் கொல்லுங் களையுநர்
கைகொள்ளுங் காழ்த்த விடத்து

(879)

பொருள்: என்றது, முள் மரத்தை எளசா யிருக்கிறபோது களையவேணும்; முற்றிப்போன விடத்திலே அது தான் தன்னைக் களைகிறவர்கள் கையைத் தைக்குமென்றவாறு.

விளக்கம்: முள்ளுச் செடி முளையா யிருக்கிறபோது, எளி சாய்ப் பிடுங்கலா, முத்தினதுக்குப் பிறகு பிடுங்குறது அரிதா யிருக் கிறதுந் தவிர, பிடுங்கிறவனைக் காயப்படுத்து மென்றதுபோல் அரசன் தன் பகைவன் பெலனில்லாத தருவாயிலே அவனை அடக்க வேணும், அவனைப் பெலக்கவிட்டு அடக்கப்போனால் அவன் தன்னை யடக்கப் போனவனைத் தானே கெடுப்பானென்பது கருத்து.

சொற்பொருள்: இளைது-இளையது. முண்மரம்-முள்ளுமரம். கொல்லுதல்-கெடுத்தல். களையுநர்-களைகிறவர்கள். காழ்த்தல்-முத்துதல்.

89. உள் பகை

அதிகாரக் கருத்து: அஃதாவது, பிறத்தியிலே காண்பியாமல் உள்ளே யடக்கி யிருக்கிற பகை.

177. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி

(887)

பொருள்: என்றது, ஒரு சிமிழ் தன்னுடைய மூடியோடேஇசைந் திருகிறாப் போலே தங்களுக்குள்ளே இசைவு காண்பித்தாலும் மெய்யாகவே இசைய மாட்டார்கள், உட்பகை யுள்ள குடியிலே இருக்கிறவர்களென்றவாறு.

விளக்கம்: சிமிழுடைய மூடி சிமிழோடே ஒன்றா யிருக்கி றாப் போலே காண்பித்தாலும், உள்ளே பொருத்த மில்லாததி னால், சிமிழ் வேறே மூடி வேறாக இருக்கும். அப்படிப்போலே,

ஒரு குடியில் உள்பகை இருந்துதானா லதிலுண்டான பேர்களுக் குள்ளே கண்டவர்களுக்கு வேற்றுமை தெரியாதே போனாலு மனதி னுடைய பொருத்த மில்லாததினால் வேற்றுமை உண்டா மென்பது கருத்து.

சொற்பொருள்: புணர்ச்சி – கூடுதல். உட்பகையுற்ற – உள் பகை பெற்ற.

178. அரம்பொருதப் பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி

(888)

பொருள்: என்றது, அரமானது இரும்போடே பொருதி அத்தைத் தேயப் பண்ணு மதுபோல ஒரு குடியி லுண்டான உள்பகை அதோட பொருதி அதின் மேல் அத்தை குறையப் பண்ணு மென்றவாறு.

விளக்கம்: ஒருத்த னொருத்தனோடே சேராமலும் ஒருத்தன் போற போக்கிலே ஒருத்தன் போகாமலும் பொருள் சம்பாதிக்கிற துக்குஞ், சம்பாதிச்சதை யழியாதபடிக்குக் காக்கிறதுக்கும் அவகாச மில்லாததினால் குடியின் பெலந் தெரிஞ்சுபோ மென்பது கருத்து.

சொற்பொருள்: பொருதல்–போராடல். உரம்–பெலம். உட் பகையுற்ற–உள்பகைபெற்ற.

179. உடன்பா டில்லாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று

(890)

பொருள்: என்றது, ஒரு குடியில் ஒருமை யில்லாதவர் களுடைய வாழ்தலும், மொரு குச்சுக்குள்ளே பாம்போடே கூட வாழ்தலு மொக்கு மென்றவாறு.

விளக்கம்: ஒரு குச்சுக்குள்ளே பாம்போடே கூட வாழுகிற வனுக்குப் பாம்பால் மோசம் வருகிறது நிலவரமா யிருக்கிறாப் போலே, ஒரு குடியிலேதானே உள்பகை யிருந்துதானால், உள் பகை யுள்ளவன் எப்போதும் விரோதமும் விஷமும் பண்ணிக் கொண்டு வருகிறபடியினாலேயும், அவனைத் தள்ளப்படாததி னாலேயும் குடிக்குக் கேடு வருகிறது தப்பாது யென்பது கருத்து.

90. பெரியாரைப் பிழையாமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, பெரியவர்களுக்குக் குறை செய்யாம லிருக்கிறது.

180. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாற்
பேரா விடும்பை தரும்

(892)

பொருள்: என்றது, பெரியவர்களை யவமதித்துக் கொண்டு நடந்தால், பெரியவர்களால் தானே ஒருக்காலும் நீங்காத துன்பம் வரு மென்றவாறு.

விளக்கம்: தன்னைப்பார்க்கப் பெலத்தவர்களை அவமதித்தால் அவர்கள் தன்னை யவமதித்தவனை ஒருக்காலுந் தலை எடுக்காத படிக்குக் கெடுத்துப் போடுவார்கள்; ஞானத்தில் பெரியவர்களை யவமதித்தால் அவர்களுடைய சாபத்தின் பொல்லாப்பு அவர்களை யவமதித்தவனைச் சாகுமளவுந் துடர்ந்துகொண்டு நிற்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: பெரியாரை–பெரியவர்களை. பேணல்–மேவல். ஒழுகல்–நடத்தல். பேரா–நீங்காத. இடும்பை–துன்பம்.

181. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்

(896)

பொருள்: என்றது, தீயினாலே சுடப்பட்டாலும் பிழைக்கலாம். பிழைக்கமாட்டார்கள் பெரியவர்களை யவமதித்து நடக்கிறவர்க ளென்றவாறு.

விளக்கம்: தீ யுடம்பிலே படுத்தின காயம் உயிருக்குச் சேதம் வருத்திவிய்யாதபடிக்கு உபாயம் பண்ணலாம்; அருந் தவத்தோருடைய சாபத்துக்குத் தப்பிவித்துக் கொள்ளுகிறதுக்கு உபாய மில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: எரி–நெருப்பு. படினும்–பட்டாலும். உய்வ–உய்தல். உயிர்–வாழ்தல். பிழைத்தல்–குறைசெய்தல். ஒழுகுதல்–நடத்தல்.

91. பெண்வழிச் சேறல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, தன் பெண்சாதிக் கேவல் செய்கிற குணம்.

182. பெண்ணேவல் செய்தொழு மாண்மையி
னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து

(907)

பொருள்: என்றது, பெண்சாதிக் கஞ்சி வெட்கமில்லாம லவளுடைய வார்த்தை எல்லாங் கேட்டுக்கொண்டு நடக்கிற ஆண்பிள்ளையைப் பார்க்க, வெட்கமுள்ள பெண்பிள்ளை பெரியவளென்றவாறு.

விளக்கம்: ஆண்பிள்ளைக் குரிய குணம் ஆண்மை; பெண்பிள்ளைக் குரிய குணம் நாணம்; ஆனபடியினால், பதங்கெட்ட பொன்னைப் பார்க்க, பதங்கெடாத வெள்ளி நல்லதுபோலே ஆண்தன்மை யில்லாத ஆண்பிள்ளையைப் பார்க்க பெண்தன்மையுள்ள பெண்பிள்ளை பெரியவளென்பது கருத்து.

சொற்பொருள்: ஒழுகல்-நடத்தல். ஆண்மை-ஆண்டன்மை. நாணம்-வெட்கம். உடைத்து-உடைத்தது.

183. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார் கணில்

(909)

பொருள்: என்றது, பெண்சாதிக்(கு)க் கீழ்ப்படிந்து நடக்கிறவனிடத்திலே புண்ணியமான செயல்களுஞ், சிறப்பான பொருள்களுமிதுக்குப் பிறத்திப்பட்ட இன்பங்களை யனுபவித்தலும், இம்மூன்றுமில்லை என்றவாறு.

விளக்கம்: புண்ணியஞ் செய்கிறதுக்கும், பொருள் சம்பாதிக்கிறதுக்கும், இன்பங்களை யனுபவிக்கிறதுக்கும் ஏதுவாகிய தொழில்களைச் செய்கிறதுக்கும் வேண்டிய ஆண்தன்மை யில்லாதபடியினால் அம்மூன்று காரியமும் அவனிடத்திலே யுண்டாக மாட்டாதென்பது கருத்து.

சொற்பொருள்: அறம்-புண்ணியம். வினை-செயல். ஆண்ட-பெருமையுள்ள. கண்-இடம். இல்-இல்லை.

92. வரைவின் மகளிர்

அதிகாரக் கருத்து: அஃதாவது, மனுஷருடைய அளவு பாராமல் தானு மளவோடே செய்யாமல் பொருள்களைக் கொடுக்கிறவர்களெல்லாருக்குந் தன்னை விக்கிற ஸ்திரி.

184. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்

(915)

பொருள்: என்றது, புத்தியி னல்லதனத்தா லாகிற பெருமையுள்ள அறிவுடையார், பொருள் கொடுக்கிறவர்களெல்லோருக்கும்

பொதுவா யின்பஞ் செய்கிற வேசிகளுடைய இங்கிஷமான இனத்தைத் தொடமாட்டார்க ளென்றவாறு.

விளக்கம்: அறிவுள்ளவர்கள் பொதுவான பெண்ணிடத்திலே பொருள் மேலே யல்லாமல், பொருள் கொடுக்கிறவன் பேரிலே பட்சமில்லை யென்று கண்டுபிடிக்கிறதினா லவர்கள் வழியாக போகத்தக்கதில்லை யென்பது கருத்து.

சொற்பொருள்: பொதுநலத்தார்–வேசிகள். புல்–இகழ்ச்சிக் குறிப்பு. நலம்–அழகு. தோய்தல்–கலத்தல். மதி–புத்தி. மாண்ட–பெருமையுள்ள. அறிவினவர்–அறிவுள்ளவர்கள்.

185. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு

(920)

பொருள்: என்றது, ஒருமனதா யிராமல் வெவ்வேறே மனுஷர் மேலே மனசு வைக்கிற பெண்ணுங், கள்ளுஞ், சூது, மிம்மூன்றும் லட்சுமியால் வெறுக்கப்பட்ட மனுஷரை(த்) தேடித் தொடரு மென்றவாறு.

விளக்கம்: அம் மூன்று காரியங்களிலே தலைவைத்தவர்களுக்குச் செல்வ மழிந்து வேண்டிய துன்பங்கள் வருகிறதினால் செல்வத்தைக் கொடுக்கிற லட்சுமியால் சினேகிக்கப்பட்ட பேர்களைத் தொடராம லவள்வெறுத்துக் கைவிட்ட மனுஷரைத் தேடித் தொடரு மென்பதினால், செல்வமா யிருக்க வேணுமானா லந்த மூன்றுந் தொட லாகாதென்பது கருத்து.

சொற்பொருள்: கவறு – சூது. திரு – இலக்குமி. தொடர்பு–சினேகம்.

93. கள்ளுண்ணாமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, லாகிரியான வஸ்துக்களைத் தவிர்க்கிறது.

186. கையறியாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்

(925)

பொருள்: என்றது, ஒருவன் தனக்குடம்பறியாமைப் பொருள் கொடுததுக் கொள்ளுகிறதினால் வரும் ஈனத்தை யறியாமை யுடைத்தவ னென்றவாறு.

விளக்கம்: அறிவுள்ளவன் தன் னுடம்பறியாதே போறதென் கிற காரணத்தினால் வெகு ஈனம் வருமென் றறிந்திருக்கிறதினால் அந்த உடம்பறியாமைக் கேதுவான லாகிரியான வஸ்துக்களை விலைக்கிக் கொள்ளத்தக்கதில்லை என்பதாகையில் லாகிரியான வஸ்து பொருள் கொடுத்து வாங்கிறது பேதையருடைய தொழி லென்பது கருத்து.

சொற்பொருள்: கையறியாமை - அறியாமை. உடைத்து- உடைத்தது. மெய்-உடம்பு. கொளல்-கொள்ளுதல்.

187\. துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்

(926)

பொருள்: என்றது, தூங்கிறவர்கள் செத்தவர்களுக்குச் சமானங, கள்ளுக் குடிக்கிறவர்கள் நஞ்சு தின்றவர்களுக்குக் கெக் காலமும் ஒத்ததா யிருப்பார்க ளென்றவாறு.

விளக்கம்: தூக்கஞ் சாவினுடைய சாயலைக் கொண்டிருக்கி றதினால் தூங்கிறவர்கள் செத்தவர்களுக்கு ஒப்பாரானால் மனுஷ னெப்போதுந் தூங்க மாட்டா னென்கிறதினால் எக்காலமுஞ் செத்த வனோ டொத்தவனல்லக், கள்ளுக் குடிக்கிறவனோ வென்றால், நஞ்சு தின்கிறவனை, இனிப் பிழைக்க மாட்டானென்று சொல்லி எல்லாருங் கைவிடுவார்களே, அப்படிப்போல, அறிவுடையார், கள்ளுக் குடிக்கிறவன், பேதையனாய்ப் போனா னென்றறிந்து அவனோ டொருக்காலுஞ் சேராமல் எக்காலத்துக்கு மவனைக் கைவிடுவார்க ளென்பது கருத்து.

சொற்பொருள்: துஞ்சல்-உறங்கல். எஞ்ஞான்றும்-எப்போதும். உண்பார்-உண்கிறவர்கள். உண்பவர்-உண்கிறவர்கள்.

94. சூது

அதிகாரக் கருத்து: அஃதாவது, பொருளழிக்கத்தக்க விளை யாட்டுக்களைத் தவிர்க்கிறது.

188\. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு

(932)

பொருள்: என்றது, ஒன்றைக் கொண்டு நூறு யாக்கிறதுக்கு ஏதுவான சூதினால் புண்ணியஞ் செய்கிறதுக்குஞ் செல்வமா யிருக் கிறதுக்கும் ஒரு வழி உண்டாகுமோ? உண்டாக மாட்டா தென்றவாறு.

விளக்கம்: சூதாடுகிறவர்கள், ஒரு விசை கெலித்து ஒன்று கைக்கு வந்தாப்போலே, இனிமேலுங் கெலித்து வேண்டியது சேர்க்கலா மென்கிற ஆசையினால் சூது விடமாட்டார்க ளதிலே ஒரு விசை கெலித்து, நூறு விசை தோத்துப்போய் வேண்டிய பொருள் போக்கடிப்பார்கள். ஆசையினால் கைக்கு வாறது கொஞ்சங், கைவிட்டு(ப்) போறது ரொம்ப. இப்படிப்பட்ட சூது தரித்திரத்தைக் கொண்டுவிடுகிறது நிலவரமாகையில் அதினால் தர்மங்களைச் செய்கிறதுக்கும் இன்பமான செல்வங்களை யனுப விக்கிறதுக்கும் வழி யடைபட்டுப் போமென்பது கருத்து.

சொற்பொருள்: செய்தல்-பெறல். இழக்கும் – இழந்துபோம். கொல்-வினாச்சொல். நன்று–நன்மை. ஆறு–வழி.

95. மருந்து

அதிகாரக் கருத்து: அஃதாவது, சரீரத்தின் ஆரோக்கியத்தைக் காப்பாத்துகிற மருந்தின் திறம்.

189. மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு

(945)

பொருள்: என்றது, வேற்றுமைப்படாத உணவை மனசை வெறுத்து உண்டால் உயிருக்குத் துன்பங்கள் வராதென்றவாறு.

விளக்கம்: வேற்றுமையாவது பித்த சரீரத்துக்குப் பித்தமான பண்டங்க ளாகா தென்றதினால் அவனவன் சரீரத்துக்குப் பண்டங்க ளேறாமையும் எக்காலமுஞ் சீரணத்துக்கு ஆகாததினால் சாப்பிடுகிறதுக்குக் கால மேறாமையும் தேனும் நெய்யுங் கூட்டி யுண்டால் விஷமா யிருக்கிறதினால் ஒரு பண்டம் மொருபண்டத் தோடே சேராமையு மிந்த மூன்று வேற்றுமை யில்லாமல் சாப்பிட் டால், ரொம்பச் சாப்பிடவேணு மென்கிற ஆசையை வெறுத்து மனசு விரும்புகிற அளவைக் குறைத்துச் சாப்பிட்டால் வியாதிகளுக் கிடமில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: மாறுபாடு–வேற்றுமை. உண்டி – சாப்பாடு. மறுத்தல்-வெறுத்தல். உண்ணின்–உண்டால். ஊறுபாடு–துன்பம்.

ஒழிவியல்

இயல்கருத்து: அஃதாவது, முன் சொல்லப்பட்ட மூன்று பிரிவிலே அடங்காமல் ஒழிந்த காரியங்களுடைய குணங்கள்.

96. குடிமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, உசந்த கோத்திரத்தாருடைய சிறப்பும் அவர்களுக்கு வேண்டிய குணங்களுமாம்.

190. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து

(957)

பொருள்: என்றது, உசந்த கோத்திரத் தாருடைய குற்றங்கள் வானத்திலே யுசந்து நிற்கும் சந்திரனுடைய மாசு போலே எல்லாருக்குந் தெரியப்படு மென்றவாறு.

விளக்கம்: பெரிய குலத்தாருடைய செய்தி யெங்கும் பேச்சாய் இருக்கிறதினால் அவர்களிடத்திலே குற்றம்மிருந்தா லெங்குமடிபட்டுப் போம். ஆனபடியினால் மத்தவர்களைப் பார்க்க அதிகமான எச்சரிக்கை யோடே குற்றங்களைத் தவிரவேணும் என்பது கருத்து.

சொற்பொருள்: குடிப்பிறந்தார்–உசந்த குலத்தார். கண்–இடம். விசும்பு–வானம். மதி–சந்திரன். மறு–மாசு. கண்–இடம்.

97. மானம்

அதிகாரக் கருத்து: அஃதாவது, தன்னந்தஸ்துக் கேறாத காரியங்களைச் செய்யாம லிருக்கிறதுக் கேதுவான ரோசம்.

191. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை

(964)

பொருள்: என்றது, உசந்த கோத்திரத்தார் தன்னந்தஸ்திலே நில்லாமல் அதுக்குத் தாழ்வாய் நடந்தால் தலையிலே யிருந்து விழுந்த முடிகளைப் போலொத்தவர்க ளென்றவாறு.

விளக்கம்: தலைமுடிகளைத் தலையிலே நிக்குமட்டும் எல்லாரு மலங்கரிப்பார்கள்; அது விழுந்த இடத்திலே எல்லாராலு மிதிக்கப்படும் போலே உசந்த கோத்திரத்தார் தன்னை தன்னந்தஸ்திலே நி(னச்சா) எல்லாராலும் மதிக்கப்படுவார்க ளென்பதாகையில் உசந்த நடத்தைக ளில்லாதே போனால், உசந்த பிறப்பு பிரயோசனஞ் செய்யாது என்பது கருத்து.

சொற்பொருள்: இழிதல்–இறங்குதல். அனையர்–உவமையுடைத்தவர்கள். மாந்தர்–மனுஷர். கடை–இடம்.

98. பெருமை

அதிகாரக் கருத்து: அஃதாவது. பெருமை யுண்டாகிற காரணங் களு மதை யழிக்கிற காரணங்களுமாம்.

192. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வாச்
செய்தொழில் வேற்றுமை யான்

(972)

பொருள்: எல்லா மனுஷருக்கும் ஒரே பிறப்பு; ஆனா லொருவனுக் குண்டான சிறப்பு ஒருவனுக்கு இல்லை. அவனவன் செய்கிற தொழில் வேற்றுமையினா லென்றவாறு.

விளக்கம்: ஒரு மரத்தின் கிளைகள் கிளைத்த காலத்தைத் தொட்டு மிருக்கிற இடத்தைத் தொட்டும் வளர்ந்த சிலத்தியைத்தொட்டும் தங்களுக்குள்ளே வேற்றுமையா யிருந்தாலும் வேரொண்ணா யிருக்கிறதினால், அதெல்லாத்துக்கு மொரே பிறப்பு வென்கிறது போல மனுஷருக்குள்ளே ஒருத்தனு(சந்)த தொழில் செய்கிறதினாலேயும் வோறாருத்தன் நீசமான தொழில் செய்கிறதினாலேயும், ஒருத்தனுக் குண்டான சிறப்பு ஒருத்தனுக் கில்லாதே போனாலும் யெல்லாரு மாதித் தகப்பன் வயத்துப் பிள்ளைகளா யிருக்கிறதினால் அவர்களுக்கு ஒரே பிறப்பல்லாமல் அவர்களுக்குள்ளே உசந்த பிறப்புந் தாழ்ந்த பிறப்பு மில்லை; ஆனா லொருத்தன் செய்கிற தொழில் ஒருத்தன் செய்யாததினாலே ஒருத்தனுக் குண்டான பெருமையும் எண்ணமு மொருத்தனுக்கில்லை யென்பதாகையில் சாதி வேற்றுமையெல்லாஞ் செய்கிற தொழிலினால் வருமே யல்லாமல், பிறப்பினால் வராது.

இது தவிர, உசந்த தொழிலாலும் நடக்கைகளாலும் பெருமை யுண்டாகிறதே யல்லாமல் பிறப்பினா லுண்டாகா தென்பது கருத்து.

193. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்
(973)

பொருள்: என்றது, மேல்சாதியிலே பிறந்தும், மேலுத்தியோகங்களி லிருந்தும் நடக்கைகளினால் பெருமை இல்லாதவர்கள், மேல் மனுஷரல்லக், கீழ் சாதியிலே பிறந்தும் நிசமான ஸ்தலத்திலே இருந்தும் நடக்கைகளுடைய கீழ்மை இல்லாதவர்கள் கீழ்மனுஷரல்ல வென்றவாறு.

விளக்கம்: முத்துச் சேத்துலே கிடந்தாலும் முத்துத்தானே; சேறு முத்துலே கிடந்தாலும் சேறுதானே, அப்படிப்போல, நடக்கைகளால் பெருமையுள்ளவன் கீழ்சாதியிலே பிறந்தாலும் கீழ் தலத்திலே யிருந்தாலு மேல் மனுஷந்தானே. நடக்கைகளால் கீழ்மையையுடைத்தவர்கள் உசந்த சாதியிலே பிறந்தாலும் உசந்த ஸ்தலத்திலே இருந்தாலும் கீழ்மனுஷர்தானே யென்பதாகையில், உசந்த நடக்கைக ளில்லாதபோதே சாதிப் பெருமையும் உத்தியோகத்தின் பெருமையும் உதவாதென்பது கருத்து

சொற்பொருள்: அல்லார்–அல்லர்; அல்லாதவர்கள்.

99. சான்றாண்மை

அதிகாரக் கருத்து: அஃதாவது, எல்லா நற்குணங்களாலும் நிறைந்து அதுகளை ஒருக்காலும் விடாம லிருக்கிறது.

194. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்
(986)

பொருள்: என்றது, எல்லா நற்குணங்களையு முள்ள சான்றாண்மை அறிகிறதுக்கு உரைகல்லு யெதென்றால், தனக் கொப்பில்லாதவர்களிடத்திலேயுந் தோர்வையை ஏத்துக்கொள்ளுகிற தென்றவாறு

விளக்கம்: ஒருத்தன் தன்னிலையும் பெலத்தவனால் வெல்லப்பட்டால் தோர்வை ஏத்துக்கொள்ளுகிறாப்போலே தன்னில் யெளியாரை(த்) தாழ்த்துகிறதுக்கு ஞாய முண்டானாலும் அப்போவுந் தான் தோத்துப்போறாப்போலே பொல்லாப்பில்லாமல் அவர்களை விட்டால் சான்றாண்மைக்கு லட்சணமா யிருக்கும். பிலத்தவர்களுக் கடங்கி எளியாரைத் துன்பப் படுத்துகிறது சான்றாண்மைக்கு லட்சணமல்ல என்பது கருத்து.

சொற்பொருள்: சால்பு–சான்றாண்மை. கட்டளை–உரைகல். யாது–எது? எனில்–என்றால் தோல்வி–தோர்வை. துலை–ஒப்பு.

அல்லார்-அல்லாதவர்கள். கண்ணும்-இடத்திலேயும். கொளல்-கொள்ளுதல்.

100. பண்புடைமை

அதிகாரக் கருத்து: அஃதாவது. எல்லா நற்குணங்களையும் விடாமலிருந்து அதுக்கு(த்) தக்கது நடக்கக் கருத்துள்ளவனா யிருக்கிறது.

195. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று

(1000)

பொருள்: என்றது, நற்குண மில்லாதவன் செல்வங், கலையத்தின் குற்றத்தினால் கெட்டுப்போற நல்ல பாலுக் கொக்குமென்றவாறு.

விளக்கம்: பால் நல்லதா யிருந்தாலும் சில விசை கலையத்தின் முகாந்திரமாக விஷமாய்ப் போம். அப்படிப்போல நற்குண மில்லாதவனுடைய செல்வம் அவன் செய்கிற தீவினைகள் முகாந்திரமாக அவனுக்குச் செல்வமா யிராமல், துன்பமா யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: பண்பு-குணம். இல்லான்-இல்லாதவன். நன்பால்-நல்லபால். தீமை-குற்றம். திரிதல்-வேறுபடல். அற்று-உவமைச் சொல்.

101. நன்றியிற் செல்வம்

அதிகாரக் கருத்து: அஃதாவது, பிரையோசனஞ் செய்யாத செல்வம்.

196. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்

(1005)

பொருள்: என்றது, மத்தவர்களுக்குக் கொடுக்காதவன், தானுந் திங்காதவன், கோடி திரவியம் வைச்சிருந்தாலும் அதெல்லா மில்லாதவனென்றவாறு.

விளக்கம்: லோபிக்குக் கோடி திரவிய முண்டானாலுந், தனக்கு மற்றவர்களுக்கு முதவாதபடியினா லிருந்தாலும், மில்லாதது போலே இருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: *[சுவடியில் விடுபட்டுள்ளது]*

197. நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று

(1008)

பொருள்: என்றது, ஒருத்தராலேயும் விரும்பப்படாதவனுடைய செல்வம் உள்ளூரிலே பழங்களால் நிறைந்த நஞ்சுள்ள மரத்துக் கொக்கு மென்றவாறு.

விளக்கம்: ஊருக்கு நடுவே யிருக்கிற எட்டி மரம் பழங்களால் நிறைந்திருந்தாலு மதுகள் திங்கிறதுக் குதவா தென்றறிந்து, அதை யொருத்தரும் விரும்பித் தேடப் போறதில்லை. அப்படிப்போல, லோபியினுடைய செல்வம் பிறத்தியாருக் குதவாதென் றறிகிறதினால் ஒருத்தராகிலு மவனைத் தேடத் தக்கதில்லை, அவனோடே பிரியமாய்(ப்) பேசத்தக்கதில்லை என்பது கருத்து.

சொற்பொருள்: நச்சுதல்–விரும்புதல். நச்சுமரம் – நஞ்சுள்ள மரம். அற்று–உவமைச் சொல்.

102. நாணுடைமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, ஆகாத காரியத்துக்கு வெட்கப் படுகிற நாணத்தையுடையனா யிருக்கிறது.

198. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு

(1012)

பொருள்: என்றது, தீனி யுடைமையு மத்த உடைமையும் எல்லா வுயிர்களுக்கும் பொதுவா யிருக்கும்; நாணத்தினுடைமை மனுஷருக்கு விசேஷ மென்றவாறு.

விளக்கம்: மனுஷரே யல்லாமல் மிருகங்கள் நாணம் அறியாது என்பதாகையால், நாணமில்லாதவன் மிருகத்துக் கொத்தவ னென்பது கருத்து.

சொற்பொருள்: ஊண்–தீனி. உடை–உடைமை. எச்சம்–மிஞ்சின பொருள். நாண்–வெக்கம். மாந்தர்–மனுஷர். சிறப்பு–விசேஷம்.

103. குடிசெயல் வகை

அதிகாரக் கருத்து: அஃதாவது, குடி யுசரப் பண்ணுகிற வகை.

199. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.

(1028)

பொருள்: என்றது, தன் குடியைப் பிலத்துப்போகப் பண்ண வேணுமென்று விரும்புகிறவனுக்குப் பருவம் பார்க்கப் படாது; இதன்றியே சோம்பலா யிருந்து மானமான நினைவுகளை நினைத் தால் குடி கெட்டுப்போ மென்றவாறு.

விளக்கம்: இப்போ மழை பெய்யுது, வெயி லெரிக்குது, பனிப் பேயுது என்னத்துக் கவதிபடப் போறேனென்று சொன்னால், என் குடியிலே வேண்டியது இருக்குது என்னத்துக்கு அதிகமான பிரயாசைப் படுகிறேனென்று சோம்பலா இருந்தால், யென் குடி யனேகம் பேர்களுக்கு இன்பஞ் செய்யவே நான் துன்பப்படுவானே னென்கிற பெருமையான விசாரங்களுக் கிடங் குடுத்தால் குடி மேன் மேலும் மெலிந்து போமென்பதாகையில், இடைவிடாமல் பிரயா சைப்படாதே போனால், குடி பெலக்காதென்பது கருத்து.

சொற்பொருள்: செய்வார் – செய்கிறவர்கள். மடி–சோம்பல். கருதல்–நினைத்தல்.

104. உழவு

அதிகாரக் கருத்து: அஃதாவது, ஏர்த்தொழில் செய்கிற வகை.

200. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்

(1037)

பொருள்: என்றது, ஒருபலம் புழுதி கால் பலமாகக் காயப் பண்ணினால் ஒரு பிடியளவிலேயும் யெருப் போடத் தேவை யில்லை; பயிர் மிகுதியாய் விளையு மென்றவாறு.

விளக்கம்: எருப் போடுகிறதைப் பார்க்க அனேகம் விசை நிலத்தை யுழுகிறது நல்லது என்பது கருத்து.

சொற்பொருள்: தொடி–ஒருபலம். கஃசு–காற்பலம். உணக்கில்– உணத்(தின)ால். பிடித்து–ஒருபிடி கொண்டது. சாலுதல்–மிகுதல்.

105. நல்குரவு

அதிகாரக் கருத்து: அஃதாவது, தரித்திரஞ் செய்கிற துன்பம்.

201. நெருப்பினுட் டுஞ்சலு மாகும் நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது
(1049)

பொருள்: என்றது, நெருப்பிலே யானாலு மதியினாலது சுடாதபடிக்குப் பண்ணித் தூங்கலாம்; தரித்திரமானால் சத்தானாலுங் கண் (மூடா) தென்றவாறு.

விளக்கம்: தரித்திரம் நெருப்பைப் பார்க்க(க்) கொடியது என்பது கருத்து.

சொற்பொருள்: துஞ்சல்–உறங்கல். நிரப்பு–தரித்திரம். கண்படு–நித்திரை.

106. இரவு

202. இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி
(1060)

பொருள்: என்றது, பிட்சை கேழ்க்கிறவன் பிட்சை கொடாதவர்களைக் கோபித்துக்கொள்ளாமல் இருக்க வேண்டியது; கோபிக்கிறதுக்கு ஞாயமில்லை யென்று ஒப்பிவிக்கிறதுக்குத் தான் படுகிற தாரித்திரத்தின் துன்பத்திலேதானே ஒரு சாட்சி அமையுமென்றவாறு.

விளக்கம்: தனக்குச் சம்புவிக்கிறாப் போலே மற்றவர்களுக்குச் சம்புவித்து வேண்டிய சமையத்திலே பொருளுதவாதே போமென்று நினைத்தால், ஒன்றுங் குடுக்காதவர்களைக் கோபித்து(க்) கொள்ளுகிறதுக்கு ஞாயமில்லை என்று கண்டு, பொறுமையோடே போகவேண்டிய தென்பது கருத்து.

சொற்பொருள்: இரப்பான்–யாசகம் பண்ணுகிறவன். வெகுளாமை–கோப மில்லாமை. வேண்டும்–வேணும். நிரப்பு–தரித்திரம். இடும்பை–துன்பம். சாலுதல்–அமைத்தல். கரி–சாட்சி.

107. இரவச்சம்

அதிகாரக் கருத்து: அஃதாவது, மானத்தைக் கெடுக்கிற யாசகத்தைத் தவிர்க்கிறது.

203\. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று

(1067)

பொருள்: என்றது, யாசகம் பண்ணுகிறவர்களை எல்லாரையும் பிட்சை கேட்பேன், "நீங்கள் யாசகம் பண்ணினால் தங்களுக்குள்ள பொருளை மறைக்கிறவர்க ளிடத்திலே யாசகம் பண்ண வேண்டா" மென்று சொல்லி, யென்றவாறு.

விளக்கம்: [சுவடியில் விடுபட்டுள்ளது]

சொற்பொருள்: இரப்பன்-இரக்குவன். இரப்பின்-இரந்தால். கரப்பார்-மறைக்கிறவர்கள். இரவன்மின்-இரவ வேண்டாம்.

108. கயமை

அதிகாரக் கருத்து: அஃதாவது, சண்டாளருடைய குணம்.

204\. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்

(1073)

பொருள்: என்றது, தேவருக்கு ஒப்பாயிருக்கிறார்கள் சண்டாளர், தாங்களும் தாங்கள் விரும்பினதெல்லாஞ் செய்துகொண்டு நடக்கிறதினா லென்றவாறு.

விளக்கம்: தேவன் என்னத்தைச் செய்யவேணுமென்று நினைத்தாலும் உடனே யொரு விக்கினமு மில்லாமல் செய்து முடிக்கும். அப்படிப்போல், சண்டாளர் யென்னத்தை நினைத்தாலும், ஆனதானாலு மாகாத தானாலும் பாவமென்று மீனமென்றும் பாராமல் எல்லாந் தடையில்லாமல் செய்து முடிக்கிறார்கள் ளென்கிற உவமையினால் பரிகாசமாய் அவர்களைத் தேவருக்குச் சரியென்றான் என்பது கருத்து.

சொற்பொருள்: அனையர்-உவமை யுடைத்தவர்கள். கயவர்-கீழ் மக்கள். மேவுதல்-விரும்புதல். ஒழுகல்-நடத்தல்.

205\. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு

(1077)

பொருள்: என்றது, சண்டாளருடைய குடுமியை நெரிக்கிறதுக்குக் கை வளைக்க அறியாதவர்கள், சண்டாளரைப் பார்த்துச் சோறுண்டு ஈரமாயிருக்கிற கையிலே ஒட்டி யிருக்கிற பருக்கைகளை

உதறிப் போட்டுத் தரவேணு மென்று கெஞ்சினாலும், சண்டாளர் அவர்களுக்கு உதிர்க்கத்தக்கவர்க ளல்ல வென்றவாறு.

விளக்கம்: சண்டாளர் நல்லதனமாய்க் கேழ்க்கிற பேர்களுக்கு ஒன்றுங் கொடுக்கார்கள். பொல்லாத்தனமாய்க் கேழ்க்கிற பேர் களுக்கு யெல்லாங் கொடுக்கிறார்கள் ளென்பது கருத்து.

சொற்பொருள்: [சுவடியில் விடுபட்டது]

206. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(1078)

பொருள்: என்றது, பெரியவர்க ளிடத்திலே தன் னவசரத்தைச் சொன்னால் உடனே யிரங்கி யுதவி செய்வார்கள். சண்டாள ரிடத் திலே கரும்பு போலே நன்றாய் நறுக்காதே போனால், சாரமிறங்கத் தக்கதில்லை என்றவாறு.

விளக்கம்: இதுக்கு முன் சொன்ன கருத்துத்தான்.

சொற்பொருள்: பயன்-பிரயோசனம். சான்றோர்-அறிவுடை யார். கொல்லல்-அடித்தல். கீழ்-கீழ் மக்கள்.

காமப்பால்

இயல் கருத்து: அஃதாவது, காமத்தின் பேரிலே பாடுகிற பங்கு.

109. நாணுத்துறவுரைத்தல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, காமத் தொழில் செய்கிற பேர்கள் நாணத்தை விட்டுப் போறதுக் கேதுவாகிய பேச்சுக்களைச் சொல்லுதல்.

207. காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை.
(1134)

பொருள்: என்றது, காம மென்கிற அகோரமான சமுத்திரம் நாணமுந் துணிவு மென்கிற ரெண்டு தெப்பத்தையும் பிடித்துக் கொண்டு போ மென்றவாறு.

விளக்கம்: நாணமுந் துணிவும் என்னைக் காமக் கடலிலே அழுந்திப் போகாதபடிக்கு ரெண்டு தெப்பம் போலே காத்துக் கொண்டிருக்கு மென்கிற நினைவிலே சாரமில்லை. காமக் கடலிலே அடிவைத்தால், அந்த ரெண்டு முடனே போயிடு மென்பதாகையில் காமக் கடலிலே இறங்காமல் தூரமா யிருக்கவேணுமே யல்லாமல் அதிலே அடிவைத்தால் அவசியமாய் (யழுந்தி)ப் போவானென் பது கருத்து.

சொற்பொருள்: புனல்-வெள்ளம். உய்த்தல்-செலுத்தல். நாண்-நாணம். நல்லாண்மை-துணிவு. புணை-தெப்பம்.

110. அலரறிவுறுத்தல்

அதிகாரக் கருத்து: அஃதாவது, ஆவலாதி ஆச்சென் றறிவு வருத்திவித்தல்.

208. நெய்யா லெரிநுதுப்பேனென்றற்றாற் கவ்வையாற்
காம நுதுப்பே மெனல்
(1148)

பொருள்: என்றது, நெய்யூத்தி நெருப்பை யவிப்போ மென் கிறதும் ஆவலாதி யாச்சுது யென்றறிவித்து ஒருவனுடைய காமத்தை யவிப்போ மென்கிறதுஞ் சரி யென்றவாறு.

விளக்கம்: நெருப்பிலே நெய்யூத்தினால் அதிகமா யெரியும் மல்லாமல் அவியாது; அப்படிப்போல, காமத் தொழிலிலே தலை வைத்தவனுக்கு ஆவலாதி யாச்சுதென் றறிவித்தால் அதினால் காம மென்கிற நெருப்பு அவியாமல், யென் காரிய மெங்கும் அடி பட்டுப் போச்சென்று நாணம் போயிடுகிறதினால் முன்னிருந்த ரகசியமும் எச்சரிக்கையும் விட்டுப்போட்டு மனசின் படியே அந்தத் தொழில் செய்கிறதுக்கும் காம மென்கிற நெருப்பு மேன்மேலும் பெலத்துப் போறதுக்கும் ஏதுவா யிருக்கு மென்பது கருத்து.

சொற்பொருள்: நுதுத்தல்—அவித்தல். எரி—நெருப்பு. அற்று—உவமைச்சொல். கவ்வை—ஆவலாதி. எனல்—எனவேண்டாம்.

பதிப்பு முறை

[எண் - இவ் வெண்ணுள்ள குறள் அல்லது அதன் உரைப் பகுதியைக் குறிக்கும்]

வ. எண்.	சுவடிப்பாடம்	திருத்திய பாடம்	குறள் வ. எண்
1.	புஸ்பம்	புஷ்பம்	26
2.	விருந்தாடி	விருந்தாளி	26
3.	பிறையோசனம்	பிரயோசனம்	29
4.	பாத்தால்	பார்த்தால்	29
5.	குலைபாதகம்	கொலை பாதகம்	31
6.	அதைப்பத்தி	அதைப்பற்றி	31
7.	பிறியம்	பிரியம்	33
8.	நிக்கும்	நிற்கும்	40
9.	குத்தங்களுக்குள்ளே	குற்றங்களுக்குள்ளே	47
10.	அற்தமாகும்	அர்த்தமாகும்	48
11.	நிக்குமட்டும்	நிற்குமட்டும்	52
12.	துடர்ந்து	தொடர்ந்து	52
13.	தற்ம	தர்ம	54
14.	யிருக்குறது	யிருக்கிறது	57
15.	செயிகிறார்கள்	செய்கிறார்கள்	60
16.	சுற்றமாய்	சுத்தமாய்	61
17.	ஏராத	ஏலாத	64
18.	வளக்கவும்	வளர்க்கவும்	66
19.	வாக்கினால்க் காணப்படும்	வாக்கினாற் காணப்படும்	70
20.	நிற்செயம்	நிச்சயம்	73
21.	காண்பிக்குது	காண்பிக்கிறது	78
22.	துடந்துகொண்டு	தொடர்ந்து கொண்டு	81
23.	அற்தமாகும்	அர்த்தமாகும்	84
24.	சொல்களை	சொற்களை	89

25.	படிப்பிக்க	படிக்க	90
26.	உவமச்சொல்	உவமைச்சொல்	95
27.	பொல்லாதது வென்றவாறு	பொல்லாதது யென்றவாறு	96
28.	மேல்ச்சாதியிலே	மேல்சாதியிலே	97
29.	சிறேஸ்தருடைய	சிரேஷ்டருடைய	98
30.	யேராமல்	யேறாமல்	112
31.	காக்காய்	காக்கை	115
32.	ஆத்தாம	ஆற்றாமை	127
33.	முதல்க்கொண்டு	முதல்கொண்டு	130
34.	செயிதியை	செய்தியை	131
35.	ரண்டகம்	இரண்டகம்	139
36.	நல்லது வென்றவாறு	நல்லது யென்றவாறு	139
37.	ரண்டு	இரண்டு	139
38.	குடுத்து	கொடுத்து	141
39.	ஏராத	ஏலாத	142
40.	எத்தினம்	எத்தனம்	147
41.	அஞ்சு	ஐந்து	147
42.	மாத்தானுக்கு	மாற்றானுக்கு	154
43.	பிறிகிறது	பிரிகிறது	165
44.	இருக்குறவர்கள்	இருக்கிறவர்கள்	173
45.	இடங்குடுக்காதவன்	இடங்கொடுக்காதவன்	173
46.	தெற்பத்தையும்	தெப்பத்தையும்	207

கருவி நூற்கள்

1. இன்னாசி, சூ., இலக்கணச் சிந்தனைகள், சென்னை, 1984.

2. சுவடி எண் டி. 160, திருக்குறள் உரையுடன் (வீரமாமுனிவர் தொகுப்பு), அ. கீ. சு. நூலகம், சென்னை–5.

3. சுவடி எண் ஆர். 1727, திருக்குறள் வீரமாமுனிவர் உரையுடன், அ. கீ. சு. நூலகம், சென்னை–5.

4. ஞானப்பிரகாசம் சுவாமிகள், ஆர்., பதி., கித்தேரியம்மாள் அம்மானை, மதுரை, 1947.

5. ஞானப்பிரகாசம், வி. மி., வீரமாமுனிவர் அருளிய'திருக்குறள் இலத்தீன் மொழி பெயர்ப்பு, பாளையம்கோட்டை, 1977.

6. தண்டபாணி தேசிகர், ச., திருக்குறள் உரைக்களஞ்சியம் (பாயிர வியல்), மதுரை, 1981.

7. பட்டுச்சாமி ஓதுவார், தி., பதி., திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், திருப்பனந்தாள், 1938.

8. பரந்தாமனார், அ. கி., மதுரை நாயக்கர் வரலாறு, சென்னை–1960.

9. Besse, L. Fr. Berchi, His Times & His Writings, Trichy, 1918.

10. Gnanaprakasam, V. M. Contribution of Fr. Beschi to Tamil, Unpublished Thesis, Madras University, 1965.

11. Pope, G. U. The Sacred Kurral, New Delhi, 1985.

12. Taylor, W. Catalogue of Mackenzie MSS., Madras 1857-62, vol. III. Part II.

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

அறத்துப்பால்

வரிசை எண்	குறள்	குறள் எண்	பக்க எண்
1.	அஃகாமை	178	28
2.	அகர முதல	1	6
3.	அகழ்வாரைத்	151	25
4.	அமிழ்தினும்	64	16
5.	அருட்செல்வம்	241	34
6.	அவாவில்லார்க்	368	47
7.	அவ்வித்தழுக்காறு	167	27
8.	அறத்தான் வருவதே	39	12
9.	அறத்தினூஉங்	32	10
10.	அறனாக்கம்	163	27
11.	அறனியலான்	147	24
12.	அழிவினுளெல்லாம்	203	30
13.	அன்பிலார் எல்லாம்	72	18
14.	அன்பிற்கும் உண்டோ	71	17
15.	அன்பின் வழிய	80	18
16.	அன்பும் அறனும்	45	14
17.	அன்றறிவாம்	36	11
18.	ஆற்றுவார் ஆற்றல்	225	32
19.	இருள்சேர் இருவினை	7	5
20.	இல்லதென் இல்லவள்	53	14
21.	இனிய உளவாக	100	19
22.	ஈதல் இசைபட	231	32
23.	ஈன்ற பொழுதிற்	69	17
24.	உண்ணாது	160	26
25.	உயிருடம்பின்	330	42
26.	உள்ளத்தால் உள்ள	282	38

27.	உறங்குவது போலும்	339	44
28.	எப்பொருள் எத்	335	46
29.	எல்லார்க்கும் நன்றாம்	125	22
30.	ஒத்தறிவான்	214	31
31.	ஒருபொழுதும்	337	43
32.	ஒறுத்தார்க்கு	156	26
33.	கணைகொடிதி	279	37
34.	கண்ணின்றுக	184	29
35.	களவினால் ஆகிய	283	39
36.	கற்றதனாலாய	2	6
37.	காமம் வெகுளி	360	46
38.	குடம்பை தனித்	338	43
39.	குணமென்னுங் குன்றேறி	29	10
40.	குழலினிதி	66	16
41.	கொல்லான் புலாலை	260	34
42.	கொன்றன்ன	109	21
43.	கோளில் பொறியியற்	9	8
44.	சிறைகாக்குங்	57	16
45.	சிற்றின்பம்	173	27
46.	சுடச்சுடரும்	267	35
47.	சுவையொளி	27	9
48.	செய்யாமற் செய்த	101	20
49.	தலைப்பட்டார்	348	45
50.	தவஞ்செய்வார்	266	35
51.	தவமறைந்து	274	37
52.	தற்காத்துத்	56	15
53.	தனக்குவமை இல்லா	7	7
54.	தன்னெஞ்சறியது	293	39
55.	தன்னைத்தான் காக்கின்	305	40
56.	தீயவை செய்தார்	208	30
57.	தீயவை தீய	202	30
58.	தீயினாற் சுட்ட புண்	129	23
59.	துப்பார்க்குத் துப்பாய	12	9
60.	துறந்தார்க்குந் துவ்வா	42	13
61.	தெய்வம் தொழாசுள்	55	15
62.	தென்புலத்தார்	43	13
63.	தோன்றிற்புக	236	33
64.	நகையும் உவகையும்	304	40

65.	நன்றிக்கு வித்தாகும்	138	23
66.	நன்றிமறப்பது	108	20
67.	நன்றேதரினும்	113	21
68.	நாளென ஒன்று	334	43
69.	நில்லாதவற்றை	331	42
70.	நிறையுடைமை	154	25
71.	நோயெல்லாம்	320	41
72.	பகைபாவம் அச்சம்	146	24
73.	பயனில் சொற்	196	29
74.	பயன்தூக்கார்	103	20
75.	பற்றிவிடாஅ	347	44
76.	பற்றுக பற்றற்றான்	350	45
77.	பிறர்க்கின்னா	319	41
78.	பிறன்பழி கூறுவான்	186	28
79.	புறந்தூய்மை	298	39
80.	மழித்தலும் நீட்டலும்	280	38
81.	மனத்துக்கண்	34	11
82.	மோப்பக் குழையும்	90	18
83.	யாகாவாராயினும்	127	22
84.	வகுத்தான் வகுத்த	377	48
85.	வலியில் நிலைமையான்	273	36
86.	வறியார்க்கொன்று	221	31
87.	வானுயர் தோற்றம்	272	36

பொருட்பால்

88.	அகலாதணுகாது	691	79
89.	அஞ்சுவது அஞ்சாமை	428	56
90.	அடுத்தது காட்டும்	706	80
91.	அரங்கின்றி	401	51
92.	அரம்பொருத	888	95
93.	அல்லற்பட்டு	555	67
94.	அழக்கொண்ட	659	76
95.	அழிவந்த	807	89
96.	அளவளாவில்	523	64
97.	அறவினையும்	909	97
98.	அறிவில்லார் தாம்	843	91
99.	அறிவுடையார் ஆவ	427	55
100.	ஆக்கமுங் கேடும்	642	75

101.	ஆங்கமை வெய்திய	740	83
102.	இகலின் மிகலின்	856	92
103.	இகலெதிர் சாய்ந்	855	92
104.	இடிக்குந்துணையாரை	447	58
105.	இடிபுரிந்து	607	71
106.	இணரூழ்த்தும்	650	75
107.	இரப்பன் இரப்பாரை	1067	108
108.	இரப்பான் வெகுளாமை	1060	107
109.	இருமனப் பெண்டிர்	920	98
110.	இல்லாரை	752	84
111.	இழுக்கல் உடையுழி	415	53
112.	இளைதாக	879	94
113.	இறந்த வெகுளியிற்	531	65
114.	இறைகடியன்	564	68
115.	இன்பம் விழையான் வினை	615	71
116.	இன்மையின் இன்னாது	558	68
117.	இன்னாமை இன்பம்	630	73
118.	ஈர்ங்கை	656	76
119.	ஈன் றாள்பசி	1077	108
120.	உடம்பாடிலாதார்	890	95
121.	உணர்வதுடையோர்	718	81
122.	உருவுகண் டெள்ளாமை	667	77
123.	உள்ளமுடைமை	592	70
124.	உறினுயிர்	778	86
125.	ஊணுடை	1012	105
126.	ஊதியம் என்ப	797	88
127.	எண்ணித்துணி	467	59
128.	எரியால் சுடப்	896	96
129.	எவ்வதுறைவ	426	55
130.	எனைத்தானும்	416	54
131.	எனைமாட்சித்	750	83
132.	எனைவகையாற்	514	63
133.	ஒலித்தக்கால்	763	85
134.	ஒற்றொற்றித்	588	69
135.	ஒன்றெய்தி	932	99
136.	ஓதியுணர்ந்தும்	834	91
137.	கடலோடா	496	62
138.	கண்ணுடையர்	393	50

139.	கல்லாதவரும்	403	52
140.	கற்க கசடறக்	391	50
141.	கனவினும்	819	
142.	காக்கை கரவா	527	65
143.	காட்சிக் கெளியன்	386	49
144.	குடிசெய்வார்க்கில்லை	1028	106
145.	குடிப்பிறந்தார்	957	89
146.	குணம் நாடிக்	504	63
147.	குறிப்பிற் குறிப்புணர்	703	80
148.	கேட்பினும் கேளா	418	54
149.	கையறியாமை	925	98
150.	கொக்கொக்க	490	62
151.	கொடுப்பதூஉம்	1005	104
152.	கொலையிற்கொடி	550	66
153.	சலத்தாற் பொருள்	660	76
154.	சால்பிற்குக்	986	103
155.	சூழ்வார்கண்	445	57
156.	செப்பின் புணர்ச்சி	887	94
157.	செவிகைப்பச்	389	49
158.	சொல்லப்பயன்	1078	109
159.	சொல்லுதல் யார்க்	674	77
160.	சொல்வணக்கம்	827	90
161.	தலையின்இழிந்த	964	101
162.	தன்குற்றம் நீக்கிப்	436	56
163.	தினைத்திணையாங்	433	59
164.	துஞ்சினார் செத்தாரின்	926	99
165.	தேவர் அனையர்	1073	108
166.	தொட்டனைத்தூறும்	396	51
167.	தொடிப்புழுதி	1037	106
168.	நகுதற் பொருட்டன்று	784	87
169.	நச்சப்படாதவன்	1008	105
170.	நல்லார்கட்	408	53
171.	நன்றாற்றலுள்	469	60
172.	நாடாது நட்டலிற்	791	88
173.	நாடோறும் நாடுக	520	64
174.	நாணாமை நாடாமை	833	90
175.	நிலத்தியல்பால்	452	59
176.	நிலைமக்கள்	770	85

177·	நிறை நீர நீரவர்	782	86
178.	நுண்மாணுழை	407	52
179.	நுனிக்கொம்பர்	476	61
180.	நெருப்பினுட்	1049	107
181.	பகல்வெல்லும்	481	61
182.	பகையகத்துப்	727	82
183.	பண்ணெண்ணாம்	573	69
184.	பண்பிலான் பெற்ற	1000	104
185.	பல்லார்பகை	450	58
186.	பழுதெண்ணும்	639	74
187.	பிறப்பொக்கும்	972	102
188.	பீலிபெய்	475	60
189.	பெண்ணேவல்	907	96
190.	பெரியாரைப் பேணா	892	96
191.	பொதுநலத்தார்	915	97
192.	பொருள் கருவி	675	78
193.	பொறியின்மை	618	72
194.	மருத்தவாய்	624	73
195.	மாறுபாடில்லாத	945	100
196.	முகநக நட்பது	736	87
197.	மேலிருந்தும்	973	103
198.	மேற்பிறந்தார்	409	53
199.	வழிநோக்கான்	865	93
200.	வாளொடென்	726	81
201.	வானோக்கி வாழும்	542	66
202.	விடுமாற்றம்	689	79
203.	வியவற்க	439	57
204.	வில்லேருழவர்	872	93
205.	வெள்ளத் தனைய மலர்	595	70
206.	வேலொடு நின்றான்	552	67

காமத்துப்பால்

207.	காமக்கடும்புன	1134	110
208,	நெய்யாலெரி	1148	110

பிழை திருத்தம்

பக்கம்	பிழை	திருத்தம்
3	உாய	உரு
8	அறிகிறதுக்கறியப்	அறிகிறதுக்குப்
13	இறத்தார்	இறந்தார்
13	தெய்வம்விருந் தொக்க	தெய்வம் விருந்தொக்க
20	(28)	(101)
29	உன்னன	உன்னை
29	யிருக்கிற மென்பது	யிருக்கிறதென்பது
30	லாற்றுத்துக்குப்	லாற்றுமத்துக்குப்
32	கொக்கிறதினா	கொடுக்கிறதினா
35	கெல்லா(ந்)	ளெல்லா(ந்)
37	சிமிழ்தல்	சிமிழ்த்தல்
37	செவ்விதாய்	செவ்விதாங்
38	இழாய்	இயாழ்
40	கோப	கோபம்
51	புண்ணஎன்று	புண்ணென்று
54	சபையிலே	பையிலே
65	மகப்படடால்	மகப்பட்டால்
67	தழூத கண்ணீரென்றே	தழூதகண் ணீரன்றே
69	பண்ணெனகிறாதவது	பண்ணென்கிறதாவது
69	இரண்டாம் மிசை	இரண்டாம் விசை
69	ஓற்றெறித்	ஒற்றொற்றித்
70	ஓவேஷகாரனை	வேவுகாரனை
70	(529)	(592)
71	பேசாமல	பேசாமல்
71	ாரியத்துககுப்	காரிரியத்துக்குப்
71	துணைத்தூன்றுந்	துடைத்தூன்றுந்
76	ஈன்றான்	ஈன்றாள்
76	பசிகாண்பானாயினுஞ்	பசிகாண்பா னாயினுஞ்
76	மழப்பே	மழப்போ
76	பிறபயக்கு	பிற்பயக்கு
76	அழிக்கிற	அழிகிற
76	பிற	பிற்
76	சலச்தாற்	சலத்தாற்
77	ராசாங்கத்துக்கு	ராசாங்கத்துக்கும்
77	வறியவாஞ்	வரியவாஞ்
77	அறிதென்றவாறு	அரிதென்றவாறு
79	உத்தரர	உத்தர
80	வேண்டிதென்று	வேண்டியதென்று
84	செல்லாரை	செல்வரை
84	செம்வார்கள்	செல்வார்கள்

துறையைப் பற்றி ...

சென்னைப் பல்கலைக்கழகத்தில், தமிழ் இலக்கியத்தின் ஒரு பிரிவான கிறித்தவத் தமிழ் இலக்கியத்தைச் சிறப்பாக ஆய்வு செய்யத் தமிழக அரசால் நிறுவப்பட்ட அறக் கட்டளைத் துறையே கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை. இத் துறை ஆய்வு நூல்களை வெளியிடவும், அரிய நூல்களை வெளிக்கொணரவும் செயல்பட்டு வருகிறது. இத்துறையில் பதின்மர் பகுதி நேர, முழு நேர அறிஞர் பட்ட (Ph.D.) ஆய்வு களைச் செய்து வருகின்றனர். முழுநேர எம்.பில். (M. Phil.) வகுப்பும் நடத்தப்படுகின்றது.

நூலைப்பற்றி...

இந்நூல் கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறையின் இரண் டாம் வெளியீடாகும். திருக்குறளை இலத்தீனில் மொழி பெயர்த்த வீரமாமுனிவர், திருக்குறளில் இன்றியமையாதன வாகத் தாம் கருதியவற்றைத் தேர்ந்து இரு தொகுப்புக்களை ஆக்கியுள்ளார். அவற்றுள் ஒன்றே இவ்வெளியீடு. இதுகாறும் எவராலும் சுட்டப்படாமல் ஓலைச்சுவடியிலேயே இருந்த இந்நூல் முதன் முறையாக அச்சில் வந்துள்ளது. இதனுள் அடங்கிய குறட்பாக்களுக்கான உரை வீரமாமுனிவரால் எழுதப்பட்டது. இதுவரை வெளிவந்துள்ள திருக்குறள் உரை களுள் இஃது ஒன்றே எளியோருக்குரிய பேச்சுத் தமிழால் ஆனது. திருக்குறள் ஆராய்ச்சியுலகில் தனி இடம் பெறத் தக்கதும் வீரமாமுனிவரது விழுமிய உரை நோக்கத்தை உணரச் செய்யத் தக்கதுமாகிய சீரிய நூல்.

முதல் வெளியீடு பற்றி ...

இத்துறையின் முதல் வெளியீடாக 'வீரமாமுனிவ மாலைகள்' என்னும் நூல் வெளிவந்துள்ளது. திருவள்ளுவரது சிறப்பைப் புலப்படுத்தும் திருவள்ளுவ மாலையைப் போல, புலவர் பெரு மக்கள் வீரமாமுனிவர் ஆற்றலைப் புகழ்ந்து பாடிய பாக்களின் தொகுப்பாகும். வீரமாமுனிவர் ஆற்றலை ஒருசேர அறிதற்குத் துணையாகும் நூல்.